# பொருளியல் நோக்கு

1981
மே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை–உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டிய அவசியம்

தெங்குப் பயிர்ச்செய்கையின் கீழ் இருக்கும் ஏக்கர் பரப்பும் ஏக்கருக்கான விளைச்சலும் கடந்த பல தசாப்த காலமாக தேக்க நிலையிலேயே இருந்து வந்துள்ளன. இலங்கையில் தொடர்ச்சியாக உரமூட்டப்படும் காணிகள் ஏக்கரொன்றுக்கு 2000—3000 காய்களைப் பெற்றுக் கொடுக்கின்றன; அண்மையில் மலேசியாவிலிருந்து இங்கு விஜயம்செய்த தூதுக்குழுவொன்று அந்நாட்டில் ஏக்கருக்கான விளைச்சல் 11,500 காய்களாக இருப்பதாகத் தெரிவித்தனர். மரத்தின் உயிரியல் திறனை விருத்தியுறச்செய்வதும் சிறப்பான பசளைப் பிரயோகமும் இப் பின்னணியில் முக்கியம் பெறுகின்றன. இதே போன்று தெங்குக் காணிகளில் வேறு பயிர்களை மாற்றுப்பயிர்ச்செய்கை செய்வதும் முக்கியமாகும். இந்நிலைமையினைக் கருத்தில்கொண்டு, தெங்கு ஆராய்ச்சிப் பயிர்ச்செய்கைச் சபைகள் விருத்தி செய்யப்பட்ட இத்தகைய நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றி வருவதை இப்பக்கத்திலுள்ள படங்கள் காட்டுகின்றன.







கன்று வரிசைகளுக்கிடையில் குழி தோண்டுவதன் மூலம் புதிய கலாசார முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை வலது பக்கத்திலிருக்கும் படம் காட்டுகின்றது. (வலது மத்தி) தெங்கு ஆராய்ச்சிப் பிரிவு விஞ்ஞானிகள் புதிய பசளைப் பிரயோக முறைகளைப் பரீட்சிக்கின்றனர். (கீழே) தெங்குத் தோட்டங்களில் (வெற்றிலை, மஞ்சள், இஞ்சி) மாற்றுப் பயிர்ச்செய்கை.





மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான தென்னந் தோட்டங்கள் 1979 சூறுவளியால் அழிவுற்றன. கீழே வலது புறத்திலிருக்கும் படம் நாசத்தின் எச்சங்களைக் காட்டுகிறது; (இடது) பலகைக்காகப் பாவிக்கப்படும் தென்னை மரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 7 இதழ் 2 மே 1981

[illegible] யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி
யாழ்ப்பாணம் 23/07/1982

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா,

## நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு: மார்ச் 1981

27 கைத்தொழில்:
மின்சார உபகரணங்கள் இறக்குமதி ஏற்படுத்தியுள்ள சிக்கல்கள்

## விஷேச அறிக்கை

3 இலங்கையின் தெங்குக் கைத்தொழில்

10 தேங்காய் நுகர்வும் பழக்கம்

14 தோற்றமும் வளர்ச்சியும்

## சிறப்புக் கட்டுரைகள்

ரூபன் லோவ் 27 உங்கள் ஆயுதங்களைக் கீழே போடுங்கள்

ஸுபைதா முஸ்தபா 28 மனிதக் காரணி

பெட்சி ஹார்ட்மன், ஜேம்ஸ் பொய்ஸ் 30 தொழிலாளருக்குக் குறைந்த வேலை வசதி — பங்களாதேஷ் கிராமமொன்றிலிருந்து எழும் குரல்கள்

டோஷியோ ஹட்டஹே 33 வெள்ளம் வருமுன் அணை தேவை

## அடுத்த இதழில்

- 1980ல் இலங்கையின் பொருளாதாரம் — தடங்கல்களும், கொள்கைகளும்
- அடுத்த ஐந்தாண்டு கால பொது முதலீட்டுத் திட்டம் — சில குறிப்புக்கள்
- திறைசேரி உண்டியல்களும் பொருளாதாரமும்
- வேலையின்மை — நிச்சயமற்ற தோற்றம்

## அட்டைப் படம்

ஓவியர் நயனானந்த விஜயகுலதிலகாவின் கைவண்ணம்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

*மார்ச்*

1 சென்ற வருடம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதாசாரம், 5.6 சதவீதமாக இருந்தது என 1980ம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான ஆரம்பத் தகவல்கள் தெரிவிக்கின்றன; 1978ல் இது 8.2 சதவீதமாகவும், 1979ல் 6.2 சதவீதமாகவும் இருந்ததாக திட்ட அமுலாக்க அமைச்சினால் 1980ம் ஆண்டிற்கு வெளியிடப்பட்ட அபிவிருத்தி அறிக்கை தெரிவிக்கின்றது.

3 ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்வதற்குரிய நாட்டின் பொருளாதாரத்தின் இயலளவினை பாதிக்காதிருக்கும் வகையில், தற்போது அமுலில் உள்ள திட்டங்களின் நிதிப் படுத்தலை மீளாய்வு செய்வதற்கு அமைச்சர்கள் தமது வாராந்த கூட்டத்தில் இணங்கியதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

4 கொழும்பு தேயிலை ஏல விற்பனையில், வலஹந்துவை தொழிற்சாலையினால் தயாரிக்கப்பட்ட ஒரு தொகுதி விசேட 'சில்வர்' தேயிலை கிலோ ரூபா 3,000க்கு விற்பனை செய்யப்பட்டது; இது உலகில் விற்பனை செய்யப்பட்ட எல்லாக் காலத்திற்கும் உரிய சாதனை விலையாகும்.

4 உலக தங்கச் சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கம் 9 டொலராக வீழ்ச்சி அடைந்தது; 15 மாத காலத்திற்குள் பெறப்பட்ட அதி குறைந்த விலை இதுவாகும் என இலண்டன் செய்திகள் கூறுகின்றன.

7 உலர்த்தப்பட்ட லக்ஸ்பிரே பால் மாவின் விலை (400 கிராம்) ரூபா 10-50ல் இருந்து ரூபா 11-50 ஆக அதிகரிக்கப்பட்டது.

8 இலங்கைப் பெண்கள் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு விசேட வைபவத்துடன், இலங்கையில் முதற் தடவையாக சர்வதேச மாதர் தினம் உத்தியோகபூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

9 சென்ற வருடம் சீனா 1210 கோடி யுஆன் (இந்திய ரூபா 1,187 கோடி) வரவு செலவுத் திட்டக் குறை நிலைக்கு உட்பட்டதாகவும், இக் குறை நிலையை நிதிப்படுத்துவதற்கு அரசுக்குச் சொந்தமான வங்கிகள் பணத்தை அச்சிட நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் மக்கள் தினசரியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கை தெரிவிக்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட பற்றுக்குறையை விடவும் இது 410 கோடி அதிகம் எனவும், 1979ம் ஆண்டின் பற்றுக் குறையுடன் ஒப்பிடுமிடத்து 29 சதவீதம் குறைவாகும் எனவும் அது மேலும் தெரிவித்தது

10 ஒரு இறாத்தல் பாணின் கட்டுப்பாட்டு விலை ரூபா 2-05 இலிருந்து ரூபா 2-30 ஆகவும், ஒரு கிலோ கிராம் மாவின் விலை ரூபா 5-22 இலிருந்து ரூபா 5-50 ஆகவும் அதிகரிக்கப்பட்டது. 1979ல் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 210 கோடி மொத்த மூதலீட்டுக்கு எதிராக, இலங்கையின் வர்த்தக முயற்சிகளில் உத்தேசிக்கப்பட்ட தனியார் வெளிநாட்டு முதலீடு 1980ல் ஏறக்குறைய 398 கோடி ரூபாவாக இருந்தது. வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு, பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு என்பன சென்ற வருடம் அங்கீகாரம் வழங்கிய 182 முயற்சிகளில் இருந்து இம் முதலீடு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

90 கோடி டொலர் செலவில், 514 அறைகளைக் கொண்ட ஒரு மிதக்கும் ஹோட்டலை நிறுவுவதற்கு ஒரு உள்ளூர் சுற்றுலா நிறுவனத்திற்கும், ஒரு வெளிநாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்கும் இடையே கொழும்பில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது கொழும்பு வடக்கிற்கு அப்பால் உள்ள கடற்கரையில் நங்கூரமிடப்படும்.

நாட்டின் வலு நிரம்பலை அதிகரிக்கும் வகையில், பொருத்தப்படவுள்ள 20 மெகாவோட்ஸ் கொண்ட மூன்று வாயுப் பொறி உருளைகளில் இரண்டாவது உருளை இலங்கை மின்சார சபையினால் களனி திஸ்ஸையில் பொருத்தப்பட்டது.

11 ஒரு ஏக்கரைப் பயிரிடுவதற்கான செலவில் மூன்றில் ஒரு பகுதியை வழங்குகின்ற பழச் செய்கையாளர்களுக்குரிய ஒரு புதிய உதவித் திட்டத்தினை அரசாங்கம் அங்கீகரித்தது.

தனியார் துறையின் உதவியுடன் முகவர் தபால் நிலையங்களை நிறுவுகின்ற ஒரு முன்மொழிவுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியது.

சென்ற வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைக் குறைப்பதன் மூலம், நடப்பு நிதி ஆண்டில் அரசாங்க செலவினத்தில் கட்டுப்பாட்டினை விதிப்பதற்கு நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி ஆராய்ந்த அமைச்சரவை தீர்மானித்தது.

12 செயற்கைப் புடைவை தயாரிக்கின்ற, ரூபா 75 கோடி பெறுமதிவாய்ந்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நைலோன் ஆலை தொடக்கிவைக்கப்பட்டது.

14 இலாபம் உழைக்காத சகல மார்க்கங்களையும் முழுமையாக மூடிவிடுவதற்கு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் புதிய பணிப்பாளர் சபை தீர்மானித்து இருப்பதாக டெய்லி நிவ்ஸ் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

15 1981ம் ஆண்டிற்கான இலங்கையின் மதிப்பீடு செய்யப்பட்ட இறக்குமதிச் செலவு ரூபா 4100 கோடியாக உள்ள அதேவேளை, மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏற்றுமதி வருமானம் ரூபா 2100 கோடியாக இருப்பதாகவும், இது ரூபா 2000 கோடி வர்த்தக நிலுவைக்கு இடம் அளிப்பதாகவும் நிதி அமைச்சின் மதிப்பீடுகள் குறிப்பிடுவதாக 'சன்டே ஒப்சர்வர்' செய்தி தெரிவிக்கின்றது.

17 துபாய் வங்கி கொழும்பில் ஒரு கிளையைத் திறந்து வைத்தது. இது 1978 இலிருந்து இங்கு திறக்கப்பட்ட பத்தாவது வங்கிக் கிளையாகும்.

நாட்டின் குடித்தொகை, வீட்டுக் கணக்கெடுப்பின் இறுதி வட்டத்தில் 70,000க்கும் மேற்பட்ட கணிப்பீட்டாளர்கள் இலங்கை முழுவதும் உள்ள வீடுகளுக்கும், கட்டடங்களுக்கும் விஜயம் செய்தனர்.

18 சுற்றுலா ஹோட்டல்கள், வர்த்தக முயற்சிகள் என்பன மீதான மொத்த விற்பனை வரி தொடர்பான சட்டத்தை அறிமுகம் செய்கின்ற ஒரு முன்மொழிவுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியது.

கொழும்பிற்கு உள்ளாகவும், அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள அரசாங்க காணிகளில் ஏற்கனவே இருப்பிடங்களை அமைத்துள்ள சேரிக் குடியிருப்பாளர்களுக்கு, அக் காணிகளை குத்தகைக்கு வழங்க இருப்பதாக அமைச்சரவைத் தீர்மானம் ஒன்று தெரிவிக்கின்றது.

20 தனியார் துறையில் உள்ள இறப்பர் ஏற்றுமதியாளர்கள், ஷீட் இறப்பரை (தரங்கள் 1, 2, 3) ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிக்கப்படுவர் என வர்த்தக அமைச்சின் செய்தியொன்று தெரிவித்தது.

21 மார்ச் 17ல் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டபோது இலங்கையின் சனத்தொகை சுமார் 1 கோடியே 48 இலட்சம் ஆக இருந்ததாக உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட குடிசன மதிப்பீட்டு முடிவுகள் தெரிவிக்கின்றன. 1971 குடிசன மதிப்பீட்டின்போது சனத்தொகை 12,689,897 ஆக விருந்தது. இது 17 சதவீத சனத்தொகை அதிகரிப்பினைக் காட்டுகின்றது; அல்லது 1971ம் ஆண்டிலிருந்து பத்து வருட காலக் கட்டத்திற்குள், 1.7 சதவீத வருடாந்த அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது.

28 சர்வதேச நாணய நிதி, சவூதி அரேபியாவிலிருந்து ஏறக்குறைய 500 கோடி டொலர் கடன் பெறுவதற்குரியஓர் ஒப்பந்தம் தொடர்பாக இணக்கம் கண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது; இதற்குப் பதிலாக சவூதி அரேபியாவுக்கு அதிகரித்த வாக்குப் பலம் அளிக்கப்பட இருப்பதாக இலண்டன் 'பினான்சியல் டைம்ஸ்' செய்தி தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் தெங்குக் கைத்தொழில்

இலங்கையின் மூன்று பாரம்பரிய ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள் ஆகியவற்றின் உற்பத்தியும் ஏற்றுமதியும் கடந்த தசாப்தத்தின் பெரும்பகுதிக் காலத்தில் சீர்கேடுற்றது. உற்பத்தியிலோ அல்லது ஏற்றுமதியிலோ ஏற்பட்ட வீழ்ச்சிக்குத் தரப்பட்ட ஒரு வழக்கமான காரணம் பாதகமான காலநிலை என்பதாகும். எனினும் பாரம்பரிய ஏற்றுமதித் துறையில் ஏற்பட்ட தேக்கநிலைக்கான காரணம் (பிரதிகூலமான காலநிலையைவிட) மேலும் ஆழமானதாகும். மூன்று தோட்டப் பயிர்களிலும் தெங்குப் பொருளே மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் தேயிலை, இறப்பர் ஏற்றுமதிகளின் விகிதாசாரம் படிப்படியாக வீழ்ச்சியுற்றிருக்கையில், தெங்குப்பொருள் ஏற்றுமதிகள் ஆழமான வீழ்ச்சி கண்டுள்ளன. அத்துடன், நாட்டின் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களுக்குப் பெரும் பங்களிப்புச் செய்யும் மூன்று பயிர்களிடையே அது வகித்துவந்த நிலையிலிருந்தும், தைத்த ஆடைகள், பெற்ரோலியப் பொருள்கள், சுற்றுலாத்துறை, தனிப்பட்ட மாற்றுக் கொடுப்பனவுகள் — குறிப்பாக வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்த தொழிலாளர்களின் அந்நியநாணய அனுப்பீடுகள் — ஆகியவற்றுக்கும் பின்னால் அது தள்ளப்பட்டுள்ளது.

கடந்த வருட முடிவில் தெங்குப் பொருள் கைத்தொழில் அமைச்சின் செயலாளர், "இலங்கையில் தெங்குப் பொருள் கைத்தொழிலின் எதிர்காலம்" பற்றி இலங்கை நிர்வாக ஆராய்ச்சிக் கழகம் நடத்திய கருத்தரங்கு

விருத்தி செய்யப்பட்ட இனங்களை வளர்த்தலும், விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளும் தெங்குப் பயிர்ச்செய்கையின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கான தீர்வுகளாகும். தெங்கு ஆராய்ச்சிப் பிரிவு 'உயர்', 'குள்ள' இனங்களைக் கலவை செய்து குறுகிய காலத்தில் கூடிய விளைச்சலைத் தரும் இவ்வினத்தை விருத்தி செய்துள்ளது.

ஒன்றில் சொற்பொழிவாற்றுகையில், இக்கைத்தொழிலின் எதிர்காலம் குறித்து நிலவும் பொதுப்படையான அச்சங்களைப்பற்றி இவ்விதம் விமர்சித்தார்— "தெங்குப்பொருள் கைத்தொழில் அபாய நிலைக்கு ஆளாகிவிட்டதெனப் பொதுமக்களிடையே ஒரு கருத்து நிலவுகிறது என்று நான் எண்ணுகிறேன். உற்பத்தி பல வருடங்களாகக் குறைந்துவந்துள்ளதென்றும், தேங்காயை நாம் இறக்குமதி செய்யவேண்டிய காலமொன்று வரக்கூடுமென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இந்த அச்சங்களுக்கு ஆதாரமில்லையென்று நான் கூறமாட்டேன்." எனினும், "சிலர் நினைப்பதுபோல கைத்தொழிலின் எதிர்காலம் அவ்வளவு மோசமாயில்லை என்று நான் நினைக்கிறேன்" என்று அவர் தனது உரையின் முடிவில் நம்பிக்கை தெரிவித்தார். என்றாலும், இதில் நிச்சயமான தென்னவெனில், கைத்தொழிலின் எதிர்காலம் குறித்துப் பல சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன என்பதாகும். காலம் அளவு மீறிப் பிந்திவிடுவதற்கு முன்பு கைத்தொழிலுக்குப் புத்துயிரூட்டுவதற்குத் திட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று பெரும்பாலான வட்டாரங்களில் கவலையும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார, சமூக வாழ்க்கையில் தெங்குப் பொருள் கைத்தொழில் எவ்வளவு பரவலான பங்கெடுத்து வந்துள்ளதென்பதை நாம் உணரும்போது இந்தக் காரணியின் முக்கியத்துவம் தெற்றெனப் புலப்படுகிறது. அது பொருளாதாரத்தின் சகல அம்சங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது — அஃதாவது, விவசாயம், காணி

உபயோகம், பொருளுற்பத்தி, வேலைவசதிகள், அரசாங்க வருமானம், ஏற்றுமதிகள் உள்நாட்டு நுகர்வு ஆகியன. வரலாற்று ரீதியாக தெங்குப்பொருள் கைத்தொழில் உள்நாட்டு முதலாளி வர்க்கமொன்று உதயமாவதிலும், உள்நாட்டு மேட்டிமைக் குழு அமைவதிலும் ஒரு நடுநாயகமான பங்கெடுத்துள்ளது.

மேலும், மற்றும் தோட்டக் கைத்தொழில்களைப் போலன்றி, தெங்குப்பொருள் கைத்தொழில் விவசாய வர்க்கத்துடனும், உணவுப் பொருள்கள், உணவல்லாத பொருள்களாகக் கணக்கற்ற கிராமத் தேவைகளை வழங்கும் கிராமப் பொருளாதாரத்தோடும் நெருக்கமாக இணைப்புண்டுள்ளது.

தெங்குப்பொருள் கைத்தொழில் பத்து இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிப் பரப்பில் இடங்கொண்டுள்ளதுடன், காணி உபயோகத்தில் நெல்லுக்கு மட்டுமே இரண்டாவதாகவும் வருகின்றது. (குருநாகல், புத்தளம், சிலாபம், கம்பஹா, அம்பாந்தோட்டை மாவட்டங்கள் போன்ற) தென்னை விஸ்தாரமான அளவில் வளர்க்கப்படும் பிரதேசங்களில், மக்களில் கணிசமான தொகையினரது பொருளாதார, சமூக வாழ்க்கை அதனைச் சுற்றியே நெருக்கமாகப் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. சமீப வருடங்களில் தெங்குப் பொருள் கைத்தொழில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 4—5 சதவிகிதத்துக்கும், நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாயில் 10—18 சத விகிதத்துக்கும் பொறுப்பாயிருந்துள்ளது. (நாட்டில் வேலையில் அமர்ந்துள்ள மக்களில் சுமார் 3 சதவிகிதத்தினராக அமைந்துள்ள) 135,000 பேர் தெங்குப்பொருள் கைத்தொழிலில் வேலைசெய்கின்றனர் என்று மதிப்பிடப்படுகிறது. அத்துடன், குறைந்தபட்சம் 5 இலட்சம் மக்கள் பிழைப்புக்கு இக்கைத்தொழிலையே நம்பியிருக்கின்றனர். தேங்காய்களையும் தேங்காயின் உபபொருள்களையும் பதப்படுத்துவதற்குப் பெருமட்டத்திலும், சிறுமட்டத்திலும் குடிசை மட்டத்திலுமாகக் கைத்தொழில் நடவடிக்கைகள் விரிவான அளவில் தோன்றியுள்ளன. தேங்காயை ஆதாரமாகக் கொண்ட இத்தகைய கைத்தொழில்கள் இலங்கையின் கைத்தொழில் அமைப்பில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றன. புதிய தேங்காய்களும், தேங்காயெண்ணெயும் மக்களின் உணவில் முக்கியமான பொருள்களாக விளங்குகின்றன. இவை ஒரு சராசரி குடும்பத்தின் உணவுச் செலவினத்தில் சுமார் 10 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயிருப்பதுடன், ஒரு சராசரி நுகர்வோர் உட்கொள்ளும் கனலி மதிப்பில் 20 சதவிகிதத்துக்கு மேலும் உதவுகின்றன.

## மொத்தத் தேசிய உற்பத்தியில் தேங்காய்கள்

1979-ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியளவில் தெங்குப் பயிர்ச்செய்கையின் பங்களிப்பு (அஃதாவது பதப்படுத்தல் நீங்கலாக) 199.1 கோடி ரூபா பெறுமதியானதென்று அல்லது மொத்தப் பெறுமதியில் 4 சதவிகிதமானதென்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 1980-ம் ஆண்டில் இதில் வீழ்ச்சி காணப்பட்டது. 1970-ம் ஆண்டில் தொடங்கிய தசாப்தம் முழுவதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியளவில் தெங்குப் பயிர்ச்செய்கையின் பங்கு ஏறக்குறைய 4 சதவிகிதமாகவே இருந்துவந்துள்ளது. மூன்று தோட்டப் பயிர்களிலும் (பயிர்ச்செய்கை மட்டும்) தெங்குப் பயிர்ச்செய்கையே மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவுக்கு ஆகக்கூடிய பங்களிப்புச் செய்கின்றது. 1970 களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியளவில் தேயிலையின் பங்கு 2—3 சதவிகிதத்திலிருந்து வேறுபட்டுள்ளது; இறப்பரின் பங்கு 2 சதவிகிதத்துக்குக் கீழே இருந்துவந்துள்ளது. விவசாயப் பயிர்களிடையே தெங்கின் பங்களிப்பு நெல்லினால் மட்டுமே மிஞ்சப்பட்டுள்ளது. 1970 களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியளவில் நெல் 5—7 சதவிகிதப் பங்களிப்புச் செய்துள்ளது.

மேற்கண்ட புள்ளி விவரங்களில் பயிர்ச்செய்கையில் சேர்க்கப்பட்ட பெறுமதி மட்டுமே அடங்கி உள்ளது. எனவே, பதப்படுத்தும் நடவடிக்கைகள் விலக்கப்பட்டுள்ளன. பதப்படுத்தலில் சேர்க்கப்படும் பெறுமதி சேர்க்கப்பட்டால், தெங்கின் பங்களிப்பு மொ. உ. உ. அளவில் ஏறக்குறைய 5 சதவிகிதத்துக்கு உயருகிறது. ஆனால், 1978—80 காலத்தில் 8.14% பங்களிப்புச் செய்துள்ள தேயிலையினால் மிஞ்சப்படுகிறது.

தெங்குக் கைத்தொழிலில் உதயமாகும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு கடந்த மூன்று தசாப்தங்களாகக் குறைந்துள்ளது. அது 1950-ம் ஆண்டிலிருந்த ஏறக்குறைய 10 சதவிகித மட்டத்திலிருந்து 1960 களின் ஆரம்பத்தில் 7.8 சதவிகிதத்துக்கும் 1970 களின் முடிவில் ஏறக்குறைய 5 சதவிகிதத்துக்கும் குறைந்துள்ளது. தெங்கு உற்பத்தியின் வளர்ச்சி மொ. உ. உ. வின் மொத்த வளர்ச்சியைவிட வேகம் மிகக் குறைந்துள்ளதென்ற உண்மையை இக்குறைவு பிரதிபலிக்கின்றது. உண்மையில், 1970 களின் பல வருடங்களில் தெங்கு

### அட்டவணை 1

### மொத்த உள்நாட்டு உற்பத்தியளவுக்குப் பிரதான விவசாயப் பயிர்களின் பங்களிப்பு

| பொருள் | பயிர்ச்செய்கையில் சேர்க்கப்பட்ட பெறுமதி 1970 | 1975 | 1980 | மொ. உ. உ. அளவில் சதவிகிதம் 1970 | 1975 | 1980 |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | சதவிகிதம் | சதவிகிதம் | சதவிகிதம் |
| தேயிலை | 423 | 660 | 1,635 | 3.2 | 2.6 | 2.6 |
| இறப்பர் | 233 | 328 | 873 | 1.8 | 1.3 | 1.4 |
| தெங்கு | 535 | 975 | 2,368 | 4.1 | 3.8 | 3.8 |
| நெல் | 951 | 1,501 | 3,791 | 7.2 | 5.8 | 6.1 |
| மொத்த விவசாயம் | 3,392 | 7,173 | 14,210 | 25.7 | 27.9 | 22.2 |
| மொ. உ. உ. | 13,187 | 25,691 | 62,346 | 100 | 100 | 22.8 |

ஆதாரம்: மத்திய வங்கி, வருடாந்த அறிக்கை 1980, அநுபந்தம் அட்டவணை 2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

| | பயிர்ச்செய்கையிலும் பதப்படுத்தலிலும் சேர்க்கப்படும் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியளவில் சதவிகிதமாக | | | |
|---|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 | 1980 |
| தேயிலை | 13.5 | 10.9 | 7.9 | 6.3 |
| தெங்கு | 5.4 | 5.2 | 4.9 | 5.1 |
| இறப்பர் | 2.7 | 2.9 | 4.1 | 3.0 |

ஆதாரம்: மத்திய வங்கி, 1980 க்குரிய வருடாந்த அறிக்கை.

உற்பத்தி எதிர்மறையான வளர்ச்சி விகிதங்களையே பதிவு செய்தது.

சமீப வருடங்களில் (1977—80) நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியில் தெங்குப் பயிர்ச்செய்கையின் பங்கு 15—18 சதவிகித அளவிலேயே இருந்து வந்துள்ளது; இப்பங்கு தோட்டப் பயிர்களிடையேயும், மொத்த விவசாயத்துக்குள்ளேயும் மிக உயர்வாயுள்ளது. நெல்லின் பங்குக்கு மட்டுமே இரண்டாவதாக உள்ளது.

## ஏற்றுமதிச் சம்பாத்தியத்துக்குப் பங்களிப்பு

ஏற்றுமதிகள் உற்பத்தியில் 90 சதவிகிதத்துக்கு மேற்பட்டனவாக அமைந்திருக்கும் மற்றிரு தோட்டப் பயிர்களைப் போலன்றி தெங்குக் கைத்தொழில் உள்நாட்டில் கணிசமான நுகர்வுக் கோரிக்கையைப் பூர்த்திசெய்ய வேண்டி உள்ளது. எஞ்சியுள்ளது மட்டுமே (உள்நாட்டு நுகர்வுக்கு மேலுள்ள உபரி) ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி உபரியின் அளவு பிரதானமாக மொத்தத் தெங்குப் பயிரின் அளவைப் பொறுத்து வருடத்துக்கு வருடம் பெருமளவுக்கு மாறுபட்டுள்ளது. மோசமான விளைச்சல் ஆண்டொன்றில், ஏற்றுமதி உபரி வெகுவாக வீழ்ச்சியுறலாம்; அல்லது அடியோடு மறைந்துவிடவும் கூடும். 1970 களில் ஏற்றுமதி உபரி மொத்தப் பயிர்விளைச்சலில் 20 இலிருந்து 45 சதவிகிதம் வரையான அளவுக்கு வித்தியாசப்பட்டுள்ளது. சராசரியாக ஏறக்குறைய 30 சதவிகித வித்தியாசம் காணப்பட்டது. முந்திய இரு தசாப்தங்களில் (1950 களிலும் 1960 களிலும்) தொடர்பு ஏற்றுமதி உபரி மிக உயர்வாயிருந்தது. அப்போது அது 40 சதவிகிதத்துக்குக் கீழே வீழ்ச்சியடையவேயில்லை. நல்ல பயிர் விளைச்சல் வருடங்களில் 60 சதவிகிதத்துக்கு மேல் உயர்ந்தது. சராசரி மட்டம் ஏறக்குறைய 50 சதவிகிதமாயிருந்தது.

பருப்புப் பொருள்கள் (புதிய காய்கள், தேங்காய்த் துருவல், கொப்பரா, எண்ணெய் ஆகியன) பிரதானமாக ஏற்றுமதி வகையாக அமைந்து, மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் ஏறக்குறைய 75 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயுள்ளன; உப பொருள்கள் (கயிற்றுத் தும்பும் தேங்காய்ச் சிரட்டைப் பொருள்களும்) எஞ்சிய 25 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயுள்ளன; எனினும், 1980ம் ஆண்டளவில், இவ்விருவகைப் பொருள்களில் ஒவ்வொன்றினதும் சம்பாத்தியம் ஏறக்குறைய 50 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது.

1979ம் ஆண்டில் சகல தெங்குப் பொருள்களிலிருந்தும் கிடைத்த ஏற்றுமதிச் சம்பாத்தியம் 169.9 கோடி ரூபா அல்லது 8.4 கோடி எஸ். டி. ஆர். ஆக இருந்தது. இது நாட்டின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 11 சதவிகிதமாகும்; அதேவேளையில் 1980ம் ஆண்டில் ஏற்றுமதிச் சம்பாத்தியம் 123.4 கோடி ரூபாவுக்கு அல்லது எஸ். டி. ஆர். 5.7 கோடிக்கு வீழ்ச்சியடைந்தது. இது நாட்டின் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 7 சதவிகிதம் மட்டுமேயாகும். 1970களின் தசாப்தத்தில் இந்தப் பங்கு (மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியத்துக்குப் பங்களிப்பு) 1977ம் ஆண்டில் 8 சதவிகிதமான குறைந்த அளவிலிருந்து 1972ம் ஆண்டில் 17 சதவிகிதமான உயர்ந்த அளவுவரை விரிவான முறையில் வித்தியாசப்பட்டுள்ளது- இந்த தசாப்தத்தின் போது சராசரி வருடாந்த ஏற்றுமதிச் சம்பாதித்தியம் 5.7 கோடி எஸ். டி. ஆர். ஆக அஃதாவது மொத்தத்தில் 14 சதவிகிதமாக இருந்தது.

1970களில் தெங்குப் பொருள் ஏற்றுமதிகள் நாட்டின் மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 8 சதவிகிதத்திலிருந்து 17 சதவிகிதம் வரை மாறுபடும் பங்குகளுக்கு நிதி வழங்கியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவைப் பொறுத்த வரை, 1970களின் பெரும்பாலான வருடங்களில் தெங்குப் பொருள் ஏற்றுமதிகள் 2சதவிகிதத்திலிருந்து 3.5 சதவிகிதம் வரையான அளவில் நடைபெற்றுள்ளன.

அட்டவணை 3

தெங்குப் பொருள்களிலிருந்து ஏற்றுமதிச் சம்பாத்தியம்

| | ஏற்றுமதிச் சம்பாத்தியம் | | ஏற்றுமதிச் சம்பாத்தியம் சதவிகிதமாக | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | ரூ. மில்லியன் | எஸ். டி. ஆர். மில்லியன் | மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியம் | மொத்த இறக்குமதிச் செலவினம் | மொ. உ. உ. |
| 1970 | 290 | 50 | 15 | 13 | 2.3 |
| 1972 | 343 | 51 | 17 | 17 | 2.3 |
| 1974 | 548 | 68 | 16 | 12 | 2.4 |
| 1976 | 507 | 52 | 11 | 11 | 1.8 |
| 1977 | 496 | 47 | 08 | 08 | 1.4 |
| 1978 | 1,277 | 65 | 10 | 09 | 3.2 |
| 1979 | 1,699 | 84 | 11 | 08 | 3.5 |
| 1980 | 1,234 | 57 | 7 | 04 | 2.0 |

ஆதாரம் : மத்திய வங்கி — வருடாந்த அறிக்கைகள், பல்வேறு வருடங்கள்.

### அரசாங்க வருமானத்துக்குப் பங்களிப்பு

குறிப்பாக இந்த ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் உயர்வாயிருந்த வருடங்களில் தெங்குப் பொருள்கள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் அரசாங்க வருமானத்துக்கு ஒரு முக்கியமான மூலமாக இருந்துவந்துள்ளன. இந்த மூலத்திலிருந்து அரசாங்கத்துக்குக் கிடைத்த வருமானம் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களுடன் வருடத்துக்கு வருடம் விரிவான அளவில் ஏறி இறங்கியுள்ளது. உதாரணமாக 1970—77 இல் ஏற்றுமதித் தீர்வை வாயிலாகக் கிடைத்த வருமானம் 50 இலட்சம் ரூபாவுக்கும் 16.2 கோடி ரூபாவுக்குமிடையே ஏற்றத்தாழ்வாயிருந்துள்ளது. மொத்த அரசாங்க வருமானத்தில் அதன் பங்கு 0.1 சதவிகிதத்துக்கும் 3.4 சதவிகிதத்துக்குமிடையே மாறுபட்டுள்ளது. 1978-ம் ஆண்டிலும் 1979-ம் ஆண்டிலும் ஏற்றுமதித் தீர்வைமூலம் கிடைத்த வருமானம் (பருப்புப் பொருள்கள் மீதான நிர்வாக வரி உட்பட) முறையே செங்குத்தாக 40.5 கோடி ரூபாவுக்கும் 72 கோடி ரூபாவுக்கும் உயர்ந்தது.

மொத்த அரசாங்க வருமானத்துக்கான பங்களிப்பு இவ்விரு வருடங்களிலும் முறையே 3.5 சதவிகிதமாகவும் 5.7 சதவிகிதமாகவும் இருந்தது. 1977-ம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு பிரதானமாக (1977 நவம்பரில் அமுலாக்கப்பட்ட ரூபா மதிப்புக் குறைப்பின் காரணமாக) ஏற்றுமதிகள்மீது கிடைத்த உயர்ந்த ரூபா விலைகள், உயர்த்தப்பட்ட ஏற்றுமதித் தீர்வைகள் ஆகியவற்றின் விளைவாகவே பெறப்பட்டது. சராசரி ஏற்றுமதித் தீர்வை (அஃதாவது மொத்த ஏற்றுமதிப் பெறுமதி மீதான ஏற்றுமதித் தீர்வை வருமானம்) 1978-ம் ஆண்டிலும் 1979-ம் ஆண்டிலும் முறையே செங்குத்தாக 42 சதவிகிதத்துக்கும் 51 சதவிகிதத்துக்கும் உயர்ந்தது.

### வேலைவாய்ப்புக்கள்

தெங்குப்பொருள் தொழில் — அஃதாவது தெங்கு வளர்ப்பிலும் தெங்குப் பொருள்களைப் பதப்படுத்துவதிலும் வியாபாரம் செய்வதிலும் மற்றும் நடவடிக்கைகளிலும் — ஏறக்குறைய 135,000 பேர் வேலை செய்கின்றனர் என்று மதிப்பிடலாம். இது நாட்டில் வேலையில் ஈடுபட்டுள்ள மொத்த மக்கள் தொகையில் சுமார் 3 சதவிகிதமாகும். வேலையில் உள்ள ஒருவரை 3—4 பேர் சார்ந்திருப்பதாக நாம் எண்ணிக்கொள்வோமாயின், அப்பொழுது பிழைப்புக்காகத் தெங்குப்பொருள் கைத்தொழிலைச் சார்ந்திருப்போர் தொகை 400,000 — 500,000 ஆக இருக்குமென்று மதிப்பிடலாம்; அஃதாவது, நாட்டின் மொத்த ஜனத் தொகையில் ஏறக்குறைய 3—3.5 சதவிகிதத்தினர்.

தெங்குப்பொருள் கைத்தொழிலில் உள்ள வேலைவசதிகள் அளவு (650,000 பேர் வேலையில் ஈடுபட்டுள்ள) தேயிலைக் கைத்தொழிலிலும் (225,000 பேர் வேலையில் ஈடுபட்டுள்ள) இறப்பர் கைத்தொழிலிலும் உள்ள வேலைவசதிகளின் அளவைவிடக் குறிப்பிடத்தக்கவாறு குறைவாக உள்ளது. ஒற்றைப் பண்படுத்து செய்கையென்ற முறையில் தெங்குக் காணிகளுக்குக் குறைந்த தொகையான தொழிலாளர்கள் தேவைப்படுவதன் விளைவாகவே ஒப்பியல்ரீதியாக வேலைவசதிகளின் இந்தக் குறைந்தளவு காணப்படுகிறது. தேயிலைக் காணியில் ஏக்கர் ஒன்றுக்கு 1.25 பேர் வீதமும் இறப்பர் காணியில் ஏக்கர் ஒன்றுக்கு 0.35 பேர் வீதமும் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர் என்பதுடன் ஒப்பிடுமிடத்து, தெங்குக் காணியில் ஏக்கர் ஒன்றுக்கு ஏறக்குறைய 0.1 பேர் வீதம் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். இதை வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், தெங்குப் பயிர்ச்செய்கையில் ஓர் ஆளுக்கு வேலை வழங்க ஏறக்குறைய 10 ஏக்கர் தெங்குக் காணி தேவைப்படுகிறது. 1969—70 சமூக — பொருளாதாரப் பரிசீலனையின் படி, தெங்குப் பயிர்ச்செய்கையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள மொத்தத் தொகையினர் 84,400 பேர்; அஃதாவது 14 ஏக்கருக்குச் சராசரி ஓர் ஆளே வேலைக்கமர்த்தப்படுகிறார். பரப்பில் 50 ஏக்கரையும் அதற்கு மேலும் கொண்டுள்ளவையும் (5 பேரை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினரை வேலைக்கு அமர்த்தியுள்ளவையுமான) தென்னந்தோட்டங்களில் உள்ள வேலைவசதி நிலைமை பற்றித் தொழில் திணைக்களம் நடத்திய பரிசீலனைகளிலிருந்து 1971—74 ஆண்டுகளின்போது மொத்தம் 14,000 பேரிலிருந்து 19,000 வரை வேறுபடும் தொகையான தொழிலாளர்களே வேலைக்கமர்த்தப்பட்டனர் என்பது தெரியவந்தது. பரப்பில் 50 ஏக்கருக்கு மேலுள்ள தெங்குக் காணிகளின் மொத்த விஸ்தீரணம் ஏறக்குறைய 300,000 ஏக்கராகும். இந்த முழுப் பரப்பும் மேற்கூறிய பரிசீலனைகளில் உள்ளடக்கப்பட்டதென நாம் எண்ணிக்கொள்வோமாயின், அப்பொழுது 17.21 ஏக்கருக்கு ஓர் ஆள் வீதமே சராசரியாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது. எனினும், இந்த முழுக் காணிப் பரப்பும் அந்தப் பரிசீலனைகளில் உள்ளடக்கப்படாதிருப்பது முற்றிலும் சாத்தியமே. ஏனென்றால், 50 ஏக்கருக்கு மேற்பட்ட சில தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டோரின் தொகை 5 பேருக்குக் குறைவாகவே இருந்திருக்

அட்டவணை 4
தெங்குப்பொருள்களிலிருந்து
ஏற்றுமதித் தீர்வை வருமானம்

| ஆண்டு | ஏற்றுமதித் தீர்வை வருமானம் ரூ. மில்லியன் | சதவிகிதமாக: ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் சதவிகிதம் | சதவிகிதமாக: அரசாங்க வருமானம் சதவிகிதம் |
|---|---|---|---|
| 1973 | 32.6 | 14.2 | 0.8 |
| 1974 | 161.8 | 291.5 | 3.4 |
| 1975 | 65.1 | 13.2 | 1.3 |
| 1976 | 5.2 | 1.0 | 0.1 |
| 1977 | 14.1 | 2.8 | 0.2 |
| 1978 | 405.2 ● | 31.9 | 3.5 |
| 1979 | 719.8 ● | 42.4 | 5.7 |

● நிர்வாக வரியை உள்ளடக்கியது
ஆதாரம்: மத்திய வங்கி வருடாந்த அறிக்கைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். மேற்சொன்ன காணிப் பரப்பில் ஏறக்குறைய மூன்றிலிரு பங்கு மட்டுமே அப்பரிசீலனைகளில் அடக்கப்பட்டதென ஊகித்துக் கொண்டால், அப்பொழுது 11—14 ஏக்கருக்கு ஓர் ஆள் வீதமே சராசரியாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் என்றாகிறது.

தெங்குப் பொருள்களைப் பதப்படுத்தும் நடவடிக்கைகளில் ஏறக்குறைய 42,000 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று மதிப்பிடலாம். நடவடிக்கை வாரியாகக் கீழ்க்கண்டவாறு பருமட்டாய்ப் பகுத்துப் பார்க்கலாம்—

கொப்பரா 2000 பேர்; தேங்காயெண்ணெய் 4000 பேர்; தேங்காய்த் துருவல் 6000 பேர்; பழுப்புத் தும்பு 18,000 பேர்; வெள்ளைத் தும்பு 10,000 பேர்; தேங்காய்ச் சிரட்டைப் பொருள்கள் 1000 பேர்; நானாவித வேலைகளில் 1000 பேர்.

தெங்குப் பொருள்களின் வியாபார முயற்சிகளில் வேலை செய்வோரில், தெங்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள், தரகு வேலை செய்யும் கம்பெனிகள், தெங்குப் பொருள்களைக் கையாளும் மொத்த விற்பனை நிலையங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் வேலை செய்வோரும் அடங்குவர். இம் முயற்சிகளில் ஏறக்குறைய 5,000 பேர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் என்று பருமட்டாக மதிப்பிடலாம். போக்குவரத்து ஸ்தாபனங்கள், சட்டநியதி ஸ்தாபனங்கள் போன்ற தெங்குப் பொருள்கள் சம்பந்தமான மற்றெல்லா நடவடிக்கைகளிலும் வேலை செய்வோரை அடக்குவதென்றால், இன்னொரு 3,000 பேரைச் சேர்த்துக் கொள்ளலாம். இவ்விதமாகத் தெங்குப் பொருள் கைத்தொழிலில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளோரைக் கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம்—

| | | பேர் |
|---|---|---|
| தெங்குப் பயிர்ச் செய்கை | — | 85,000 |
| தெங்குப் பொருள்களைப் பதப்படுத்தல் | — | 42,000 |
| தெங்குப்பொருள் வியாபாரம் | — | 5,000 |
| மற்றும் நடவடிக்கைகள் | — | 3,000 |
| மொத்தம் | — | 135,000 |

## கைத்தொழில் மயமாக்கலுக்குப் பங்களிப்பு

பன்முகப்படுத்திய கைத்தொழில் முயற்சிகளின் தோற்றத்துக்குத் தெங்குப் பயிர் நாட்டிலுள்ள வேறெந்த விவசாயப் பயிரையும்விட அதிக ஆதாரத்தை வழங்கி உள்ளது. தேங்காயை அடிப்படையாகக் கொண்ட முக்கியமான கைத்தொழில்களாவன— தேங்காய் எண்ணெய், தேங்காய்த் துருவல், தும்பு, தும்புப் பொருள்கள், உயிர்ப்பித்த காபன் (சுத்தக் கரி), சவர்க்காரம், கொழுப்பு அமிலங்கள், விலங்குத் தீனிகள், சாராயம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள். 1979-ம் ஆண்டில் இம்முயற்சிகளில் சிலவற்றில் ஈடுபட்ட பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் ஸ்தாபனங்களின் தொகை பின்வருமாறு— தேங்காய் எண்ணெய் ஆலைகள் 65; தேங்காய்த் துருவல் 68; கயிற்றுத் தும்பு 654; உயிர்ப்பித்த காபன் 01.

தேங்காய்த் துருவல், கயிற்றுத் தும்பு, உயிர்ப்பித்த காபன் ஆகியன கிட்டத்தட்ட முற்றிலும் ஏற்றுமதிக் கைத்தொழில்களாகும். இதேவேளையில் தேங்காயெண்ணெய்க் கைத்தொழில் சிறிதளவுக்கு உள்நாட்டுச் சந்தைக்கும் சிறிதளவுக்கு ஏற்றுமதிகளுக்கும் பங்களிப்புச் செய்கின்றது. உள்நாட்டுச் சந்தையைப் பொறுத்தவரை சவர்க்காரம், கிளிசரீன், கொழுப்பு அமிலங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் உபயோகிக்கப்படும் பிரதான மூலப் பொருள் தேங்காயெண்ணெயே யாகும். விலங்குணவு உற்பத்தியில் உபயோகிக்கப்படும் பிரதான மூலப்பொருள் பிண்ணாக்காகும். கயிற்றுத் தும்பையும், நூல் புரியையும், தென்னோலை ஈர்க்கையும் பிரதான மூலப்பொருள்களாக உபயோகித்து, பெருந்தொகையான சிறிய அளவிலான கைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும் (உதாரணமாக விளக்குமாறுகள், தூரிகைகள், கம்பளங்கள், பாய்கள், வடங்கள் மெல்லிய கயிறுகள்) தோன்றியுள்ளன. தேங்காயை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் பெரும்பாலானவை கிராமப் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய அளவிலான நடவடிக்கைகளாகும். எனவே, கிராமக் கைத்தொழில் வளர்ச்சியில் தேங்காய்கள் ஒரு முக்கியமான பங்கெடுத்துக்கொள்கின்றன.

1950 களின் ஆரம்பத்தில் (அஃதாவது, அரசாங்க கைத்தொழில்களும் தனியார் துறையில் இறக்குமதிக்கு மாற்றான கைத்தொழில்களும் அபிவிருத்தி அடைவதற்கு முன்பு) தேங்காயை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலே இலங்கையில் முன்னணியிலிருந்த கைத்தொழில் ● துறையாகும். 1952 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கைத்தொழில் கணக்கெடுப்பிலிருந்து, கயிற்றுத் தும்பிலும், கயிற்றுப் பொருள்களிலும் 130 கைத்தொழில் தாபனங்களும், ஆலையில் எண்ணெய் பிழிவதிலும் தேங்காய்த் துருவலிலும் 75 கைத்தொழில் தாபனங்களும் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வந்தது. இந்தக் கைத்தொழில்களின் (பெறுமதி சேர்க்கப்பட்ட) நிகர உற்பத்தி நாட்டின் (பெறுமதி சேர்க்கப்பட்ட) மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 32 சதவிகிதமாயிருந்தது. கடந்த இரு தசாப்தங்களில் இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்களில் ஏற்பட்ட வளர்ச்சியுடன்

● இக்கணக்கெடுப்பு தொழிற்சாலைகளைக்கொண்ட கைத்தொழில்களை மட்டுமே உள்ளடக்கியது. அஃதாவது, ஐந்து பேரையோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினரையோ வேலைக்கமர்த்தி உள்ளவையும், 3,000 ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை மூலதனமாகக் கொண்டவையும், இயந்திர சக்தியை உபயோகிப்பவையுமான கைத்தொழில்கள் மாத்திரம். தேயிலைத் தொழிற்சாலைகளும் இறப்பர் ஆலைகளும் கைத்தொழிலுடன் கொண்டுள்ளதைவிட விவசாயத்துடனேயே அதிக தொடர்புகொண்டுள்ளனவென்று கருதப்பட்டதால், அவை கைத்தொழிலாக வகைப்படுத்தப்படவில்லை.

நாட்டின் மொத்தக் கைத்தொழில் அமைப்பில் ஒப்பியல் ரீதியாகத் தேங்காயை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில்களின் முக்கியத்துவம் குறைந்துவிட்டதெனப் பதிவாகி உள்ளது.

## உள்நாட்டு நுகர்வில் தேங்காய்கள்

மக்களின் உணவில் தேங்காய்கள் ஒரு முக்கியமான பங்கெடுத்துக்கொள்கின்றன. உண்ணத்தக்க எண்ணெய்களுக்கும் கொழுப்புகளுக்கும் அதுவே பிரதான மூலமாக அமைந்துள்ளது. வருடாந்தம் சராசரியாகத் தலா நுகர்வு ஏறக்குறைய 90 தேங்காய்களும், 6.2 போத்தல் தேங்காய் எண்ணெயுமாகும். நுகர்வோர் நிதிநிலைபற்றி நடத்தப்பட்ட பரிசீலனைகளிலிருந்து ஒரு சராசரிக் குடும்பத்தின் மொத்த உணவுச் செலவுகளில் தேங்காய்களும், தேங்காயெண்ணெயும் ஏறக்குறைய 9 சதவிகிதமாக அமைந்துள்ளனவென்பது தெரியவந்துள்ளது. ஒரு சராசரி நுகர்வோர் உட்கொள்ளும் மொத்தக் கலோரி மதிப்பில் தேங்காய்கள் ஏறக்குறைய 22 சதவிகிதத்தை வழங்குகின்றன. கலோரி வழங்கலின் கோணத்திலிருந்து பார்க்குமிடத்து, தேங்காய் அரிசிக்கு மட்டுமே இரண்டாவதாக விளங்குகின்றது.

1970 களில் உள்நாட்டு நுகர்வு மொத்தத் தேங்காய் விளைச்சலில் சராசரியாகக் ஏறக்குறைய 36 சதவிகிதமாக அமைந்தது. 1950 களிலும் 1960 களிலும் இச்சராசரி 50 சதவிகித அளவிலிருந்தது.

பருப்புக்கும் எண்ணெய்க்கும் புறம்பாக, உள்நாட்டு நுகர்வில் மற்றுமநேக தேங்காய்ப் பொருள்கள் முக்கியமாயுள்ளன. இளந்தேங்காய்கள் மக்கள் விரும்பிப் பருகும் பானத்தைத் தருகின்றன. நாட்டில் உபயோகிக்கப்படும் மதுபானங்களில் தென்னங் கள்ளும், சாராயமும் மிக முக்கியமானவையாக விளங்குகின்றன. தென்னம் பாணியும், வெல்லக் கட்டிகளும்கூட முக்கியமான நுகர் பொருள்களாயுள்ளன. தேங்காய்ப் பிண்ணாக்கே நாட்டில் கையிருப்பில் உள்ள பிரதான விலங்குணவாயுள்ளது.

இலங்கைச் சமுதாயத்தில் தென்னை மரம் (உணவல்லாத) மற்றும் எண்ணற்ற பயன்களையும் கூடக் கொண்டுள்ளது — கூரை போடுதல், வெட்டு மரங்கள், விறகு, மெத்தைகள், விளக்குமாறுகள், தூரிகைகள் போன்ற வீட்டுப் பொருள்கள்; கலைப் பயன்கள், கலாசாரப் பயன்கள் ஆகியன ஒருசில பயன்கள் மட்டுமேயாகும். கீழ்க்கண்ட மேற்கோள் கிராமப் பொருளாதாரத்தில் தென்னை மரம் ஆற்றும் ஜீவாதாரமான பங்கைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது—

“ஓலைகள் கூரை போடுவதற்கும், பாய்களாகவும், கூடைகளாகவும், தீவட்டிகளாகவும், எரிபொருளாகவும் எருவாகவும் உபயோகிக்கப்படுகின்றன. இதேவேளை ஓலைகளின் தண்டுகள் வேலிகளுக்கும், தூண்டில்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. விரியாத ஓலைகளின் குவியல் அல்லது குலையிலிருந்து ஊறுகாய்களும் வற்றல்களும் தயாரிக்கப்படுகின்றன. இளநீரிலிருந்து கள் தயாரிக்கப்பட்டு, கள்ளைக் காய்ச்சி வடித்துச் சாராயமும் உற்பத்தி செய்யப்படுகிறது. இளநீரை ஆவியாக்குவதன்மூலம் வெல்லம் பெறப்படுகிறது; புளிக்க வைத்து நொதிக்கப்பண்ணுவதன்மூலம் தென்னம் வினாக்கிரி உற்பத்தி செய்யப்படுகிறது. பக்குவமாகாத காய்கள் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன. இளந் தேங்காயின் பால் ஆயாசந் தீர்க்கும் பானமாகின்றது. பருப்பு, கறியாக்குவதற்கும் பொதுவாகச் சமையலிலும் உபயோகிக்கப்படுகிறது. காயிலிருந்து பெறப்படும் எண்ணெய் மருத்துவத்திலும் தலைமயிரில் பூசிக்கொள்வதற்கும் சவர்க்காரம், மெழுகுவர்த்தி செய்வதற்கும் வெளிச்சம் தருவதற்கும் பயன்படுகிறது. கால்நடைகளுக்கு உணவாகப் பிண்ணாக்கு அல்லது கொப்பரைச் சக்கை அளிக்கப்படுகிறது. தேங்காய்ச் சிரட்டையிலிருந்து பருகும் கிண்ணங்கள், மரக்கரி, பற்பொடி, கரண்டிகள், மருந்து உருத்திராட்ச மணிகள், கொள்கலங்கள் கத்திப் பிடிகள் ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன. தேங்காய் நார் மெத்தைகளிலும் தலையணைகளிலும், வடங்கள், கடலடிக் கம்பிக் கயிறுகள், மெல்லிய கயிறுகள், கித்தான் துணிகள், மீன் வலைகள், தூரிகைகள் ஆகியன செய்வதிலும் எரிபொருளாகவும் தளப்பாய்கள் செய்வதற்கும் உபயோகிக்கப்படுகிறது. அடிமரம் கைம்மரங்கள், கடைச்சல் இயந்திரங்கள், பாய்வலித்தோடும் படகுகள், தொட்டிகள், தட்டுமுட்டுச் சாமான்கள் பொத்தான்கள் செய்வதற்கும் விறகாகவும் உபயோகிக்கப்படுகிறது. (தெங்கு விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை — 1949)

## இரட்டைத் தன்மை

பொருளாதார, சமூக இருமைநிலைப் பொருளாதாரத்தினதும் சற்றே குறைந்த அளவுக்கு இறப்பர் பொருளாதாரத்தினதும் ஒரு சிறப்பு அம்சமாயிருந்தது. அந்நிய மூலதனத்தையும் தொழில் முயற்சியையும் பெருமளவுக்குச் சார்ந்திருப்பதும், குடிபெயர்ந்து வந்த இந்தியத் தொழிலாளர்கள், உள்நாட்டு நுகர்வுக்காக அன்றிப் பிரதானமாக ஏற்றுமதி செய்வதற்காக உற்பத்தி செய்வதும், மொத்தப் பரப்பின் பெரும் பகுதி தோட்டப் பிரதேசமாக அமைந்திருப்பதும், பாரம்பரிய கிராமப் பகுதியுடன் ஆகக் குறைந்த பொருளாதார — சமூக உறவுகள் நிலவுவதும் இந்தத் தோட்டப் பயிர்களின் விசேஷ அம்சங்களாகும். எனினும், தேங்காய்களைப் பொறுத்தவரை, இந்த விசேஷ அம்சங்களில் சில காணப்படவில்லை. மற்றிரு தோட்டப் பயிர்களில் உள்ள நிலைமையுடன் ஒப்பிடுகையில் மற்றும் அம்சங்களும் குறிப்பிடத்தக்க வாறு குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன.

தெங்குக் காணிகளுக்கு எந்தக் கணிசமான தொழிலாளர் படையும் தேவைப்படுவதில்லை. எனவே, தெங்கு சம்பந்தமாகத் தொழிலாளரை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஒருபோதும் எழவில்லை. குறைந்த தொகையான தொழிலாளர் தேவைகள் சுதேச தொழிலாளர் வழங்கல்கள் மூலம் கிட்டத்தட்ட பூரணமாக நிறைவேற்றப்பட்டன. மேலும் தெங்குக் கைத்தொழிலின் அபிவிருத்தியில் அந்நிய மூலதனமும், தொழில் முயற்சியும் ஆற்றிய பங்கு ஆகக் குறைந்ததாகும். அநேகமாக இக்கைத்தொழில் விரிவடையத் தொடங்கிய காலத்திலிருந்து (அஃதாவது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து) சுதேச மூலதனமும் தொழில் முயற்சியுமே முதன்மையான பங்காற்றின.

தேயிலையுடன் ஒப்பிடுகையில், தெங்குப்பயிர்ச் செய்கையின் தொழில்நுட்பங்கள் ஒப்பியல் ரீதியாக எளிமையானவை; மூலதனத் தேவைகள் குறைவு; பராமரிப்பதிலும், சம்ரட்சணை செய்வதிலும் காட்டப்பட வேண்டிய தீவிரம் ஒப்பியல்ரீதியாகக் குறைவு. இந்த

அமைவில், தெங்கு உள்நாட்டுத் தொழில் முயற்சிக்கு மிக உகந்ததாயிருந்தது. உண்மையில், தெங்குக் கைத்தொழில் உள்நாட்டுத் தொழில் முயற்சியாளரது வர்க்கமொன்றின் வளர்ச்சிக்கு ஒரு முக்கியமான ஆதாரத்தை வழங்கியது. காரீயம், சாராயக் குத்தகை, போக்குவரத்து ஒப்பந்தங்கள், உள்நாட்டு வியாபாரம் போன்ற மற்றும் முயற்சிகளில் மூலதனத்தைக் குவித்த இலங்கையர்களுக்குத் தெங்குக் கைத்தொழில் ஓர் இலாபகரமான முதலீட்டு வெளிவழியை ஏற்படுத்தியது. தோட்ட விவரக் கொத்துகளில் கிடைக்கும் தகவல்களின்படி 1880—81-ல் 100 ஏக்கருக் குமேற்பட்ட தென்னங் காணியைக் கொண்டுள்ளதாகப் பதிவு செய்யப்பட்ட இலங்கையர்களின் தொகை அண்ணளவாக 76 ஆக இருந்தது. 1917-ம் ஆண்டில் இத்தொகை 412க்கு உயர்ந்துவிட்டது. இவர்களில் 39 பேர் 1880—81-ல் 300 ஏக்கருக்கு மேற்பட்ட தெங்குக் காணியைக் கொண்டிருந்தனர்; 80 பேர் 1917-ம் ஆண்டில் 500 ஏக்கருக்கு மேற்பட்ட தெங்குக் காணியைக் கொண்டிருந்தனர். இத்திகதிகளில் ஏதாவதொன்றில் 100 ஏக்கருக்கு மேற்பட்ட தென்னங் காணியைக் கொண்டிருந்தவர்கள் இடையே இலங்கையின் அரசியல், சமூக அரங்கில் பிரசித்தி பெற்ற சில பெயர்களும் இருந்தன. உதாரணமாக ஜேம்ஸ் டீ அல்விஸ், சர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கா, டி. சி. எம். குணவர்த்தன, திருமதி ஜே. பி. ஒபயசேகர, எஸ். சி. ஒபயசேகர, டபிள்யூ. எம். ராஜபக்ஸ, எஃப். ஆர். சேனநாயக்கா, ரி. டொன் பிலிப் விஜயவர்த்தன ஆகியோர். இலங்கையரான மேட்டுக்குடியினர் அமைவதில் தெங்குக்கைத்தொழில் ஒரு முக்கியமான பங்கெடுத்தது. தெங்குக் காணிகளில் அந்நியர்களின் மொத்த உரிமைப் பங்கு 1934-ம் ஆண்டில் 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம்வரை இருந்ததாகக் கணக்கிடப்பட்டது. (இலங்கை வங்கித் தொழில் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை 1934, பக்கம் 165). 1952-ம் வருட விவசாயக் கணக்கெடுப்பின்படி, (20 ஏக்கருக்கு மேற்பட்ட உடைமைகளுடன்) தெங்குப் பயிர்ச்செய்கை நடைபெற்ற தோட்டக் காணிப் பரப்பில், 8 சதவிகிதத்துக்குக் குறைவானவையே பிரஜைகளல்லாதாருக்கும் இலங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளுக்கும் சொந்தமாயிருந்தன. (விவசாயக் கணக்கெடுப்பு — பக்கம் 7)

மேலும், பிரதானமாகச் சுதேசக் காணி உடைமை, சிறிய காணி உடைமைகளின் முதன்மை ஆகிய இவ்வுண்மை தெங்குக் கைத்தொழிலின் இன்னொரு முக்கியமான சிறப்பம்சமாகும். சிறிய காணி உடைமை என்பது பத்து ஏக்கருக்குக் கீழுள்ள காணி உடைமை என நாம் வரைவிலக்கணம் கூறுவோமேயானால், அப்பொழுது தெங்குக் காணிகளில் 50 சதவிகிதம் சிறிய காணி உடைமைகளேயாகும். இவற்றில் இன்னொரு 23 சதவிகிதம் 10 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர்வரையுள்ள சிறிய தோட்டங்களாகும். இவ்விதமாக, தோட்டப் பகுதி எனச் சரியாகச் சொல்லத்தக்க பகுதி (அஃதாவது 50 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட காணி உடைமைகள்) மொத்தத் தெங்குக் காணிப் பரப்பில் கால் பங்குக்குச் சற்று அதிகமான பரப்பாக மட்டுமே அமைந்துள்ளது.

ஈரப் பிரதேசத்தில் உள்ள விவசாயியையும், சிறிய காணிச் சொந்தக்காரரையும் பொறுத்தவரை தெங்கு அவர்களுக்கு ஒரு கவர்ச்சியான பொருளாதார சங்கதியாயிருப்பது நிரூபணமாயிற்று. அதைச் சுலபமாக வளர்க்கலாம்; மனிதன் முறைப்படி கவனிக்காமலிருந்தாலும்கூட, 60 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்துக்குப் பயனளிக்கும் ஆயுளைக் கொண்டுள்ளது. தென்னை மரம் கிராம மக்களுக்கு முடிவில்லாப் பயன்களைக் கொண்டுள்ளது. உணவுப் பயிர் என்ற முறையில் அது நெல்லுக்கு மட்டுமே இரண்டாவதாகும். இதனாற்றான் தெங்குக் கைத்தொழில் கிராமப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைந்து, கிராம சமுதாயத்தின் ஒரு பிரிக்க முடியாத பாகமாகிவிட்டது. நாட்டிலுள்ள மொத்தத் தென்னங் காணிப் பரப்பில் மூன்றிலொரு பங்குக்கு மேல் விவசாயிகளுக்கும் சிறிய காணிக்காரர்களுக்கும் சொந்தமாயுள்ளது. (5 ஏக்கருக்கு உட்பட்ட காணி உடைமைகள்). (மொத்தத் தென்னங் காணிகளில் 38 சதவிகிதமாக அமைந்துள்ள) 5 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர் வரையான காணிகள் பெருமளவுக்குப் பல்வேறு வகையான நடுத்தர வகுப்பினருக்குச் சொந்தமாயிருக்கின்றன — உதாரணமாக, கிராம வியாபாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், கிராம உயரிகள், அரசாங்க ஊழியர்கள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள் முதலியோர் போன்ற உயர் தொழிலர்கள் ஆகியோர். இவ்விதமாக, தெங்குக் கைத்தொழில் இத்தகைய நடுத்தர வருமானமுள்ள குழுக்களின் ஒரு முழு அடுக்குக்கும் ஒரு பொருளாதார வாய்ப்பைச் சிருஷ்டித்தது.

தெங்குக் காணிகள் பெருமளவுக்கு உள்நாட்டினருக்குச் சொந்தமாயிருப்பதும், சிறிய காணி உடைமைகள் வகிக்கும் முதன்மையும், தெங்குக் கைத்தொழில் ஒரு கம்பெனி உருவத்தில் உள்ள வியாபார ஒழுங்கமைப்பு பொருட்படுத்தத்தக்கதாயிருக்கவில்லையென்ற உண்மையிலும் பிரதிபலிக்கின்றன. தனிப்பட்ட காணி உடைமையே முதன்மை வகிக்கின்றது. 1952-ம் வருட விவசாயக் கணக்கெடுப்பின்படி, தெங்குப் பயிர்ச்செய்கையின் கீழிருந்த மொத்தத் தோட்டக் காணிப் பரப்பில் 10 சதவிகிதத்துக்கு மேல் கம்பெனிகளுக்குச் சொந்தமாயிருக்கவில்லை.

## தெங்குக் கைத்தொழிலும் காணிச் சீர்திருத்தமும்

1972, 1975-ம் வருட காணிச் சீர்திருத்தத்துடன் தெங்குக் கைத்தொழிலின் கட்டுக்கோப்பில் பல புதிய பரிமாணங்கள் சேர்க்கப்பட்டன. அஃதாவது, தெங்குப் பிரதேசத்தின் ஒரு பகுதி அரசாங்கத்தின் உடைமையின் கீழும் முகாமையின் கீழும் வந்தது. தனியார் உடைமை 50 ஏக்கருக்கு வரையறுக்கப்பட்டது. சுமார் 119,000 ஏக்கர் காணிச் சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் அரசாங்கத்தின் உரிமையாக்கப்பட்டன; இச் சதவிகிதம் மற்றும் தோட்டப்பயிர்களில் விட பெருமளவு குறைவாயிருந்தது. (தேயிலையில் 38 சதவிகிதம், இறப்பரில் 18 சதவிகிதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, மற்றும் தோட்டப் பயிர்களுடன் ஒப்பிடுகையில் தெங்குப் பயிர் மிகப் பெரிய காணிப் பரப்பைக் கொண்டிருந்தபோதிலும், காணிச் சீர்திருத்தத்தின்கீழ் அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட தெங்குக் காணிகள் மிகக் குறைவாகும்.

இந்நிலைமை தெங்குக் கைத்தொழிலின் ஒரு பிரதான சிறப்பம்சத்தையே பிரதிபலிக்கின்றது. (இது ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது). இக்கைத்தொழிலிலுள்ள சிறிய காணிக்காரரின் முக்கியத்துவமும், ஒப்பியல் ரீதியாகத் தோட்டப் பகுதியின் சிறிய அளவும் அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட கம்பெனிக்குச் சொந்தமான தெங்குக் காணி முற்றிலும் அற்பமாகும் என்பதும் கவனிக்கத்தக்கது. 6,400 எக்கர் மட்டுமே அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்டது. அஃதாவது, அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட மொத்தத் தெங்குக் காணிகளில் 5 சதவிகிதமும் (எல்லாப் பயிர்கள் சம்பந்தமாகவும்) அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட சகல கம்

# தேங்காய் நுகர்வுப் பழக்கம்

சரித்திரம் முழுதும் நுகர்வோரின் உணவில் தேங்காய் அதே முக்கியமான நிலையை வகிக்கவில்லை. ராஜரட்ட நாகரிகம் அழிந்து, குடிமக்கள் நாட்டின் தென்மேற்குப் பகுதிக்கு மெது மெதுவாக நகர்ந்து சென்றதுடன் ஆரம்பமான ஒரு படிப்படியான நிகழ்வுப்போக்கின்மூலம் தேங்காய்களின் முக்கியத்துவம் அதிகரித்தது. குறைந்தது மன்னன் துட்டகைமுனு காலத்திலிருந்து (கி- மு· முதலாம் நூற்றுண்டு) தேங்காயைப்பற்றிய குறிப்புகள் மகாவம்சத்திலும் மற்றும் புராதன இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. மகாவம்சத்தில் உள்ள குறிப்புக்களின்படி ருவான்வெலிசாயா (தாகபம்)வின் நிர்மாணத்தில் ஈடுபட்டவர்களுக்குத் துட்டகைமுனு குரும்பையையும் இளநீரையும் பரிமாறினுர். பிந்திய காலவரைகள் சம்பந்தமாகத் தேங்காயைப் பற்றி இதே போன்ற சிறு சிறுகுறிப்புக்கள் பல்வேறு சரித்திர வரலாறுகளில் காணப்படுகின்றன. இக்குறிப்புகளிலிருந்து இந்த ஆரம்ப நாட்களில் மக்களின் உண்டியில் தேங்காய்கள் ஒரு முக்கியமான பங்கெடுத்தனவென்று முடிவுசெய்ய முடியாது. புராதன நாகரிகம் செழித்தோங்கிய வறண்ட பிரதேசத்தின் சீதோஷ்ண நிலை தெங்கை ஒரு வீட்டுத் தோட்டப் பயிராகவன்றி மற்றப்படி சாகுபடி செய்வதற்கு உகந்ததாயிருக்கவில்லை.

பண்டை இலக்கியங்களில் கிடைக்கக்கூடியதாயுள்ள சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, இந்த ஆரம்ப காலத்தில் அரிசிச் சோற்றுடன் உபயோகிக்கப்பட்ட பிரதான பொருள்கள் நெய், உருக்கித் தூயதாக்கிய வெண்ணெய், தயிர் போன்ற பால் பொருள்களேயாகுமென ஒருவர் முடிவு செய்யலாம். பாற்சோற்றுக்கு ஆதாரமாக விளங்கியது பசுப் பாலாகும். வறண்ட பிரதேசத்தில், விவசாயச் செய்கை அடிக்கடி கால்நடை வளர்ப்புடன் ஒன்றிணைக்கப்பட்டது. வெல்லத்தின் பிரதான மூலமாயிருந்த கரும்பும் பரந்த அளவில் சாகுபடி செய்யப்பட்டது. விளக்கேற்றுவதற்கும் மற்றும் குடும்பக் காரியங்களும் சமய நோக்கங்களுக்கும் உபயோகிக்கப்பட்ட எண்ணெய்கள் பெரும்பாலும் எள்ளெண்ணெய், நல்லெண்ணெய், உருக்கித் தூயதாக்கிய வெண்ணெய், இலுப்பை எண்ணெய், கெக்குன எண்ணெய் ஆகியனவாகவே இருந்தன.

பண்டைய நாகரிகம் அழிந்து, (13 ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில்) குடிமக்கள் நாட்டின் தென்மேற்குப் பகுதிக்குச் சென்றதுடன் மக்களின் உண்டி முறையில் தேங்காய்கள் அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கின. தேங்காய் எண்ணெய் உபயோகிக்கப்பட்டது பற்றியும் தென்னங் காணிகள் இருந்துவந்ததைப்பற்றியுமான குறிப்புக்கள் காலக்கிரம வரலாறுகளிலும் இலக்கிய நூல்களிலும் முன்னையிலும் அடிக்கடி காணப்படுகின்றன. உதாரணமாக மன்னன் இரண்டாம் பராக்கிரமபாகு (13 ம் நூற்றுண்டு) களனிக் கோவிலைப் புனருத்தாரணம் செய்த பின் விளக்குகளுக்கான எண்ணெய் பெறும் நோக்கத்துக்காகக் கோவிலுக்கு ஒரு பெரிய தென்னந் தோட்டத்தை உபயம் செய்தான். மேலும், இம்மன்னன் களுத்துறைக்கும் பெந்தோட்டைக்கும் இடையே தென்னை நடுவதற்கும் ஊக்கமளித்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர் வந்து சேர்ந்த காலத்தில் நாட்டின் மேற்குக் கரையோரப் பகுதியில் தென்னை விஸ்தாரமான அளவில் பயிர் செய்யப்பட்டது. உண்மையில், போர்த்துக்கேயர் காய்க்கும் ஒவ்வொரு பத்து மரங்களுக்கும் ஒரு பணம் வீதம் வரி விதித்தனர். டச்சுக்காரர் தெங்குப் பயிர்ச்செய்கையில் அதிக கவனஞ் செலுத்தியதோடு, கொழும்புக்குத் தெற்கே மேற்குக் கரையோரப் பகுதியில் தென்னை நடுவதற்குக் கட்டாயத் தொழிலாளர்களைக்கூட உபயோகித்தனர். தென்னை வளர்ப்பு இக்காலத்தில் கடலோரப் பகுதிகளுடன் நின்றுவிடவில்லை; ஆனுல், கண்டி இராஜ்ஜியத்தின் ஆட்சியிலிருந்த நாட்டின் உள் பகுதிகளுக்கும் பரவியிருந்தது. ரேபர்ட் நொக்ஸ் (1660—1679) தனது முதலாவது வீட்டை பண்டாரகொஸ்வத்தையிலுள்ள தென்னந் தோட்டமொன்றில் கட்டினுர். கண்டியர் வீடுகளில் தேங்காய்த் துருவி சர்வசாதாரணமாக உபயோகிக்கப்பட்டதாக அவர் குறிப்பிடுகிருர். 1612-ம் ஆண்டில், கண்டி மன்னன் பொதுவாக உபயோகிக்கப்படும் சகல பொருள்களும் ஒரு சல்லி வீதம் விற்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டான்.

குடியேற்ற நாட்டு ஆட்சி (காலனி ஆதிக்கம்) யின் கீழ் கால்நடை வளர்ப்பு சிதைந்ததுடன், உணவின் பால் ஆதாரம் தேங்காயைக் கொண்டு பிரதியீடு செய்யப்படும் இறுதிக்கட்டம் வந்தது. கண்டி இராஜ்ஜியத்தோடு போரில் ஈடுபட்டிருந்த அந்நிய நாட்டுத் துருப்புகளுக்கு உணவு வழங்குவதற்காகக் கால்நடைகள் கொல்லப்பட்டன. பிரிட்டிஷாரின்கீழ் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் பொதுவான மேய்ச்சல் நிலங்கள் இழக்கப்பட்டதனுல் விலங்கு வேளாண்மை மேலும் சிதைவதற்கு அடிகோலப்பட்டது. பிரிட்டிஷ் காலத்தில் கால்நடைகளின் தொகை குறையாவிட்டாலும் வளரவேயில்லை. முன்பு நடைமுறையில் மக்கள் எல்லோருக்கும் கிடைத்துக்கொண்டிருந்த பால் அதிகரித்த அளவில் ஓர் ஆடம்பர நுகர்ப் பொருளாகிவிட்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இரண்டாவது பாதியில் நாட்டின் ஜனத்தொகை இரு மடங்குக்கு மேல் அதிகரித்துவிட்டது. இக்காலத்திலே, தெங்குக் கைத்தொழிலும் விரிவடையத் தொடங்கியது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் முடிவில், இலங்கையிலே சுமார் 700,000 ஏக்கர் தெங்குப் பயிர்ச்செய்கையின் கீழிருந்தது. இது நாட்டு மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன் மட்டுமன்றி ஏற்றுமதி செய்வதற்கும் கிடைக்கக்கூடியதாயிருந்தது.

மூலம்— "இலங்கையில் தெங்குக் கைத்தொழிலைப் பற்றிய ஒரு பொருளியல் பரிசீலனை."
மக்கள் வங்கியின் வெளியீடு,
மார்ச் 1981.

## அட்டவணை 5

### தென்னங் காணிகளின் பரிமாணப் பகிர்வு

| காணி உடைமையின் பரிமாணம் | ஏக்கரின் தொகை ('000 ஏக்கர்) | மொத்தத்தில் சதவிகிதம் |
|---|---|---|
| 1 ஏக்கருக்குக் கீழ் | 67 | 06 |
| 1—5 ஏக்கர் | 336 | 29 |
| 5—10 ஏக்கர் | 177 | 15 |
| 10—15 ஏக்கர் | 264 | 23 |
| 50 ஏக்கருக்கு மேல் | 309 | 27 |
| மொத்தம் | 1,152 | 100 |

பெனிக் காணிகளின் மொத்தத்திலும் 1.5 சதவிகிதமும் மட்டுமேயாகும். இதுவும் சிறிய காணிக்காரரின் முக்கியத்துவத்தையும், இக் கைத்தொழிலில் சுதேசிகளுக்குள்ள பெருமளவு உடைமையையும் பிரதிபலிக்கின்றது. உள்நாட்டாரின் காணி உடைமைகளில் பெரும் பகுதி கம்பெனிகள் வசமன்றித் தனித்தனி உரிமையாளர்களிடமும் குடும்ப நிறுவனங்களிடமுமே இருந்தது; இதேவேளை தோட்டக் காணிப் பரப்பு (அஃதாவது 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணி உடைமைகள்) 1962-ம் ஆண்டில் மதிப்பிடப்பட்டவாறு ஏறக்குறைய 309,000 ஏக்கர் மட்டுமேயாகும். அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட தெங்குக் காணிகள் இந்தத் தோட்டக் காணிப் பரப்பில் 39 சதவிகிதமாகும். எனினும், 1962-ம் ஆண்டுக்குப் பின் காணிகள் சிறுசிறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டதனுலும், பல்வேறு விவசாயமல்லாத உபயோகங்களுக்குக் காணிகள் இழக்கப்பட்டதன் விளைவாகவும் தோட்டக் காணிப் பரப்பு மேலும் குறைந்திருக்கும். எனவே, 1970களின் மாறிய நிலைமைகளில், அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட காணிகளின் சதவிகிதம் 39 சதவிகிதத்தைவிட மிக உயர்வாயிருக்கும். ஒருவேளை, அது 40 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதம்வரை இருக்கலாம்.

காணிச் சீர்திருத்தத்தின் முதலாவது கட்டத்தில் (தெங்குக் காணிகளில் 95 சதவிகிதம் அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட 1972 — 74 இன்போது), அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலானவை முகாமை செய்யப்படுவதற்காகப் பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கையளிக்கப்பட்டன — (உதாரணமாக, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தேர்தல் தொகுதி மட்ட கூட்டுறவுச் சங்கங்கள் முதலியன). சில காணிகள் முகாமை செய்யப்படுவதற்காக (உதவி அரசாங்க அதிபர்கள், விவசாய உற்பத்தித்திறன் கமிட்டிகள் போன்ற) பல்வேறு விசேஷ ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இந்த ஸ்தாபனங்களில் பெரும்பாலானவற்றிற்குத் தோட்ட முகாமை முறையில் எந்தவித முன்னனுபவமும் இருக்க வில்லை. எனவே, தங்களுடைய முகாமையிலுள்ள காணிகளைப் பராமரிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமுரிய எந்தத் திட்டங்களும் அவைகளிடம் இருக்கவில்லை. அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட காணிகளின் முகாமையில் அவ்வப் பகுதி எம்- பீ- க்களுக்கும், மற்றும் உள்ளூர்மட்ட அரசியல்வாதிகளுக்கும் நேரடியான அதிகாரம் இருந்ததால், காணிச் சீர்திருத்தத்தின் இந்தக் கட்டம் தன்மையிலும், தொழிற்பாட்டிலும் பெருமளவுக்கு அரசியலைக் கொண்டதாயிருந்தது. இந்த ஏற்பாடுகளினுல் உற்பத்தித் திறன் பயனடைந்திருக்க மாட்டாது.

1977-ம் ஆண்டுக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட செயல் நியாய அடிப்படையிலான புனரமைப்புக் கட்டத்தின்போது, கூட்டுறவு தாபனங்களாலான முகாமை ஒழிக்கப்பட்டு, பெரிய தோட்டங்களில் (பரப்பில் 250 ஏக்கருக்கு மேலுள்ளவை) பெரும்பாலானவை முகாமை செய்யப்படுவதற்காக ஜனதா பெருந் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மாற்றப்பட்டன. 1980-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்தவாறு, ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையால் முகாமை செய்யப்பட்ட தெங்குக் காணிகள் 27,300 ஏக்கர் அல்லது அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட மொத்தத் தெங்குக் காணிகளில் 23 சதவிகிதம். (திட்ட அமுல் அமைச்சு, செயற்பாடு— ஜனவரி—ஜூன் 1980, பக்கம் 142.) மேலும் சில காணிகள் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை, தெங்கு ஆராய்ச்சிக் கழகம், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பெருந்தோட்ட முகாமைச் சேவைப் பிரிவு, தேசிய கால்நடைச் சபை போன்ற மற்றும் அரசாங்க முகவர் ஸ்தாபனங்களால் முகாமை செய்யப்பட்டுவருகின்றன. சில காணிகள் காணியற்ற விவசாயிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் கிராம

## அட்டவணை 6

### காணிச் சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் அரசாங்கத்துக்கு உரிமையாக்கப்பட்ட காணிகள் (ஏக்கர் கணக்கில்)

| | 1972-ம் வருட சட்டத்தின்கீழ் அரசுக்கு உரிமையாக்கப்பட்ட காணிகள் | | 1975-ம் வருட (திருத்தச்) சட்டத்தின் கீழ் அரசுக்கு உரிமையாக்கப்பட்ட காணிகள் | | | | மொத்தம் | சதவிகிதம் மொத்தத்தில் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தப் பரப்பு | மொத்தத்தில் சதவிகிதம் | ஸ்டர்லிங் கம்பெனிக் காணி | மொத்தத்தில் சதவிகிதம் | ரூபாக் கம்பெனிக் காணி | மொத்தத்தில் சதவிகிதம் | | |
| தேயிலை | 139354 | 25 | 130474 | 67 | 107118 | 88 | 376946 | 38.4 |
| இறப்பர் | 82563 | 15 | 23404 | 12 | 71431 | 32 | 177398 | 18.1 |
| தெங்கு | 112523 | 20 | 3695 | 02 | 2711 | 01 | 118929 | 12.1 |
| மற்றவை | 228972 | 41 | 37571 | 19 | 41553 | 19 | 808095 | 31.4 |
| மொத்தம் | 563411 | 100 | 195164 | 100 | 222813 | 100 | 981368 | 100 |

ஆதாரம்: காணிச் சீர்திருத்த விசாரணை ஆணைக்குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தரிப்புத் திட்டங்களுக்கும் உபயோகிக்கப்பட்டுள்ளன. இவ்விதமாக, காணிச் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட ஒரு விளைவு என்னவென்றால், சிறிய காணிக்காரர்களின் தொகை மேலும் அதிகரித்துள்ளதாகும். இதனால் தெங்குக் கைத்தொழில் நடைபெறும் தோட்டக் காணிப் பரப்பு குறைந்துள்ளது.

### முரண்பட்ட அக்கறைகளின் மோதல்

உள்நாட்டு நுகர்வு முக்கியமாயுள்ள எந்த வியாபாரச் சரக்கிலும், உற்பத்தியாளர் நலனும் நுகர்வாளர் நலனும் மோதிக் கொள்கின்றன. எனினும், தெங்குப் பொருள் கைத்தொழிலைப் பொறுத்தவரை, பலவிதமான நலன்கள், அடிக்கடி முரண்பாடான நலன்கள் பரஸ்பரம் செயற்படுவதனால், முடிவு செய்வது ஒரு சிக்கலான வேலையாகி விடுகிறது. கைத்தொழிலின் தொழிற்பாட்டில் நேரடியான தொடர்பு கொண்ட மாறுபட்ட நலன்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

#### நுகர்வாளர் :

கிரியாம்சையில், நாட்டு மக்கள் எல்லோரும் புதிய தேங்காய்களையும், தேங்காயெண்ணெயையும் நுகர்வோராவர்; இவ்விரு பொருள்களும் நுகர்வோரின் வரவு செலவுத் திட்டங்களில் பிரதான இடம் பெறுவதுடன், வாழ்க்கைச் செலவுகளை நிர்ணயிப்பதிலும் ஒரு பிரதான சக்தியாக விளங்குகின்றன. விலைகள் குறைக்கப்பட வேண்டுமென்று நுகர்வோர் நலன்கள் குறிப்பிடுகின்றன.

#### உற்பத்தியாளர் (விளைவிப்பவர்) :

விளைவிப்போரின் தொகைபற்றி எந்தப் புள்ளிவிபரங்களும் கிடைக்கககூடியனவாயில்லை; ஆனால், சந்தைப்படுத்தத்தக்க உபரி உற்பத்தியைக் கொண்டுள்ளவர்களின் தொகை 200,000 அல்லது அதற்கு மேலிருக்கலாம் என்று இலகுவாகக் கூறிவிடலாம். பேரம்பேசும் சக்தியை அதிகரிக்க (சிறிய காணிக்காரர்கள் உட்பட) எந்த உற்பத்தியாளர் ஸ்தாபனங்களுமில்லை. (மற்றும் இதுபோன்ற கைத்தொழில்களுடன் ஒப்பிடுகையில்) தெங்குப் பயிர்ச்செய்கையை ஓர் இலாபகரமான முயற்சியாக்குவதற்கு விலைகள் போதியவாறு உயர்வாயிருக்க வேண்டுமென்று உற்பத்தியாளர் நலன்கள் குறிப்பிடுகின்றன.

#### பதப்படுத்துவோர் :

தேங்காய்த் துருவலையும் தேங்காயெண்ணெயையும் உற்பத்தி செய்வோரின் தொகை 180 க்கு மேல் இருக்கிறது. இவர்கள் இக்கைத்தொழிலுக்குள்ளே ஒரு முக்கியமான அமுக்கக் குழுவாக அமைந்துள்ளனர். இவர்கள் தங்கள் நலன்களை வளர்க்கத் தங்களுடைய சொந்தச் சங்கங்களைக் கொண்டுள்ளனர். விளைவிப்போரிடமிருந்து மூலப்பொருளை இவர்கள் வாங்குகின்றனர். விலை மட்டம் எப்படி இருக்கிறதென்பதைப்பற்றி இவர்களுக்கு அக்கறை இல்லை. ஆனால், மூலப்பொருளை வாங்கும் விலைக்கும் நிறைவுசெய்த பொருளை விற்கும் விலைக்கும் இடையேயுள்ள விலை வித்தியாசத்தில் இவர்களுக்குச் சிரத்தை உண்டு. மூலப்பொருளை வாங்கும் விலையைக் குறைப்பதன் மூலமோ அல்லது (சாத்தியமான இடத்தில்) விற்கும் விலையை உயர்த்துவதன் மூலமோ விலை வித்தியாசத்தை ஆகக்கூடிய அளவுக்கு உயர்த்த இவர்கள் முயற்சி செய்வார்கள். எனவே இவர்களுடைய நலன்கள், விளைவிப்போர் ஏற்றுமதியாளர் ஆகிய இருசாராரின் நலன்களோடும் மோதுகின்றன. குறிப்பாக விளைச்சல் குறைந்த வருடங்களில் தேங்காய்த் துருவலைப் பதப்படுத்துவோரின் நலன்களும் தேங்காயெண்ணெயைப் பதப்படுத்துவோரின் நலன்களும்கூட மோதிக் கொள்வதுண்டு. வரையறுத்த அளவில் வழங்கப்படும் மூலப்பொருளுக்காக இவர்கள் போட்டியிடும்போதே இந்த மோதல் நிகழ்கின்றது. சில சமயங்களில் தேங்காயெண்ணெய் ஆலைக்காரர்கள் மூலப்பொருளுக்கு அதிக விலை கொடுத்து, தேங்காய்த் துருவல் ஆலைக்காரர்களைச் சந்தையிலிருந்து விரட்டிவிடுகின்றனர்.

#### ஏற்றுமதியாளர்கள் :

ஏற்றுமதியாளர்களில் சிலரே பதப்படுத்துவோராகவும் இருக்கின்றனர்; ஆனால், பெரும்பாலான ஏற்றுமதியாளர்கள் பதப்படுத்தும் நலன்கள் அற்றவர்களாகவே இருக்கின்றனர். விலைமட்டம் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி அவர்களுக்குச் சிரத்தையில்லை. ஆனால், வாங்கும் விலைக்கும் விற்கும் விலைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தில் அக்கறையுண்டு. இவர்கள் தங்களைக் கட்டுப்பாடான முறையில் சங்கங்களாக அமைத்துக் கொண்டிருப்பதுடன், சக்திவாய்ந்த ஒரு அமுக்கக் குழுவாகவும் விளங்குகின்றனர். ஏற்றுமதி விலை கூறப்பட்டதும், பதப்படுத்துவோரிடமிருந்து வாங்கும் விலையை அடித்துக் குறைப்பதன் மூலம் இலாபத்தின் அளவை உயர்ந்த பட்சமாக்க வேண்டும் என்றே இவர்களுடைய நலன்கள் கட்டளையிடுகின்றன. எனவே, ஏற்றுமதியாளர்களின் நலன்கள் பதப்படுத்துவோரின் நலன்களுடன் நேரடியாகவும் விளைவிப்போரின் நலன்களோடு மறைமுகமாகவும் மோதுகின்றன.

#### கால்நடை வளர்ப்புக் கைத்தொழில்

கால்நடை வளர்ப்புக் கைத்தொழிலில் கையிருப்பிலிருக்க வேண்டிய பிரதான தீனி பிண்ணாக்காகும் — இது தேங்காயெண்ணெய் ஆலைக் கைத்தொழிலின் ஓர் உற்பத்திப் பொருளாகும். (ஒரு தொன் எண்ணெயிலிருந்து அரைத் தொன் பிண்ணாக்கு உற்பத்தி செய்யப்படுகிறது.) கொப்பராவுக்கு (எனவே தேங்காய்களுக்கு)க் கொடுக்க வேண்டிய விலை எண்ணெய், பிண்ணாக்கு ஆகிய இரண்டின் விலைகளையும் சார்ந்திருக்கின்றது. எண்ணெயின் விலை கூறப்பட்டதும், பிண்ணாக்கின் விலை எவ்வளவுக்கெவ்வளவு உயர்வாயிருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கொப்பராவின் விலையும் (எனவே தேங்காய்களின் விலையும்) உயர்வாயிருக்கும். ஆதலின், விளைவிப்போரின் நலன்கள் பிண்ணாக்குக்கு உயர்ந்த விலை கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடும் அதேவேளையில் கால்நடை வளர்ப்புக் கைத்தொழிலின் நலன்கள் பிண்ணாக்கின் விலை குறைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடும்.

#### அரசாங்க நிதிகள்

தெங்குப் பொருள்கள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் அரசாங்க வருமானத்தின் ஒரு முக்கியமான மூலமாக அமைந்துள்ளன. (இது 1979-ம் ஆண்டில் அரசாங்க வருமானத்துக்கு 6 சதவிகிதப் பங்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்புச் செய்தது). ஏற்றுமதித் தீர்வை தேசிய ஏற்றுமதி விலைக்கும் ஏற்றுமதியாளர்களின் நிகர பெறுவனவுக்குமிடையே ஆப்பைப் போல ஒரு பிளவை உண்டாக்குகின்றது. எனவே, உள்நாட்டு விலைகள் சர்வதேச விலை மட்டங்களுக்குக் கீழே தள்ளப்படுகின்றன. இது நுகர்வோருக்கு ஓர் அனுகூலமாகும். ஏனென்றால், மற்றும்படி நுகர்வோர் அதிக விலை கொடுக்கவேண்டியிருக்கும். அரசாங்கத்துக்கு அதிக வருமானத்தைத் திரட்டுவதற்காக ஏற்றுமதிகளின் அளவுகளும் ஏற்றுமதித் தீர்வைகளின் மட்டமும் அதிகரிக்க வேண்டுமென்று அரசாங்க நிதியின் நலன்கள் குறிப்பிடும். ஏற்றுமதித் தீர்வைகளின் பளு இறுதியில் விளைவிப்போரினால் குறைந்த விலைகளின் உருவில் சுமக்கப்படுகிறது.

## வெளிநாட்டு நாணயம்

வெளிநாட்டு நாணய சம்பாத்தியங்களின் கோணத்திலிருந்து நோக்குமிடத்து, நாடு ஏற்றுமதிகளின் கன அளவை உயர்த்த வேண்டும். ஆனால், ஏற்றுமதிகளை அதிகரிக்கும் முயற்சிகள் உள்நாட்டு நுகர்வு நலன்களோடு மோதலாம். தேங்காய் விளைச்சல் போதியவாறு விரிவடைந்து வந்தாலன்றி மற்றும்படி ஏற்றுமதிகளும் உள்நாட்டு நுகர்வும் விளைச்சலுக்குப் போட்டியிடும். இலங்கையில் தேங்காய் விளைச்சல் போதிய அளவுக்கு விரிவடைந்து வரவில்லை. இதற்கு நேர்மாறாகவே நடந்துள்ளது. இல்லையேல், ஏற்றுமதிகள் அதிகரிக்கப்பட்டால், உள்நாட்டு நுகர்வுக்குக் குறைந்த அளவு தேங்காய்களே கிடைக்கக் கூடியதாயிருக்கும். ஆனால், ஏற்றுமதிகளின் மட்டம் உயரவேண்டும் என்றே ஏற்றுமதியாளர்களின் நலன்களும், வெளிநாட்டு நாணய வளங்களின் நலன்களும் குறிப்பிடுகின்றன.

எந்தக் குறிப்பிட்ட காலகட்டத்திலும் தெங்குக் கைத்தொழிலின் தொழிற்பாடு ஒன்றில் இந்தப் பல்வேறு நலன்களுக்கிடையே ஏதாவதொரு சமரச ஏற்பாட்டையோ அல்லது ஒரு நலனோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நலன்களோ மற்ற நலன்கள்மீது ஆதிக்கஞ் செலுத்துவதையோ பிரதிபலிக்கலாம். வெவ்வேறு காலங்களில் பல்வேறு நலன்கள் அரசாங்கக் கொள்கை நிர்ணயத்தின்மீது செல்வாக்கைப் பிரயோகித்து வந்துள்ளன. உள்நாட்டு நுகர்வு நலனுக்கு மேல் வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்துக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் இருந்துள்ளன. மற்றக் காலங்களில் இந்நிலைமை தலைகீழாக மாறி, உள்நாட்டு நுகர்வு நலனுக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்புக் கைத்தொழிலின் நலன்களை முன்னிட்டு, பிண்ணாக்கின் விலைகள் குறைவாக இருக்க வேண்டிய அவசியம் வெவ்வேறு காலங்களில் முக்கிய கவனத்தைப் பெற்ற ஒரு முகாந்தரமாக இருந்து வந்திருக்கிறது. இதனால் தேங்காய் உற்பத்தியாளர் கால்நடை உற்பத்தியாளருக்குப் பண சகாயம் (மானியம்) அளிக்கவேண்டி உள்ளது. பதப்படுத்துவோரும் ஏற்றுமதியாளரும் தங்கள் நலன்களுக்கு உகந்த விலைக் கொள்கைகளைச் சாதிப்பதற்காக அதிகாரிகளை இடையறாது நெருக்கி வந்துள்ளனர். அண்மையில் விளைவிப்போருக்கு ஆதரவான ஒரு போக்குக் காணப்பட்டது. விளைவிப்போர் கடந்த காலத்திலே மேற்கொள்ளப்பட்ட அநேக விட்டுக் கொடுக்கும் கொள்கைகளுக்கு அடிக்கடி பலியாகி உள்ளனர். உதவி மானியம் பெற்ற உள்ளீடுகள் (உதாரணமாக உரம்) ஏனைய நலன்களை அடைவதற்காக உற்பத்தியாளர் நலன்கள் செய்த தியாகத்தைப் போதிய அளவுக்கு ஈடுசெய்யத் தவறிவிட்டன. தெங்கு உற்பத்தியாளர்கள் பெரும்பாலும் கட்டுப்பாடான முறையில் அமைந்திருக்காததால் அவர்களுடைய பேரம் பேசும் சக்தி மிகப் பலவீனமாயுள்ளது. எனவே, அவர்களுடைய நலன்கள் பதப்படுத்துவோர் நுகர்வோர் ஆகியோரின் நலன்கள் போன்ற மிகச் சக்தி வாய்ந்த நலன்களால் புறக்கணிக்கப்பட்டுவிடலாம். சமீபத்திய திட்டமிடல்ஆவணமொன்று தெரிவித்துள்ள கருத்து:

"(தெங்கின்) அபிவிருத்தி வேலைத் திட்டத்தைக் கட்டுப்படுத்திய மிக முக்கியமான காரணி யாதெனில் தேங்காய்களுக்குக் கிடைத்துவந்த இலாபமற்ற விலையாகும். மறுமதிப்பீடு செய்வதற்கு எந்த உபரிப் பணத்தையும் விட்டு வைப்பதற்கு இது போதாததாயிருந்தது. நுகர்வோரைப் பாதுகாக்கப் போதிய உள்நாட்டு வழங்கல்களைப் பராமரிக்க வேண்டும் என்ற ஆவலே கடந்த காலத்தில் ஏற்றுமதிக் கொள்கைகளையும், தீர்வை அமைப்பையும் உருவாக்கி உள்ளது. இந்த நடவடிக்கைகளின் விளைவாக உற்பத்தியாளரின் விலை தாழ்த்தப்பட்டுள்ளது." (நிதி, திட்டமிடல் அமைச்சு, பொது முதலீடு: 1980—84 (ஜூலை 1980), பக்கம் 46.)

பல்வேறு நலன்களுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்தக் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக உற்பத்தியாளருக்கு எதிரான பாகுபாடு மட்டுமே ஏற்பட்டுள்ளது. இலாபங்களைப் பெற ஒவ்வொரு நீண்ட காலத்தில், அதிகரித்த நலனுக்கும் உள்ள திறமை, மொத்த விளைச்சலில் தொடர்ந்து ஏற்படும் அதிகரிப்பையே பொறுத்திருக்கும்.

## தென்னை உற்பத்தி ஏற்றுமதிகள்

தென்னை மரத்தில் உள்ள எல்லாவற்றையும் ஏதோ ஒரு வகையில் ஏற்றுமதி செய்யலாம். இலங்கையின் பிரதான தெங்கு உற்பத்திகளை மூன்று விரிவான பிரிவுகளுக்குள் உள்ளடக்கலாம்.

(அ) பருப்புத் தயாரிப்புக்கள் கொப்பரா, எண்ணெய், தேங்காய்த் துருவல்.

(ஆ) மட்டைத் தயாரிப்புக்கள்- பல்வேறு கயிறு, தும்புத் தயாரிப்புக்கள்.

(இ) சிரட்டைத் தயாரிப்புக்கள்- சிரட்டைத் தூள், கரி, காபன்.

பருப்புத் தயாரிப்புக்கள் தென்னை மரத்தின் பிரதான தயாரிப்பாக உள்ள அதேவேளை, மட்டை, சிரட்டைத் தயாரிப்புக்கள் அதன் உப-தயாரிப்புக்களாகக் கருதப்படுகின்றன. இவை தவிர, தென்னம் ஈர்க்கு, தென்னம் மரம், சிரட்டை, மரம் என்பவற்றினால் தயாரிக்கப்பட்ட விநோதப் பொருட்கள், தென்னங் கன்றுகள், புதிய காய்கள், பிண்ணாக்கு, க்ளிசரீன், கொழுப்பு அமிலங்கள், இரசாயனப் பொருட்கள், தே. எ. பாலமைந்த உணவுப் பதார்த்தங்

கள் போன்ற பொருட்களையும் ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

உலகில் உள்ள ஏனைய தென்னை உற்பத்தி நாடுகளை விடவும், இலங்கை மிகவும் செறிவான முறையில் ஏற்றுமதி வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. உலகின் பாரிய தென்னை உற்பத்தி நாடான பிலிப்பைன்ஸ், தும்புக் கைத்தொழிலை விருத்தி செய்யாது இருப்பதுடன், அதன் மட்டைகள் பெருமளவுக்குப் பயன்படுத்தப்படாதுள்ளன.

1960—1980 இடைப்பட்ட காலகட்டத்தில் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் தென்னந் தயாரிப்புக்களின் பங்கு குறைந்த அளவு 7 சதவீதத்தில் (1960)ல் இருந்து 19 சதவீதம் (1963ல்) வரை வேறுபட்டுச் சென்றுள்ளது. அண்மைக் காலங்களில் 8—10 சதவீதங்களாக வீழ்ச்சி அடைந்தமை தவிர, பெரும்பாலான வருடங்களில் மொத்த ஏற்றுமதியில் தெங்குப் பொருட்களின் பங்கு 14—15 சதவீதத்திற்கு இடையிலிருந்து சென்ற தசாப்த காலத்தில் பெரும்பாலான வருடங்களில் தெங்குப் பொருட்கள் மூலம் பெறப்பட்ட ஏற்றுமதி வருமானம் 40 கோடி ரூபாவுக்கும் 60 கோடி ரூபாவுக்கும் இடைப்பட்டதாக இருந்து வந்துள்ளது. இவ் வருமானத்தில் பருப்புப் பொருட்கள் 75—80 சதவீத பங்களிப்பினைச் செய்துள்ளன. அண்மைக் காலங்களில் தென்னை ஏற்றுமதி வருமானத்தில் உப தயாரிப்புப் பொருட்களின் முக்கியத்துவம் தெளிவாக அதிகரித்து வந்துள்ளது. இது பருப்புத் தயாரிப்புக்களின் ஏற்றுமதி வீழ்ச்சியின் அளவினைப் பிரதிபலிக்கின்ற அதேவேளை, துணைத் தயாரிப்புக்கள் ஏற்றுமதியின் அதிகரித்த போக்கினையும் காட்டுகின்றன.

1970ல் தெங்குப் பொருள் மூலம் பெறப்பட்ட மொத்த ஏற்றுமதி வருமானத்தில் ஏறக்குறைய 25 சதவீதம் துணைப் பொருட்கள் ஏற்றுமதியிலிருந்தே பெறப்பட்டது. சென்ற மூன்று தசாப்த கால துணைப் பொருள் ஏற்றுமதி போக்குகளை நுண்ணாய்வு செய்தால் கீழ்க்காணும் பண்புகள் வெளிப்படுகின்றன.

# தோற்றமும் வளர்ச்சியும்

இன்று இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்றுமதித் துறையின் அடித்தளமாக விளங்குகின்ற தேயிலை, தென்னை இறப்பர் என்பன 1880 க்களில் கோப்பிக் கைத்தொழிலின் வீழ்ச்சியின் ஆரம்பத்துடன் துவங்கி ஏறக்குறைய இரு தசாப்த குறுகிய காலப் பகுதிக்குள் வேரூன்றியவையாகும். இக் காலப்பகுதியில் ஒவ்வொரு பண்டத்தினதும் செய்கை நிலப்பரப்பு, ஏற்றுமதி அளவு, ஏற்றுமதிப் பெறுமானம் என்பன விரைவாக விஸ்தரிக்கப்பட்டது.

தேயிலை, சிங்கோனு போன்ற இலாபகரமான பயிர்களைக் கோப்பித் தோட்டங்களில் பிரதியீடு செய்ததன்மூலம், கோப்பி வீழ்ச்சியின் பாதிப்புக்கள் ஓரளவுக்கு ஈடு செய்யப்பட்டன. இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு பிரதான பண்டம் என்ற வகையில் சிங்கோனுவின் எழுச்சி குறுகிய காலம் நிலவியபோதிலும், அது பொருத்தமான ஒன்ருகக் காணப்பட்டது. 1872 ல் 500 ஏக்கர்கள் மாத்திரமே சிங்கோனுச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது; 1883 ல் இது 65,000 ஏக்கர்களாக அதிகரித்தது . இவ்வாண்டில் கோப்பி ஏற்றுமதி மிக மோசமாக வீழ்ச்சி அடைந்தபோது 70 இலட்சம் இருத்தல்களுக்குக் கூடுதலான சிங்கோனு (365,088 பவுண்) ஏற்றுமதி செய்யப்பட்டது; இலங்கையில் வீழ்ச்சி அடைந்துகொண்டிருந்த ஏற்றுமதி வருமானங்களுக்கு இது உற்ற துணையாக விளங்கியது. எவ்வாருயினும், இலங்கையினதும் ஜாவாவினதும் ஏற்றுமதி இலண்டன் சந்தையைப் பாதித்தமையால் விலைகள் வீழ்ச்சி அடையத் துவங்கின. சிங்கோனுச் செய்கைக்குப் பிரதியீடாக தேயிலைக்கு வாய்ப்புக்கள் இருந்தமையால் ஒப்பீட்டு ரீதியில் சிங்கோனு இலாபமற்ற பயிராக மாறியது; 1884ன் பின்னர் "தேயிலை பெருமளவுக்கு சிங்கோனுவின் இடத்தைப் பிடித்ததுடன், இளம் சிங்கோனுப் பயிர்கள் களை போன்று பிடுங்கப்பட்டன." 1902 ல் 300,000 இருத்தல் சிங்கோனு மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்டது; 1915 ல் ஏற்றுமதி 20,393 இருத்தல்களாக வீழ்ச்சி அடைந்ததுடன் பெறுமதியும் 88 பவுண்களாகக் குறைவு பெற்றது.

இலங்கையில் தெங்குக் கைத்தொழிலின் வேர்கள் தேயிலையை விடவும் பழமைவாய்ந்தவை. நீண்ட காலமாகத் தென்னை மரம் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலும் வீட்டுத் தோட்டங்களிலும் செழித்து வளர்ந்துவந்துள்ளது. இதன் உற்பத்திப் பொருட்களிலிருந்து பெறப்பட்ட பல்வேறு பயன்பாடுகளும் இலங்கைக் கிராமியப் பொருளாதார வாழ்க்கையில் ஒரு பிரதான அம்சமாக மாற்றியது. 19 ம் நூற்ருண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கை தேங்காய், கொப்பரு, வெல்லம் எண்ணெய் போன்ற தென்னந் தயாரிப்புகளை இந்தியாவுக்கும் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தது. 1820 முதல் தடவையாக தேங்காய் எண்ணெய் இங்கிலாந்துக்குக் கப்பலேற்றப்பட்டது. 1840—50 காலகட்டத்தில் ஒரு சில ஐரோப்பிய பெருந் தோட்டங்கள் நிறுவப்பட்டதனை தொடர்ந்து தென்னையை முறையாகப் பயிரிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனுல், 1860 ல் உள்ளூரில் மேல், வட—மேல் மாகாணங்களுக்குப் பயிர்ச்செய்கை பரவும் வரையிலும் குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பு ஏற்படவில்லை. 1860 ல் 250,000 ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டது; 1893 ல் இப்பரப்பளவு 650,000 ஏக்கராக அதிகரித்தது. 1903 ல் 712,000 ஏக்கர்களில் பயிர்ச்செய்கை இடம்பெற்றதாக இவ்வாண்டுக்குரிய நீல ஏடு குறிப்பிடுகின்றது; ஆனுல் பர்குசன் இதனை 650,000 ஏக்கர் எனச் சீர் செய்கின்ருர். பின்னர் குறிப்பிடப்பட்ட இப்பரப்பளவில் 200,000 ஏக்கர்கள் அல்லது 30 சதவீதம் மாத்திரமே முறையான பெருந் தோட்டங்கள் என மதிப்பீடு செய்யப்பட்டன. ஆரம்பத்தில் இருந்தே இக்கைத்தொழில் அபிவிருத்தியில் இலங்கையர் பங்கெடுப்பு இடம் பெற்றது. பெருந் தோட்டங்களைத் திறப்பதற்கு ஒப்பீட்டு ரீதியிலான குறைந்த மூலதனச் செலவும், கோப்பி, தேயிலை என்பவற்றுடன் ஒப்பிடுமிடத்து குறைந்த அளவிலான ஊழியத் தேவையும் இலங்கையர்களின் முதலீட்டினைத் தூண்டிய பிரதான காரணிகளாகும். 1887 ல் இருந்த 500,000 ஏக்கர் மொத்த நிலப்பரப்பில் 30,000 ஏக்கர் தவிர ஏனையவை இலங்கையர் உடைமையில் இருந்ததாக பர்குசன் மதிப்பீடு செய்துள்ளார்.

மொத்த ஏற்றுமதியுடன் ஏற்றுமதியின் விகிதாசாரப் பெறுமதி மாற்றங்களை ஒப்பிடுமிடத்து இலங்கையின் பொருளாதாரத்தில் தெங்குக் கைத்தொழிலின் வளர்ந்து வருகின்ற முக்கியத்துவத்தினை இலகுவாக மதிப்பீடு செய்யலாம்—

| | | |
|---|---|---|
| 1870 | — | 4 |
| 1880 | — | 9 |
| 1910 | — | 17 |
| 1920 | — | 27 |

இருபதாம் நூற்ருண்டில் தேயிலைச் செய்கை விரிவடைந்தது போன்று தெங்குச் செய்கையின் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவு விரிவடையவில்லை.

மூலம்— "ஒரு ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் ஸ்திரமின்மை"
காமினி கொரியா, 1975



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தென்னம் பயிரில் வீழ்ச்சிப் போக்கு இருந்த போதிலும், பருப்புப் பொருட்களைப் போலல்லாது, துணைப் பொருள் ஏற்றுமதியில் தெளிவான ஓர் உயர்ச்சிப் போக்கு தென்படுகின்றது.

(2) பருப்புப் பொருட்களுடன் ஒப்பிடுமிடத்து, வருடாந்த ஏற்றுமதிப் பரிமாணத் தளம்பல் குறிப்பிடத்தக்களவுக்கு குறைவாகும்; இத்தளம்பல்கள் ஏற்றுமதி நிரம்பலை விடவும் பெருமளவுக்கு ஏற்றுமதிக் கேள்வித் தளம்பலுடன் தொடர்புபட்டதாகும்.

(3) பெருமளவுக்குப் பதனிடப்பட்ட அல்லது பெறுமதி கூடிய பொருட்களுக்குச் சார்பாக ஏற்றுமதி உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### பருப்புப் பொருள் ஏற்றுமதி

சென்ற மூன்று தசாப்த கால (1950—79) பருப்புப் பொருள் ஏற்றுமதி மாதிரியை நுண்ணாய்வு செய்யின் இரு பிரதான பண்புகள் வெளிப்படுகின்றன.

(அ) ஏற்றுமதி நிரம்பலில் வருடா வருடம் கூடிய தளம்பல்

(ஆ) ஏற்றுமதி நிரம்பலில் ஒரு நீண்ட கால வீழ்ச்சிப் போக்கு.

சென்ற மூன்று தசாப்த கால கட்டத்தில் வருடாந்த ஏற்றுமதி நிரம்பல் மிகக் குறைந்த அளவு 30 கோடி காய்களுக்குச் சமனைவிருந்து 160 கோடி காய்களாக உயர்ந்தது. இலங்கையின் ஏனைய எந்த ஒரு ஏற்றுமதிப் பொருளதும் நிலை இவ்வளவு தீவிரமாக தளம்பவில்லை. ஒவ்வொரு தசாப்தத்தையும் தனியாக எடுத்து,ஆகக் குறைந்த, கூடிய ஏற்றுமதி நிலைகள் என்பன கீழ்க்காணும் அட்டவணையில் தரப்படுகின்றது.

பருப்புப் பொருள் ஏற்றுமதியின் சுழற்சிப் போக்கினை மேற்காணும் தரவுகள் தெளிவாக விளக்குகின்றன. எந்த அடிப்படையில் நோக்கினும் 8—10 வருட வட்டம் ஒன்றினைத் தெளிவாகக் காணலாம் (1955—64—72, 1958—69—77). இம் முப்பது வருட காலத்தில், ஏற்றுமதி நிரம்பல் ஆறு வருடங்களில் 130 கோடியாக அதிகரித்ததுடன், ஐந்து வருடங்களில் 70 கோடிக்குக் கீழ்ச்சென்றுள்ளது. பதினொரு வருடங்களில் இவை 100—130 கோடியாகவும், எஞ்சிய எட்டு வருடங்களில் 70—100 கோடியாகவும் இருந்து வந்துள்ளது.

ஏற்றுமதி நிரம்பலில் இருந்த இத் தீவிர தளம்பல் இரு காரணிகளின் விளைவாகும்.

(அ) வருடா, வருடம் தென்னைப் பயிரில் ஏற்பட்ட உயர் தளம்பல்.

(ஆ) உள்ளூர் நுகர்வுடன் ஏற்றுமதி தொடர்புபட்டிருத்தல்

சென்ற முப்பது வருட காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட தென்னை உற்பத்தி குறைந்த அளவு 180 கோடி காய்களில் இருந்து கூடிய அளவு 300 கோடி காய்களாக வேறுபட்டு அமைந்துள்ளது. சிறந்த பயிர் காலத்தில் 250 கோடி காய்களுக்கு மேலாக அதிகரித்து, மோசமான வருடங்களில் 220 கோடி காய்களாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

இவ் விளைச்சல் வேறுபாடுகள் பிரதானமாக இயற்கைக் காரணிகளின் விளைவாகும். இவ் விளைச்சல் தளம்பல்களுடன் ஏற்றுமதி நிரம்பல் மேலும், கீழும் அசைவுற்றுள்ளது. எவ்வாறாயினும், ஏற்றுமதி நிரம்பல் வேறுபாடு, விளைச்சல் வேறுபாட்டை விடவும் தீவிரமாக இருந்துள்ளது. ஒரு விளைச்சல் மாற்றம் ஏற்றுமதி நிரம்பலில் மிகையான பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

குறித்த ஒரு வருடத்தில் உள்ளூர் நுகர்வு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியைக் கவர்ந்து விடுவதனால், இதில் எஞ்சியதை அல்லது மிகையை ஏற்றுமதி செய்யவேண்டி இருப்பதே இதற்குரிய பிரதான காரணமாகும். உள்ளூர் நுகர்வில் உணவுத் தேவைக்குரிய காய்கள் முக்கியம் பெறுகின்றன. ஏற்றுமதித் தயாரிப்பாளர்கள் நிரம்பலுக்குக் கொள்வனவு செய்ய இயலாத வகையில் இவற்றின் விலைகள் அதிகமாக உள்ளன. இச் சூழ்நிலையில் பயிர் மோசமடையும் போது ஏற்றுமதிக்கு உரிய மிகை பெருமளவு வீழ்ச்சி அடைவதுடன், பயிர் செழிப்புக் காலத்தில் பெருமளவு அதிகரிக்கின்றது. பெரும்பாலும் உற்பத்தியில் ஏற்படுகின்ற ஒரு முழுமையான மாற்றம் (எழுச்சி அல்லது வீழ்ச்சி) ஏற்றுமதி நிரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற அதேவேளை, உள்ளூர் நுகர்வில் பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. உற்பத்தித் தளம்பலில் ஏற்படுகின்ற அதிர்ச்சியைப் பெரும்பாலும் உள்ளூர் நுகர்வு மாற்றங்களை விடவும் ஏற்றுமதி நிரம்பலே அனுபவிக்கின்றது.

சென்ற மூன்று தசாப்த கால ஏற்றுமதித் தரவுகள் வெளிப்படுத்துகின்ற இரண்டாவது முக்கிய அம்சம் யாதெனில், 1950—64 காலப் பகுதியில் 120—130 கோடி காய்களுக்குச் சமமாக இருந்த வருடாந்த ஏற்றுமதிச் சராசரி அதனைத் தொடர்ந்து வந்த காலப் பகுதியில் (1965—79) தொடர்ந்து வீழ்ச்சிப் போக்கைக் காட்டியதாகும். 1965—79 காலப் பகுதியில் பெறப்பட்ட வருடாந்தச் சராசரி ஏற்றுமதி மட்டம் (59 கோடி) 1950 காலப் பகுதியிலும், 1960ன் ஆரம்ப காலப் பகுதியிலும் இருந்

#### அட்டவணை—7
#### தெங்குப் பொருட்களில் இருந்து பெற்ற ஏற்றுமதி வருமானம்—எஸ்.டி. ஆர். மில்லியன்

(வருடாந்தச் சராசரி)

| | (1) பருப்புத் தயாரிப்புக்கள் | (2) துணை தயாரிப்புக்கள் | (3) மொத்தம் | (4) மொத்தத்தில் சதவீதம் | (5) தேசிய ஏற்றுமதி வருமானச் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1960—64 | 45.9 | 10.9 | 56.1 | 81.8 | 14.9 |
| 1965—69 | 46.0 | 9.7 | 55.7 | 82.6 | 15.6 |
| 1970—74 | 38.7 | 11.9 | 50.6 | 76.5 | 14.5 |
| 1975—79 | 46.8 | 14.8 | 61.6 | 76.0 | 10.1 |

குறிப்பு. இக்கால கட்டத்தில் இடம்பெற்ற பல்வேறு நாணய மாற்று விகிதாசார மாற்றங்களின் காரணமாக வெவ்வேறு வருடங்களின் ஏற்றுமதி வருமானங்களை ரூபா வடிவில் ஒப்பிடுதல் பொருத்தமற்றதாகும். ஆகையால் ஏற்றுமதி வருமான மாற்றங்களை அளவிடுவதற்கு சர்வதேச நாணய அலகான எஸ். டி. ஆர். பாவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை—8

### ஒவ்வொரு தசாப்தத்தினதும் ஆகக் கூடிய, குறைந்த ஏற்றுமதி நிலைகள் (கோடி காய்கள்)

| தசாப்தம் | உயர் ஏற்றுமதி மட்டம் (ஆண்டு) | குறைந்த ஏற்றுமதி மட்டம் (ஆண்டு) |
|---|---|---|
| 1950—59 | 154.2 (1955) | 93.5 (1958) |
| 1960—69 | 192.9 (1969) | 90.5 (1969) |
| 1970—79 | 125.8 (1972) | 28 (1977) |

### ஏற்றுமதி நிலை பற்றிய வருடங்களின் எண்ணிக்கை

| | 70 கோடிக்குக் கீழ் | 70—100 கோடிக்கு இடையில் | 100—130 கோடிக்கு இடையில் | 130 கோடிக்கு மேல் |
|---|---|---|---|---|
| 1950—59 | — | 2 | 5 | 3 |
| 1960—69 | — | 3 | 4 | 3 |
| 1970—79 | 5 | 3 | 2 | — |

ததனை விடவும் அரைவாசிக்கும் குறைவாகும். இவ்வீழ்ச்சிப் போக்குக்கு உரிய காரணம் மிகத் தெளிவானதாகும். உற்பத்தி வீழ்ச்சி அடைந்து வந்த சூழ்நிலையில், சனத்தொகை அதிகரிப்புடன், உள்ளூர் நுகர்வு அதிகரித்தமையே இதற்குரிய பிரதான காரணமாகும்.

1965க்கு முன்னர் வருடாந்தச் சராசரி உற்பத்தியில் 50 சதவீதத்துக்கும் கூடுதலாக இருந்த ஏற்றுமதி நிரம்பல் 1970க்களின் தசாப்தத்தில் 34 சதவீதமாகவும், பின்னர் 27 சதவீதமாகவும் மிகத் தீவிரமாக வீழ்ச்சி கண்டது. 1980க்களின் ஆரம்பத்தில் இது 15 சதவீதத்தை அண்மித்தது. 1970க்களில் ஏற்றுமதி நிரம்பல் 90 கோடி காய்களுக்கும் கீழாக வீழ்ச்சி அடைந்த வருடங்களின் எண்ணிக்கை மூன்றாக இருந்த அதே வேளை, முன்னைய இரு தசாப்தங்களிலும் ஒரு வருடத்திலாவது இத்தகைய வீழ்ச்சிஇடம் பெறவில்லை. இதேபோன்று முன்னைய இரு தசாப்தங்களிலும் இரு வருடங்களில் ஏற்றுமதி மட்டம் 130 கோடி காய்களுக்குச் சமமாக இருந்தது; 1970க்களில் ஒரு வருடத்திலாவது இது இடம் பெறவில்லை. 1970க்களின் உயர், தாழ் ஏற்றுமதி நிரம்பல் மட்ட வட்டம் முன்னைய இரு தசாப்தங்களை விட மிகவும் குறைவாக இருந்தது.எதிர் காலத்தில் இப் போக்குகள் தொடருமாயின், உள்ளூர் நுகர்வு அதிகரித்து முழு உற்பத்தியையும் கவர்ந்து, ஒரு சில வருடங்களில் ஏற்றுமதி நிரம்பல் முழுமையாகவே அகற்றப்பட்டு விடலாம்.

## கொப்பரா ஏற்றுமதிகள்

—(சராசரியாக வருடாந்த ஏற்றுமதிக் கன அளவு ஏறக்குறைய 5300 மெட்ரிக் தொன்களாயிருந்த) 1960 களின் முற்பகுதியில் பருப்புப் பொருள்களின் மொத்த ஏற்றுமதி வழங்கல்களில் ஏறக்குறைய 20 சத விகிதமாக அமைந்திருந்த கொப்பரா ஏற்றுமதிகள் 1970களின் பிற்பாதியில் ஏற்றுமதி வழங்கல்களில் ஒரு சத விகிதத்துக்குக் குறைவாக வீழ்ச்சியடைந்துவிட்டன. மொத்த ஏற்றுமதி வழங்கல்களில் தேங்காயெண்ணெயின் பங்கு 50 சதவிகிதத்துக்கும் 60 சதவிகிதத்துக்குமிடையே ஏறியிறங்குவதாயிருந்தது. 1960 களில் சராசரி வருடாந்த ஏற்றுமதிக் கன அளவு ஏறக்குறைய 80,470 மெட்ரிக் தொன்களாயிருந்தது. இது 1970 களில் 44,208 தொன்களுக்குக் குறைந்துவிட்டது. இந்நிலை ஏறக்குறைய 45சத விகிதக் குறைவைப் பிரதிபலிக்கின்றது. ஆனால், தேங்காய்த் துருவலின் பங்கு இடையறாது அபிவிருத்தியடைந்து வந்தது. 1960 களின் முற்பகுதியில் ஏறக்குறைய 27 சதவிகிதமாயிருந்த அதன் பங்கு 1970களின் பிற்பகுதியில் கிட்டத்தட்ட 50 சதவிகிதமாக அதிகரித்துவிட்டது.

பருப்புப் பொருள் ஏற்றுமதிகளின் அமைப்பில் இந்த மாற்றங்களை உண்டாக்கிய காரணிகள் யாவை? இயற்கையாகவே, ஏற்றுமதி செய்வதற்குக் கிடைக்கக் கூடியனவாயுள்ள வழங்கல்கள் குறைந்துவந்ததே நடுநாயகமான காரணியாகும். பல்வேறு சாத்தியமான ஏற்றுமதிப் பொருள்களிடையே—எதை ஏற்றுமதி செய்வது? என்ன அளவில் ஏற்றுமதி செய்வது? என்பதை நாடு தெரிவு செய்ய வேண்டியிருந்தது. 1970 களின் தசாப்தத்தில், பல ஆண்டுகளாக ஏற்றுமதி வழங்கல்கள் குறைந்த போது, பருப்புப் பொருள் ஏற்றுமதிகளின் அமைப்பைப் பற்றிய முடிவுகள் பெருமளவுக்கு அரசாங்கத்தினாலேயே எடுக்கப்பட்டு, தெங்குப் பொருள் சந்தைப்படுத்தும் சபையின் மூலம் அமுல் செய்யப்பட்டன. எண்ணெய் ஏற்றுமதிகளில் எந்தக் கணிசமான வெளிப்பாய்ச்சலையும் தடுக்க அதிகாரிகளால் யனமறிய முயற்சி செய்யப்பட்டதாகத் தோன்றுகிறது.

தேங்காய் விளைச்சல் வெகு குறைவாயுள்ள காலங்களில் கொப்பரா ஏற்றுமதிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்குப் பலத்த பொருளியல் காரணங்கள் இருக்கின்றன. உள்நாட்டு எண்ணெய் ஆலைக் கைத்தொழிலின் மூலப் பொருள் கொப்பராவாக இருக்கிறது. தேங்காய் விளைச்சலில் பற்றாக் குறையிருக்கும்போது, எண்ணெய் ஆலைக் கைத்தொழிலுக்குக் கொப்பரா வழங்கல் கிடைக்காது; ஆலைக் கைத்தொழிலில் நடவடிக்கைகள் குறைவதன் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் தலை தூக்குகிறது. மேலும், எண்ணெய் உற்பத்தி குறைந்தால், பிண்ணாக்கின் வழங்கலும் குறையும், இது

### அட்டவணை—9

### உற்பத்தி பல்வேறு மட்டங்களுக்குள் இருந்த போது, ஒவ்வொரு தசாப்த கால வருட எண்ணிக்கை

| உற்பத்தி மட்டம் (கோடி காய்களில்) | 1950—59 | 1960—69 | 1970—79 | மொத்த வருடங்கள் |
|---|---|---|---|---|
| 250—300 | 2 | 6 | 2 | 10 |
| 220—250 | 5 | 4 | 4 | 13 |
| 200—220 | 2 | — | 3 | 5 |
| 180—200 | 1 | — | 1 | 2 |

கால்நடைகள் மீது பாதகமான விளைவை உண்டாக்குகின்றது.(ஒரு தொன் தேங்காயெண்ணெயிலிருந்து ஓர் உப பொருளாக அரைத் தொன் பிண்ணாக்கு உற்பத்தி செய்யப்படுகிறது.) எனவே, எண்ணெய் ஆலைக் கைத்தொழிலின் நலனை முன்னிட்டு மட்டுமன்றிக் கால்நடை வளர்ப்புக் கைத்தொழிலின் நலனை முன்னிட்டும், தேங்காய் விளைச்சல் குறைவாயிருக்கும் காலங்களில் கொப்பரா ஏற்றுமதிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கொப்பரா ஏற்றுமதிகள் எதுவும் நடைபெறுவதாயிருந்தால், உயர்ந்த ஏற்றுமதி விலைகளைக் கொணரும் சிறந்த உண்ணத்தக்க ரகங்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படும். ஆலைகளுக்குத் தேவைப்படும் கொப்பரா ஏற்றுமதி செய்யப்படமாட்டாது. உள்நாட்டு ஆலைக் கைத்தொழிலுக்குத் தேவையான கொப்பராவுக்குப் பாரதூரமான தட்டுப்பாடு நிலவும்போது, சிறு தொகையான உண்ணத்தக்க கொப்பரா ஏற்றுமதிகள் கூட (ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 1000 தொன்கள்) ஒன்றில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட (1973-ம் வருடம்) அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட தொகைக்குப் பதிலாக ஆலைகளுக்குத் தேவைப்படும் தரச்சிறப்புள்ள கொப்பரா சமதொகையில் இறக்குமதி செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்துள்ளன. இதனால் உள்நாட்டு எண்ணெய் ஆலைக்காரர்களுக்கு (1974-ம் ஆண்டும் 1977-ம் ஆண்டும்) க் கிடைக்கக்கூடியனவாயுள்ள கொப்பரா வழங்கல்கள் குறைக்கப்படாமலே, உண்ணத்தக்க கொப்பராவுக்குக் கிடைக்கக் கூடியதாயுள்ள உயர் விலையை நாடு பெறுகின்றது.

ஏற்றுமதிப் பொருள் சேர்வையை நிர்ணயிப்பதில் எண்ணெய் ஏற்றுமதிகளுக்கு மேலாகத் தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகள் ஏன் முதலிடம் பெற்றுள்ளனவென்பது அடுத்தகேள்வி. இரு பொருள்களையும் உயர்ந்த மட்டங்களில் வைத்திருக்க ஏற்றுமதிவழங்கல்கள் போதாதிருக்கும்போது, ஏன் எண்ணெய் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைவதற்கு அனுமதிக்கப்பட்டு, தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது கால்நடை வளர்ப்புக் கைத்தொழில் சம்பந்தப்பட்டவரை, எண்ணெய் ஏற்றுமதிகளே அதிக அனுகூலம் அளிக்கத் தக்கவையாகும். ஏனென்றால், எண்ணெய் ஏற்றுமதிகள் அதிகரித்தால், எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கும்; அதன் பயனாகப் பிண்ணாக்கின் வழங்கள் அதிகரிக்கும். எனினும், இதற்கெதிராக, தேங்காய் துருவலின் ஏற்றுமதிகளைப் பலமாக ஆதரிக்கும் பல காரணிகள் இருக்கின்றன. தேங்காய்த்துருவல் ஏற்றுமதிமதிகளுக்குச் சமமான தேங்காயொன்றின் சராசரி ஏற்றுமதிப் பெறுமதி எண்ணெயின் சராசரி ஏற்றுமதிப் பெறுமதியை விடப் பெருமளவு உயர்வாயுள்ளது. இதனால் அந்நிய நாணயச் சம்பாத்தியங்களைக் கருத்திற் கொள்ளுமிடத்து, ஒப்பியல் ரீதியாகத் தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகள் அதிக கவர்ச்சியூட்டுவனவாயுள்ளன. தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகளினால் ஏற்படும் பிண்ணாக்கு இழப்புகளைத் தள்ளுபடி செய்தாலுங்கூட, தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகளின் (தேங்காய் ஒன்றுக்குச் சமமான) அந்நிய நாணயச் சம்பாத்திய சக்தி எண்ணெயின் சக்தியைவிட உயர்வாயுள்ளது. உதாரணமாக, 1976- 79-ம் வருடங்களின்போது, தேங்காய்த் துருவலுக்குச் சமமான தேங்காயொன்றின் சராசரி ஏற்றுமதிப் பெறுமதி எண்ணெயின் சராசரி ஏற்றுமதிப் பெறுமதியைவிட 42—73 சத விகிதம் உயர்வாயிருந்தது. (1977 ஆம் ஆண்டில் எண்ணெய் ஏற்றுமதிகள் கடுமையாகக் குறைக்கப்பட்டபோது, தேங்காய்த் துருவலின் உயர் பெறுமதி 156 சத விகிதம்வரை உயர்ந்திருந்தது.) மேலும், ஓரளவுக்கு மட்டுமே ஏற்றுமதிக் கைத்தொழிலாகவிருக்கும் (எண்ணெய் உற்பத்தியில் கணிசமான பகுதி உள்நாட்டு நுகர்வுக்குள் போய்விடுகின்றது) எண்ணெய் ஆலைக் கைத்தொழில் போலன்றி, தேங்காய் துருவல் கைத்தொழில் முற்றாக ஏற்றுமதித் திசை வழிப்படுத்திய ஒரு கைத்தொழிலாகவே விளங்குகிறது. உண்மையில் தேங்காய்த் துருவல் உள்நாட்டில் நுகரப்படுவதில்லை எனவே, எண்ணெயின் விஷயத்தில் போலன்றி, தேங்காய்த் துருவலின் ஏற்றுமதிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டால், ஒரு முழுக் கைத்தொழிலும் மூடப்பட்டு, தேங்காய்த் துருவலைப் பதப்படுத்துவதில் நேரடியாக ஈடுபட்டுள்ள ஏறக்குறைய 6000 பேரைக் கொண்ட தொழிலாளர் படை வேலையில்லாத் திண்டாட்டத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும். மேலும், தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டால் அல்லது குறைக்கப்பட்டால், நீண்ட காலத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். இலங்கை உலக சந்தைக்குத் தேங்காய்த் துருவலை வழங்கும் ஒரு பிரதான நாடாக விளங்குகிறது. ஏற்றுமதித் துறையில் இலங்கைக்கும் (மற்றப் பிரதான உற்பத்தி நாடான) பிலிப்பைன்சுக்குமிடையே போட்டி இருந்து வருகிறது.

பிரிட்டன் போன்ற சில நாடுகளில், பிலிப்பைன்ஸின் தேங்காய்த் துருவலுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தேய்காய்த் துருவல் நறுஞ் சுவையுடனிருப்பதால், நுகர்வோர் இலங்கைத் தேங்காய்த் துருவலையே விரும்புகிறார்கள். பிலிப்பைன்ஸ் தேங்காய்த் துருவல் கைத்தொழிலின் உற்பத்தித் திறன் பெருமளவுக்குப் பயன்படுத்தப் படாதிருக்கின்றதென்ற உண்மையை நோக்குமிடத்து, இலங்கை ஏற்றுமதிகளில் ஏற்படக்கூடிய எந்தப் பற்றாக் குறையையும் ஈடு செய்யப் பிலிப்பைன்ஸ் உற்பத்தியாளர்கள் துரிதமாக முனைந்துவிடுவாரென்பது தெளிவு.

அட்டவணை—10

உற்பத்தி, ஏற்றுமதிப் போக்குகள்

(ஐந்து வருடச் சராசரி)

| | மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்தி | ஏற்றுமதிப் பெறுமானம் வருடாந்தச் சராசரி | விகிதாசாரம் கோடிகாய்களில் |
|---|---|---|---|
| 1950—54 | 223.7 | 124.4 | 55.5 |
| 1955—59 | 234.4 | 120.2 | 51.3 |
| 1960—64 | 264.4 | 134.3 | 50.8 |
| 1965—69 | 251.7 | 105.3 | 41.8 |
| 1970—74 | 240.3 | 80.8 | 33.6 |
| 1975—79 | 223.0 | 61.2 | 27.4 |

சந்தைகள் பிலிப்பைன்சுக்கு இழக்கப்படுமானல், இலங்கையின் வழங்கல் நிலைமை அபிவிருத்தியடையும் போது இழந்துவிட்ட சந்தைகளை மீண்டும் பெறுவது சுலபமான காரியமாயிருக்காது. இந் நிலைமையில், இக் கைத்தொழிலின் நீண்டகால நலன்களை முன்னிட்டு, பிரதான சந்தைகளுக்குத் தேங்காய்த் துருவல் ஏற்றுமதி வழங்கல்கள் இடைநிறுத்தமின்றித் தொடர்ந்து நடைபெற்று வர வேண்டியதவசியமாகும். எனினும், தேங்காயெண்ணெயின் விஷயத்தில், ஏற்றுமதிகளின் இடைநிறுத்தத்துக்குப் பின் உலக சந்தைக்குள் பிரவேசிப்பது சுலபமாகும். ஏனென்ருல், இலங்கை உலக சந்தைக்கு எண்ணெயைச் சிறு அளவிலேயே வழங்கி வருகிறது. அத்துடன், ஒரு சந்தையைத் தேடிப் பிடிக்க, தேங்காய் எண்ணெய் மற்றுமநேக (மாற்று) எண்ணெய்களுடனும், கொழுப்புக்களோடும் போட்டியிட வேண்டியுமுள்ளது. விலைகளுக்குப் போட்டியிருந்து வரும் வரை, சர்வதேச சந்தைகளில் இலங்கையின் வழங்கல்களை விற்றுத் தீர்ப்பதில் எந்தக் கஷ்டமுமிருக்காது. வழங்கல்கள் குறையும் காலங்களில் எண்ணெய் ஏற்றுமதிகளைக் குறைப்பதற்குச் செயற்படும் மற்றுமொரு காரணியும் இருக்கிறது. அஃதாவது, உள்நாட்டு நுகர்வோரின் வரவு செலவுத் திட்டத்தில் தேங்காயெண்ணெய் ஒரு முக்கியமான பொருளாக இருந்து வருகிறது என்பதாகும். எனவே, உள்நாட்டு நுகர்வோருக்கு விற்கப்படும் தேங்காயெண்ணெயின் விலையில் எந்தச் செங்குத்தான உயர்வும் ஏற்படுவதைத் தடுக்க அதிகாரிகள் மீது வலுவான நெருக்குதல்களும் இருந்து வருகின்றன. இவ்விதமான நிலைமையில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் கொள்கை என்னவென்ருல், எண்ணெய் ஏற்றுமதிகளைக் குறைத்து, இச் செயல்முறைமூலம் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்கக் கூடியதாயுள்ள வழங்கல்களை அதிகரிப்பதாகும். (மேலும் ஒரு காரணியும் இருக்கிறது. உள்நாட்டுச் சவர்க்காரக் கைத்தொழிலில் தேங்காயெண்ணெய் ஒரு முக்கியமான மூலப்பொருளாக இருப்பதால், எண்ணெயின் உள்நாட்டு விலையில் ஏற்படும் எந்த உயர்வும் இன்னெரு முக்கியமான நுகர்வுப் பொருளான சவர்க்காரத்தின் விலை உயர்வதற்கு அடிகோலுகின்றது.) இவ்விதமாக, தேங்காய் விளைச்சல் பெருமளவுக்குக் குறையும் ஒரு நிலைமையில் எண்ணெய் ஏற்றுமதிகளை வரையறுப்பதில் நுகர்வோரின் நலன்கள் முக்கிய பங்கெடுத்து வந்துள்ளன.

ஆதலால், பருப்பு ஏற்றுமதிகளின் அமைப்பு ஏற்றுமதி உபரியின் பரிமாணத்திஞல் நிர்ணயிக்கப்படுகிறது. இது முறையே தேங்காய் விளைச்சலின் பரிமாணத்தைப் பொறுத்துள்ளது. நல்ல விளைச்சல் காணும் ஓர் ஆண்டில், ஏற்றுமதி உபரி உயர்வாயுள்ள போது, எல்லா மூன்று ஏற்றுமதிப் பொருள்களையும் (கொப்பரா, தேங்காய்த் துருவல், தேங்காயெண்ணெய்) எந்தச் சந்தர்ப்பத்தை இழக்காமலும் (இன்னெரு பொருளின் ஏற்றுமதியையோ அல்லது உள்நாட்டு நுகர்வையோ பலியிடாமலும்) ஏற்றுமதி செய்யலாம்.

## தேங்காய்த் துருவல் கைத்தொழில்

ஆலைகளை முழுச் செயற்பாட்டில் வைத்திருப்பதற்கு வேண்டிய தேங்காய்களைத் தேங்காய்த் துருவல் கைத்தொழில் கண்டு பிடித்துவிடும்; எண்ணெய் ஆலைக் கைத்தொழில் கொப்பராவைப் போதிய அளவில் பெற முடியும். அத்துடன், ஏற்றுமதி செய்வதற்கும் ஏதாவது கொப்பரா கிடைக்கும். எண்ணெய் ஆலைக்காரர்கள் சாதாரணமாக உட்கிரகிக்கக் கூடியதற்கு மேலுள்ள உபரிக்கு ஆலைக் கொப்பரா ஏற்றுமதிகள் ஒரு வெளி வழியாகும். (இது உள்நாட்டுச் சந்தையிலிருக்க அனுமதிக்கப்பட்டால், தேங்காய்களின் உள்நாட்டு விலையைத் தாழ்த்திவிடுமென்பது திண்ணம்). எனினும், விளைச்சல் வெகு குறைவாயுள்ள ஓர் ஆண்டிலே, என்ன பொருள்களை ஏற்றுமதி செய்வது என்பதையும், அவற்றை என்ன அளவில் ஏற்றுமதி செய்வது என்பதையும், அஃதாவது, ஏற்றுமதி செய்வதற்குச் சிறந்த சாத்தியமான பொருள்—சேர்வையைத் தெரிவு செய்யவேண்டியிருக்கும். தெங்குக் கைத்தொழிலிலுள்ள பல்வேறு நலன்களை—உள்நாட்டு நுகர்வோர் நலன்கள், எண்ணெய் ஆலைநலன்கள், கால்நடை வளர்ப்புக் கைத்தொழில் நலன்கள், ஏற்றுமதி நலன்கள்—ச் சமநிலைப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் இந்தப் பொருள்—சேர்வையை முடிவு செய்துள்ளது. கடந்த தசாப்தத்தில் பெறப்பட்ட அனுபவம் என்னவென்ருல், ஏற்றுமதி வழங்கல்கள் குறைந்துவரும் காலங்களில், கொப்பரா ஏற்றுமதிகள்தாம் முதலில் மறைவதாயிருக்கும்; அதைத் தொடர்ந்து எண்ணெய் ஏற்றுமதிகள் வெட்டப்படும். தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகள் எந்தப் பேரளவிலான குறைப்புமின்றித் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டு வந்துள்ளன.

பருப்புப் பொருள்களைப் பொறுத்த வரை, ஏற்றுமதிகளை வரையறுத்துள்ள காரணி எந்தக் கோரிக்கை வரையறையையும் விட வழங்கல் பற்ருக் குறையேயாகும். ஏற்றுமதி வழங்கல்கள் ஒப்பியல் ரீதியாக உயர்வாயிருந்த 1950களி

அட்டவணை—11

பருப்புப் பொருள்களின் ஏற்றுமதிக் கன அளவு (ஐந்து வருட சராசரி)

| | ஏற்றுமதிக் கன அளவு (மெட்ரிக் தொன்களில்) | | | மொத்தப் பருப்புப் பொருள் ஏற்றுமதிகளில் ஒப்பியல் பங்குகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | எண்ணெய் | தேங்காய்த் துருவல் | கொப்பரா (சதவிகிதம்) | எண்ணெய் (சதவிகிதம்) | தேங்காய்த் துருவல் (சதவிகிதம்) |
| 1950—54 | 30197 | 92394 | 51366 | 12 | 59 | 28 |
| 1955—59 | 46970 | 73155 | 56842 | 20 | 47 | 32 |
| 1960—64 | 52359 | 90710 | 51748 | 19 | 54 | 27 |
| 1965—69 | 23963 | 70229 | 53828 | 11 | 53 | 35 |
| 1970—74 | 16071 | 51113 | 46351 | 10 | 51 | 39 |
| 1975—79 | 944 | 37384 | 45407 | 1 | 49 | 50 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் 1960களிலும் கோரிக்கைக் கட்டுப்பாடுகள் ஒரு முக்கியமான காரணியாக இருந்திருக்கலாம். ஆனல், வழங்கல் கட்டுப்பாடுகள் சர்வ முக்கியத்துவம் பெற்ற 1970களில் நிலைமை இவ்வாறிருக்கவில்லை.

தேங்காய் எண்ணெயைப் பொறுத்தவரை, 1970களில் இலங்கை உலக சந்தைக்கு மிகச் சிறிய அளவில் வழங்கும் ஒரு நாடாகவே இருந்தது. 1970களில் மொத்த உலக ஏற்றுமதி வழங்கல்கள் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 15 இலட்சம் தொன் தேங்காய் எண்ணெயாயிருந்ததற்கெதிராக, இலங்கையின் சராசரி வருடாந்த ஏற்றுமதிகள் சுமார் 44,000 தொன்களாக மட்டுமே இருந்தன—அஃதாவது உலக மொத்தத்தில் ஏறக்குறைய 3 சதவிகிதம். இன்று தேங்காய் எண்ணெய்க்கான சந்தையை மற்றும் கொழுப்புகள், எண்ணெய்களுடன் தொடர்பில்லாது சுயேச்சையாயுள்ள ஒரு தனித்த சந்தையெனக் கருதுவது சாத்தியமில்லையென்பதைக் கவனிக்கும்போது, இலங்கையின் நிலை மேலும் முக்கியமற்றதாகிவிடுகிறது. இன்று, ஏறக்குறைய 16—18 மில்லியன் தொன்களாக உள்ள எண்ணெய்கள், கொழுப்புகளின் மொத்த உலக ஏற்றுமதி வழங்கல்களில், தேங்காய் எண்ணெயின் பங்கு ஏறக்குறைய 8 சதவிகிதம் மட்டுமேயாகும். இந்த நிகழ்வுகள் தேங்காயெண்ணெயை மற்றுமநேக எண்ணெய்களுக்கிடையேயுள்ள ஒன்று என்னும் நிலைக்குத் தள்ளியுள்ளன.

இந்தப் பல்வேறு எண்ணெய்களுக்கிடையே பிரதியீடு செய்துகொள்ளும் அல்லது பரிவர்த்தனை செய்துகொள்ளும் அளவு மிக உயர்வாயுள்ளது. 1950களில் இலங்கையின் தேங்காயெண்ணெய்க்கான பிரதான சந்தைகள் மேற்கு ஐரோப்பாவும் (பிரிட்டன், ஜெர்மனி, நெதர்லாந்து, இத்தாலி) கனடாவுமாக இருந்தன. இச்சந்தைகள் நாட்டின் தேங்காயெண்ணெய் ஏற்றுமதிகளில் ஏறக்குறைய 70 சதவிகிதத்தை உட்கிரகித்துக் கொண்டன. ஏறக்குறைய 1960களின் முற்பகுதியிலிருந்து, சீனவும் சோவியத் ரஷ்யாவும் பிரதான கொள்வனவாளர்களாகப் பிரவேசித்ததுடன் இந்த வர்த்தக முறையில் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. 1968—72 போன்ற சில காலங்களில் இவ்விரு நாடுகளின் இறக்குமதிகள் இலங்கையின் மொத்தத் தேங்காயெண்ணெய் ஏற்றுமதிகளில் ஏறக்குறையச் சரி பாதியை உட்கிரகித்தன. 1970களில் சீனவும் சோவியத் ரஷ்யாவும் கனடாவும் மேற்கு ஐரோப்பாவும் பிரதான சந்தைகளாயிருந்தன. இத்துடன், பாகிஸ்தானும் பங்களாதேஷும் கூட ஒவ்வொரு வருடமும் நியாயமான அளவில் கிரமமாக இறக்குமதி செய்து வந்தன.

ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலுமுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருக்கும் மிட்டாய்க் கைத்தொழிலில் (சொக்கலேட், விசுக்கோத்து, கேக்) தேங்காய்த் துருவல் ஒரு முக்கியமான உள்ளீடாக விளங்குகிறது. 1970களில் தேங்காய்த் துருவலுக்கான மொத்த உலக ஏற்றுமதிக் கோரிக்கை ஆண்டொன்றுக்கு 120,000 இலிருந்து 130,000 தொன் வரை இருந்து வந்தது. இந்த மொத்தக் கோரிக்கை பல்லாண்டுகளாக எந்தத் தெளிவான வளர்ச்சிப் போக்குக்கான அறிகுறிகளுமின்றிச் சற்றேற நிலையாயிருந்து வந்துள்ளது. மிட்டாய்க் கைத்தொழிலில் உபயோகிக்கப்படும் ஓர் உள்ளீடு என்ற முறையில் தேங்காய்த்துருவலின் கவர்ச்சி என்னவென்ருல், அதிக விலையுள்ளனவாயிருக்கும் வாதுமைப்பருப்பு அல்லது முந்திரிப் பருப்பு (கசுக்கொட்டை) போன்ற மாற்றுநிரப்பிகளுடன் ஒப்பிடுகையில் பல்வேறு மிட்டாய் வகைகளுக்கும் இது (தேங்காய்த் துருவல்) ஒரு மலிவான நிரப்பியாக விளங்குகின்றது. தேங்காய்ப் பூவுக்கான பிரதியீடுகள் அதிக விலையுள்ளனவாயிருப்பதை முன்னிட்டு, தேங்காய்ப் பூவுக்கான கோரிக்கை சற்றேற விலை விரியா நிலையிலிருப்பதாகத் தோன்றுகிறது. தேங்காய்ப் பூவின் லண்டன் சந்தை விலை 400 சதவிகிதத்துக்கு மேல் உயர்ந்திருந்த போதிலும் (1972—77இன் போது 150 பவுணிலிருந்து 750 பவுணுக்கு உயர்ந்துள்ளது), அபிவிருத்தியடைந்த நாடுகளில் தேங்காய்ப் பூவின் மொத்த உபயோகத்திலும் நுகர்விலும் கணிசமான தாக்கம் எதுவும் ஏற்படவில்லையென்பது இதைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது.

தேங்காய்ப் பூவை ஏற்றுமதி செய்யும் இரு பிரதான நாடுகள் இலங்கையும், பிலிப்பைன்சுமாகும். மொத்த உலக ஏற்றுமதிகளில் இலங்கையின் பங்கு ஏறக்குறைய 40 சதவிதமாயுள்ளது; பிலிப்பைன்ஸ் மீதியுள்ள 60 சதவிகிதத்தைப் பிடித்துவைத்திருக்கிறது. பரம்பரையாக பிலிப்பைன்ஸ் அமெரிக்க சந்தையில் ஏகபோக உரிமை கொண்ட நிலையை வகித்து வந்துள்ளது; இதே வேளையில் இலங்கை ஐரோப்பிய சந்தையில் பெரும் பங்கைப் பிடித்து வைத்திருக்கிறது. பரம்பரையாக இலங்கை ஐரோப்பிய சந்தையில் மூன்றில் இரு பங்குக்கு மேல் வகித்து வந்துள்ளது. எனினும், (மோசமான தேங்காய் விளைச்சலைப் பிரதிபலித்தவாறு) இலங்கையின் ஏற்றுமதிகள் குறைந்த 1977—79இன் போது, மொத்த உலக சந்தையில் மட்டுமன்றி ஐரோப்பிய சந்தையிலும் அதன் பங்கு பெருமளவுக்கு வீழ்ச்சியுற்றது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்ட பிலிப்பைன்ஸ் ஐரோப்பிய சந்தைக்குத் தனது ஏற்றுமதிகளை விஸ்தரிக்கத் துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டது. 1977ம் ஆண்டில் ஐரோப்பிய சந்தைக்கு இலங்கையின் ஏற்றுமதிகள் கணிசமாக வீழ்ச்சியடைந்த போது, பிலிப்பைன்ஸினல் இச்சந்தைக்குத் தனது ஏற்றுமதிகளை இரு மடங்குக்கு மேல் அதிகரிக்க முடிந்தது. அடுத்த ஈராண்டுகளில் (1978, 1979) ஏற்றுமதி வழங்கல்களில் ஏற்பட்ட அபிவிருத்தியுடன் (1977ம் ஆண்டில் ஏறக்குறைய 30,000 தொன்களாயிருந்த தேங்காய்ப்பூ ஏற்றுமதிகள் அடுத்த ஈராண்டுகள் ஒவ்வொன்றிலும் 40,000 தொன்களுக்கு அதிகரித்தன), பிலிப்பைன்சுக்கு இழக்கப்பட்ட சந்தையில் ஒரு பகுதி மீட்கப்பட்டது. ஆனல், முழு மீட்சிக்கு ஏற்றுமதி வழங்கல்களில் மேலும் அபிவிருத்தி ஏற்படவேண்டியதவசியமாகும். 1979ஆம் ஆண்டில், ஐரோப்பிய சந்தையில் இலங்கையின் பங்கு 50 சதவிகிதத்துக்குச் சற்று மேற்பட்டதாகவே இருந்தது. இதற்கெதிராக முந்திய வருடங்களில் இலங்கை இச்சந்தையில் மூன்றிலிருபங்குக்கு மேல் அனுபவித்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயிற்றுத் தும்பு ஏற்றுமதிகள்

மறு பக்கத்தில் கயிற்றுத் தும்பு ஏற்றுமதிகளின் கன அளவு கடந்த மூன்று தசாப்தங்களில் தெளிவான மேல் முகப் போக்கைக் காட்டியுள்ளது. 1950களில் வருடாந்தம் சராசரியாகச் சுமார் 70,000 தொன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1960களில் ஏற்றுமதிகளின் கன அளவு ஏறக்குறைய 84,500 தொன்களுக்கும், மேலும் 1970களில் ஏறக்குறைய 91,000 தொன்களுக்கும் ஏறியது. இவ்விதமாக, பருப்புப்பொருள் ஏற்றுமதிகள் குறைந்து வந்த ஒரு காலத்தில் (1970களில் நிலைமை இப்படித்தானிருந்தது), கயிற்றுத் தும்பு ஏற்றுமதிகளின் அளவு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டும், வளர்ந்து கொண்டுமிருந்தது. இந்நிலைமை இரு காரணிகளைப் பிரதிபலிக்கின்றது—அஃதாவது, கயிற்றுத் தும்புக் கைத்தொழிலில் மதிப்பிடத்தக்க அபரிமித (பயன்படுத்தப்படாத) வழங்கல் திறன் இருந்தமையும் ஏற்றுமதிக் கோரிக்கையில் ஏற்பட்ட உயர்வும்.

1973ம் ஆண்டில் ஏற்பட்ட பெற்ரோல் விலையேற்றத்துடன் கயிற்றுத் தும்புக்கான உலகக் கோரிக்கை வலுவடைந்தது. விரிவடைந்த இக்கோரிக்கை பெரும்பாலும் முறுக்கிய அல்லது சுருண்ட தும்புக்காகவே இருந்தது. எனவே, சமீப ஆண்டுகளில் முறுக்கிய தும்பு ஏற்றுமதிகளில் பெருமளவு விஸ்தரிப்பு ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

## தேங்காய்ச் சிரட்டைப் பொருள்கள்

தேங்காய்ச் சிரட்டை ஏற்றுமதிகளில் சிரட்டைத் துண்டுகள், சிரட்டைத் தூள், சிரட்டைக்கரி, உயிர்ப்பித்த காபன் ஆகியன அடங்கியுள்ளன. இவற்றில் சிரட்டைக்கரிதான் பிரதான ஏற்றுமதிப் பொருளாக இருக்கிறது. உயிர்ப்பித்த காபனின் முக்கியத்துவமும் அதிகரித்து வருகிறது. தேங்காய்ச் சிரட்டைக் கரி கடந்த இரு தசாப்தங்களில் மட்டுமே ஒரு முக்கியமான ஏற்றுமதிப் பொருளாகியது. 1960ம் ஆண்டுக்கு முன்பு, இதன் ஏற்றுமதிக் கன அளவு சிறு அளவிலேயே இருந்தது (வருடமொன்றுக்கு 5000 தொன்களுக்குக் கீழ்). 1960களின் முதற் பாதியில் சராசரி வருடாந்த ஏற்றுமதி மட்டம் ஏறக்குறைய 10,000 தொன்களுக்கு உயர்ந்தது. 1970களில் வருடாந்த சராசரி சுமார் 28,000 தொன்கள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாற்றம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் மரக்கரிக்கான ஏற்றுமதிக் கோரிக்கை அதிகரித்து வருவதைப் பிரதிபலிக்கின்றது. இந்நாடுகள் தீட்டுத் (அசுத்தமாக்கல்)த் தடுப்பு முயற்சிகளுக்கு அதிகரித்த முக்கியத்துவம் அளித்து வருகின்றன. பல்வேறு சுத்தி செய்யும் முயற்சிகளிலும் தீழ்ப்புத் தடுப்பு நடவடிக்கைகளிலும் மரக்கரி ஒரு முக்கியமான தூய்மைப் படுத்தும் கருவியாக விளங்குகிறது. சமீப வருடங்களில் ஏற்பட்டுள்ள ஒரு முக்கியமான சம்பவம் என்னவென்ருல் அதிக அளவில் பதப்படுத்தப்பட்ட ஏற்றுமதிப் பொருளை நாடும் மாற்றமாகும்—அஃதாவது, தேங்காய்ச் சிரட்டையின் உயிர்ப்பித்த காபனுகும். இதன் ஏற்றுமதி 1974ம் ஆண்டில் ஆரம்பமாகியது. 1974ம் ஆண்டில் 40 தொன்களாயிருந்த இதன் ஏற்றுமதிக் கன அளவு 1978ம் ஆண்டில் 700 தொன்களாக விரிவடைந்துள்ளது. உயிர்ப்பித்த காபன் ஏற்றுமதிகள் மரக்கரியின் ஏற்றுமதிப் பெறுமதியை 50 சத விகிதத்துக்கு மேல் அதிகரிக்கும் சக்தியுள்ளவையாகும். ஒரு தொன் மரக்கரிக்குக் கிடைக்கும் ஏற்றுமதி விலையான 2000—2500 ரூபாவுக்கெதிராக, ஒரு தொன் உயிர்ப்பித்த காபன் (இது 3.3 தொன் மரக்கரிக்குச் சமம்) ஏற்றுமதி விலைகளாக 11,000 ரூபாவிலிருந்து 12,000 ரூபா வரை பெறுகிறது.

கயிற்றுத் தும்பின் விஷயத்தில் போல, தேங்காய்ச் சிரட்டைப் பொருள் கைத்தொழிலிலும் பயன்படுத்தப்படாத பெருமளவிலான வழங்கல் திறன் இருந்து வருகிறது. இத்திறன்தான், தேங்காய் விளைச்சல் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், ஏற்றுமதிகள் தொடர்ந்து அதிகரிக்கவும் வளரவும் உதவியது. ஒரு சாதாரண வருடத்தில், சிரட்டைகளின் மொத்த வழங்கலில் ஏற்றுமதிகள் ஏறக்குறைய 25 சதவிகிதத்தை மட்டுமே பயன்படுத்துகின்றன.

## இன்றைய பிரச்சினைகளும் நாளைய வாய்ப்புக்களும்

சிறு உடைமையாளர்களின் மேலாதிக்கம் தெங்குக் கைத்தொழிலில் நிலவுகின்ற ஒரு பிரதான பண்பாகும். எதிரானதும், முரண்பாடானதுமான நலன்கள் இத் தொழிலின் பிறிதொரு சிறப்பம்சமாகும். இது தெங்குக் கைத்தொழிலில் தீர்மானம் எடுப்பதனை ஒரு சிக்கலான கருமமாக்கியுள்ளது. பொதுவாக உள்ளூர் நுகர்வோர்களின் நலன்கள் முதன்மை பெற்றுள்ள அதேவேளை, அரசாங்க நிதி (ஏற்றுமதித் தீர்வைகள்), பதனிடுவோர் (எண்ணெய், தேங்காய்த் துருவல் ஆலையாளர்கள், வர்த்தகம் (கொள்வனவாளரும், கப்பல்காரர்களும்), கால்நடை வளர்ப்பு போன்ற

அட்டவணை—12

உலக தேங்காய்த்துருவல் ஏற்றுமதி வர்த்தகத்தில் இலங்கையின் பங்கு

| | மொத்த உலக ஏற்றுமதிகள் | உலக மொத்தத்தில் இலங்கையின் பங்கு (சதவிகிதத்தில்) | ஐரோப்பாவுக்கு மொத்தத் தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகள் (ஆயிரம் தொன் கணக்கில்) | ஐரோப்பிய சந்தையில் இலங்கையின் பங்கு (சதவிகிதத்தில்) |
|---|---|---|---|---|
| 1971 | 130 | 42 | 50 | 75 |
| 1972 | 127 | 38 | 60 | 67 |
| 1973 | 118 | 33 | 52 | 63 |
| 1974 | 106 | 40 | 50 | 72 |
| 1975 | 117 | 44 | 52 | 84 |
| 1976 | 127 | 36 | 55 | 70 |
| 1977 | 130 | 24 | 60 | 41 |
| 1978 | 125 | 33 | 55 | 56 |
| 1979 | 125* | 30 | 55 | 50 |

*1979ஆம் வருடத்துக்கான தொகைகள் மதிப்பிடப்பட்டவையாகும்.

மூலம்—தெங்குப் பொருள் சந்தைப்படுத்தும் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நலன்களும் தெங்குக் கைத்தொழிலில் அரசாங்கக் கொள்கையைப் பாதிப்பதில் பின்னிப் பிணைந்துள்ளன. இம்முரண்பாடான நலன்களை சமவலுப்படுத்த அல்லது கட்டுப்படுத்த எடுக்கின்ற முயற்சிகளின் விளைவாக தெங்குச் செய்கையாளர்களின் நலன்கள் பாதிக்கப்பட்டுள்ளன; குறிப்பாக தெங்கு உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமான விலைகள் கிடைப்பதில்லை.

உற்பத்தியாளர்களுக்கு இழக்க வேண்டியிருக்கும் அனுகூலமான விலைகளை, மானிய அடிப்படையிலான உள்ளீடுகள் நிவர்த்தி செய்யத் தவறிவிட்டன. மூன்று பெருந்தோட்டப் பயிர்களுள் தென்னையின் ஏக்கருக்குரிய விளைச்சலே ஆகக் குறைந்ததாகும். உயர் விளைதிறனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில், தென்னை நிலங்களைச் செய்கையாளர் பரிபாலிக்கக்கூடிய அளவுக்கு அளிக்கப்பட்டுள்ள ஊக்குவிப்புக்கள் கவர்ச்சிகரமாக இல்லை என நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நாட்டின் தென்னை வெளியீடு வீழ்ச்சி அடையாத போதிலும், நீண்ட காலத் தேக்கத்துக்கு உட்பட்டுள்ளது.

**1970க்களின் தசாப்த காலத்தில்,** பெரும்பாலான வருடங்களில் தென்னை வெளியீடு, வரலாற்று ரீதியிலான வருடாந்தச் சராசரியான 250 கோடி காய்களுக்கும் கீழாக இருந்தது; இரு வருடங்களில் மாத்திரமே வெளியீடு இச் சராசரிக்கு கூடுதலாக இருந்தது. பல வருடங்களாக ஏற்றுமதிப் பெறுமானம், தீவிரமாக வீழ்ச்சி கண்டது; 1980ல் இது 24.2 கோடி காய்களுக்குச் சமனுக பெருமளவு குறைவடைந்தது. 1950க்களிலும், 1960க்கள் வரையிலும் 120 கோடி காய்களுக்குச் சமனுகவிருந்த வருடாந்தச் சராசரி ஏற்றுமதிப் பெறுமானம், 1970க்களின் இரண்டாம் அரைப் பகுதியில் இம்மட்டத்தின் அரைவாசிக்கும் குறைவாக வீழ்ச்சி அடைந்தது. ஒரு உறுதியான வீழ்ச்சியாக இல்லாதபோதிலும், ஒரு நீண்ட காலத்தேக்க நிலைமை உற்பத்திப் போக்கில் இடம்பெற்றது. இப்போக்குகள் தொடருமாயின், எஞ்சியுள்ள ஏற்றுமதி நிரம்பல் மாத்திரமன்றி, உள்ளூர் நுகர்வுக்குரிய தலா நிரம்பலும் குறையக் கூடிய ஆபத்து நிலவுகின்றது.

உற்பத்தி வீழ்ச்சி பல்வேறு காரணிகளதும் விளைவாகும்; இவற்றுள் சில நீண்டகாலப் பண்புகளைக் கொண்டிருப்பதுடன், இன்னும் சில நீண்ட காலமாக இயக்கத்தில் உள்ளன. 1970க்களின் போது பல வருடங்களாக உற்பத்தி வீழ்ச்சி ஏற்படுவதற்கு பாதகமான காலநிலை (வறட்சி) ஒரு காரணியாக இருந்தது. பயிரைக் குறைவு அடையச் செய்கின்ற நேரடியான பாதிப்பு தவிர, குறைந்த பசளைப் பிரயோகத்திற்கும் பாதகமான காலநிலை வழிவகுத்துள்ளது. நிலச் சீர்திருத்தத்தின் விளைவாக ஏற்பட்ட உறுதியின்மை, முகாமைத்துவ மாற்றம் என்பன குறைந்த பசளைப் பிரயோகம், பெருந்தோட்டங்களின் பரிபாலனப் புறக்கணிப்பு என்பவற்றிற்குரிய மேலதிக காரணிகளாகும். 1973ல் பெற்றோலிய விலை அதிகரிப்பினைத் தொடர்ந்து பசளை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும், உற்பத்தியாளர் வருமானக் குறைவும் (மோசமான அறுவடையின் விளைவாக) பசளைப் பிரயோகத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்திய ஏனைய காரணிகளாகும். இக் காரணிகளின் விளைவாக 1968—71 கால கட்டத்தில் 60,000 தொன்களுக்கும் கூடுதலாகவிருந்த வருடாந்தச் சராசரிப் பசளைப் பிரயோகம் 1972—77 கால கட்டத்தில் 27,000 தொன்களாகவும், 1976ல் 11,000 தொன்களாகவும் வீழ்ச்சி அடைந்தது. 1968—71ம் ஆண்டு கால கட்டத்தில் வருடாந்தம் 25,000 ஏக்கர்களாக இருந்த சராசரி மீள்நடுகையும், 1972—75 காலக்கட்டத்தில் 15,000 ஏக்கர்களாக வீழ்ச்சி அடைந்தது. இலாபகரமான விலைகள் இன்மையும், இதன் விளைவாக கிடைத்த ஒப்பீட்டு ரீதியிலான குறைந்த வருமானமும் உற்பத்தித் திறனின் நீண்ட காலப் புறக்கணிப்பிற்குரிய அடிப்படைக் காரணமாகும். ஒரு தொகுதி நடவடிக்கைகளின் ஊடாக தெங்குக் கைத்தொழிலை புனருத்தாரணம் செய்வதற்குரிய உடனடித் தேவையை இக் காரணிகள் தெளிவாக உணர்த்துகின்றன.

## ஒரு புனருத்தாரணச் செயற் திட்டம்

தெங்குச் செய்கையாளர்களுக்கு இலாபகரமான விலைகளை அளித்தல் இப் புனருத்தாரணச் செயற் திட்டத்தின் அடிப்படை அம்சமாக இருத்தல் வேண்டும். இலாபகரமான விலைகள் என்ற எண்ணக்கரு, தெங்கு உற்பத்தி ஒரு தனிச் செய்கை என்ற அடிப்படையில் அமைதல் வேண்டும்; உற்பத்தியாளரின் வருமானத்தை அதிகரிக்கக் கூடிய ஒரு மேலதிக முறையாக கலப்புப் பயிர்ச்செய்கையைக் கருதலாம். விதந்துரைக்கப்பட்ட விவசாய முறைகளையும், உள்ளீடுகளையும் பாவிக்கின்ற ஒரு ஏக்கர் தென்னந் தோட்டத்தின் சராசரி உற்பத்திச் செலவு வருடாந்தம் ஏறக்குறைய ரூபா 1200 ஆகும் என அண்மையில் மக்கள் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. நிலத்தின் மூலதனப் பெறுமானத்தில் ஏறக்குறைய 20 சதவீதத்தினை வருமானமாகப் பெறுவதற்கு (சேமிப்பிற்குத் தற்போது வழங்கப்படுகின்ற வட்டிக்குச் சமமான விகிதாசாரம்) ஒரு உற்பத்தியாளன் 1000 தேங்காய்களுக்கு ரூபா 1,600ப் பெறுதல் வேண்டும். ரூபா 1600 உற்பத்தியாளர் விலை, 1000 காய்களுக்கு ரூபா 1800—2,000 இடையிலான சந்தை விலையைக் குறிக்கும். தென்னையின் மொத்தச் சந்தை விலைகள், 1977ல் 1,000 காய்களுக்கு ரூபா 6,00 அளவிலிருந்து, 1980ல் ரூபா 1,200—1,300 ஆக தொடர்ந்து அதிகரித்துச் சென்றுள்ளன. தென்னைச் செய்கையாளர்கள் இலாபகரமான வருமானத்தைப் பெறுவதற்கு இவ் விலை மட்டங்கள் இன்னும் போதாது உள்ளன.

பசளையும், பயிர்ச் செய்கை வழக்கங்களும் தெங்குக் கைத்தொழிலைப் புனருத்தாரணம் செய்வதற்குரிய இன்னும் இரு பிரதான அம்சங்களாகும். 1977ல் பசளைப் பிரயோகம் பெருமளவு வீழ்ச்சி அடைந்தது; இதன் பின்னர் பசளைப் பிரயோகத்தில் ஒரு மீட்சி அவதானிக்கப்பட்டது. எவ்வாறுயினும் மொத்த தென்னை நிலப்பரப்பில் 220,000 ஏக்கர்களுக்கு அல்லது 20 சதவீதத்திற்கு கூடுதலான தோட்டங்கள் கூடுதலாக பசளைப் பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன; குறிப்பாக, பெருந்தோட்டத் துறையிலேயே இப் பசளைப் பிரயோகம் இடம் பெற்றுள்ளது. சிறு நில உடைமையாளர்களிடையே பசளைப் பிரயோகம் மிகக் குறைவாகும். பசளைப் பிரயோகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்க தென்னைக்கு இலாபகரமான விலைகளை அளித்தல் அவசியமாகும். மானிய விலைகளில்கூட ஒரு ஏக்கருக்குரிய சராசரி உற்பத்திச் செலவில் பசளை மூன்றிலொரு பங்கினை வகிக்கின்றது. (ஒரு மாதத்திற்கு, வருடாந்தம் 4 கி. கிராம் என்ற விதந்துரையின் பிரகாரம்). பசளைப் பிரயோகத்திலிருந்து உயர் வருமானத்தைப் பெறலாம் என்பதனைக் கிடைக்கப் பெறுகின்ற ஆய்வுகள் பாகப் பேணப்பட்டு பசளைப் பிரயோகம் செய்யப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் வருடாந்த உற்பத்தி 4000 காய்களுக்கும் கூடுதலாக அதிகரிக்கக் (அண்மைக் காலங்களில் பெறப்பட்ட 2,000 காய்களுக்கும் குறைவான தேசியச் சராசரிக்கு எதிராக) கூடியதாக இருப்பதுடன் இத்தகைய ஒரு உற்பத்தித் திறனின்போது பசளைச் செலவு காய்களின் விலையிலும் (1980 விலைகளில்) 10 சதவீதத்திற்குக் குறைவாக அமையும். எவ்வாறாயினும், சிறந்த விளைச்சலைப் பெற வேண்டுமாயின் தொடர்ந்து வருடாந்தம் பசளைப் பிரயோகம் செய்தல் அவசியமாகும்.

பசளைப் பிரயோகத்தின் விளைவாக ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பினால் ஏற்படுகின்ற ஏற்றுமதி செய்யத் தக்க மிகையினால் பசளைச் செலவிற்குரிய வெளிநாட்டுச் செலாவணியை ஈடு செய்ய முடியும். குறுங் காலத்திலும், இடைக் காலத்திலும் தென்னஞ் செய்கையை அதிகரிப்பதற்குரிய எதிர்கால வாய்ப்புக்கள் பெரும்பாலும் அதிகரித்த பசளைப் பாவனையிலேயே தங்கி உள்ளன. விநியோக வசதிகளையும், அடி மட்டத்திலான விஸ்தரிப்பு வேலைகளையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் சிற்றுடைமைத் துறையில் பசளைப் பிரயோகத்தை விஸ்தரிக்கலாம்.

மட்டைகளைப் புதைத்தல், புறவுருவ வடிகால்களையும், நீர் வழிந்தோடக் கூடிய வடிகால்களையும் அமைத்தல், படிக்கட்டுக்களையும், சிறு அணைக்கட்டுக்களையும் ஏற்படுத்துதல் போன்ற ஈரலிப்பு, மண் பாதுகாப்பு நுட்பங்களை கையாளுதல், களை பிடுங்குதல், நுண்ணுயிர், நோய்க் கட்டுப்பாடு, உழுதல், மேலதிக மரங்களைக் குறைத்தல் போன்ற சில முக்கியமான செய்கை முறைகள் தென்னந் தோட்டங்களுக்கு சிபார்சு செய்யப்படுகின்றன. குறிப்பாக. சிறு உடைமையாளர்கள் இத்தகைய செய்கை முறைகள் தொடர்பாகக் குறைந்த கவனமே செலுத்துகின்றனர் என்பதனை பல்வேறு மாவட்டங்களிலும் நடாத்தப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன. அதிகளவுக்கு செறிவான சாகுபடி முறைகளைப் பின்பற்றின், தெங்குக் கைத்தொழிலில் புதிய தொழில்கள் தோற்றுவிக்கப்பட்டு, ஊழியச் செறிவு அதிகரிக்க காரணமாக அமையும். இலாபகரமான விலைகளின் வடிவில் ஊக்குவிப்பு அளிக்கப்பட்டால், பரந்த அளவிலான ஆலோசனை, விஸ்தரிப்புச் சேவைகள், இந்நோக்கத்திற்கு என அமைக்கப்பட்ட சிற்றுடைமையாளர் ஒழுங்கமைப்பு என்பவற்றின் மூலம் இத்தகைய செய்கைகளை அதிகரிக்கச் செய்யலாம்.

1970க்களின் போது பல வருடங்களில் தென்னைச் செய்கை வறட்சியினால் பெருமளவு பாதிக்கப்பட்டது. வறட்சி, நடைமுறை உற்பத்தியைக் குறைப்பதன் மூலம் நேரடியாகப் பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு மேலாக குறைந்த பசளைப் பாவனை, மீள்நடுகைப் பாதிப்பு என்பவற்றின் வாயிலாக எதிர்கால உற்பத்தியையும் முரணான வகையில் பாதிக்கின்றது. வறட்சியின் நிகழ்வும், செறிவும் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. குறைந்த மழை வீழ்ச்சி—குறிப்பாக தெ. மே. பருவப் பெயர்ச்சிக்காற்று — தொடர்பற்ற ஒரு போக்கு அல்ல. அது நாட்டின் மழைவீழ்ச்சியில் ஏற்பட்டு வருகின்ற ஒரு புதிய போக்காகும்; ஆகையால் தெங்குக் கைத்தொழில் அபிவிருத்திக்குத் திட்டமிடும் போது, கவனத்திற் கொள்ள வேண்டிய பிரதான அம்சமாக இது விளங்குகின்றது. நீடித்த வறட்சி, தெங்குச் செய்கை தொடர்பான பாரம்பரிய எண்ணக்கருவில் புதிய சிந்தனைகளை வேண்டி நிற்கின்றது; நீர்ப்பாசனத்தின் கீழ் தெங்குச் செய்கை என்ற புதிய கருதுகோளை நாம் ஏற்கவேண்டிய நிலையில் உள்ளோம். நீர்ப்பாசனத்தின் கீழான தென்னையின் பொருளாதாரம் பற்றி இன்னும் ஆராயவேண்டி உள்ளது. தரைக் கீழ் நீர் பற்றிய ஆய்வு, ஆழமான கிணறு தோண்டுதல், பெருமளவு மூலதனத்துடன் பாரிய திருப்பு திட்டங்களை மேற்கொள்ளுதல்போன்றன நீர்ப்பாசனத்தென்னைச்செய்கைக்குள் இடம் பெறலாம். தென்னைச் செய்கையின் இவ் அம்சம் தொடர்பாக இன்னும் நுண்ணாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது குறைந்த உற்பத்தியுடன் கூடிய தென்னந் தோட்டங்களில் உயர் விளைச்சலைத் தரக்கூடிய தென்னை இனங்களை மீள் நடுகை செய்ய வேண்டிய தேவையை தெங்குக் கைத்தொழில் அபிவிருத்தி நீண்ட கால கட்டத்தில் வேண்டி நிற்கின்றது. தென்னை மரத்தின் பொருளாதார வாழ்க்கை பற்றி இன்னும் தெளிவான கருத்துக்கள் இல்லை; ஆனால், 60—70 வருடங்களுக்குப் பின்னர் தளர்ச்சி அதனை ஆட்கொள்வதாக பொதுவாக நம்பப்படுகின்றது. தென்னை ஆராய்ச்சி நிறுவகத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட கலப்பு இனத் தென்னங் கன்றுகள், குறித்த சில விவசாய—காலநிலைப் பிராந்தியங்களுக்கு மாத்திரமே பொருத்தமாக உள்ளன; இப் பிராந்தியங்களின் பரப்பளவு நாட்டின் மொத்தத் தென்னை உற்பத்திப் பிரதேசத்தில் நான்கிலொரு பங்கிற்கும் குறைவாகும். காப்பு இனத்தின் மூலம் ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாக 2,000க்கும் கூடுதலான காய்களைப் பெறலாம். எனவே, காப்பு இனக் கன்றுகளைப் பயிரிடுவதன் மூலம் வெளியீட்டுத் திறனைக் குறிப்பிடத் தக்களவு அதிகரிக்கலாம். பழைய மரங்களைத் தீவிரமாக அகற்றி கலப்பு இனங்களை பயிரிடுவதன் மூலம் பெருமளவு விளைச்சலைப் பெறலாம் என மக்கள் வங்கி ஆய்வின்போது பெறப்பட்ட கணிப்பீடுகள் காட்டுகின்றன. வீட்டுத் தோட்டங்களைச் சிறப்பாகக் கண்காணிக்கக் கூடியதாக இருப்பதுடன், வறட்சிக் காலங்களில் நீர் ஊற்றவும் கூடியதாகவிருப்பதனால் பெருந்தோட்டங்களுக்கு மேலாக, கலப்பு இனங்களை மீள் நடுகை செய்யக்கூடிய ஒரு இடமாக வீட்டுத் தோட்டங்கள் விளங்குகின்றன.

தென்னைச் செய்கையை விஸ்தரிக்கக் கூடிய புதிய நிலங்கள் மகாவலித் திட்டப் பிரதேசத்தில் உள்ளன; இங்கு இதனைப் பிரதானமாக வீட்டுத் தோட்டங்களில் பயிரிடலாம். ஒரு குடும்பத்தின் உண





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்குரிய தென்னைத் தேவையை நிறைவு செய்ய ஐந்து அல்லது ஆறு மரங்கள் போதியதாகும் என்பது அவதானிக்கத் தக்கதாகும். பெருந்தோட்டங்களின் ஏற்றுமதிக்கு சந்தைப்படுத்தக் கூடிய மிகையைப் பேணுவதற்குரிய ஒரு பிரதான முறையாக வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்கப்படுத்தல் விளங்குகின்றது.

தெங்குக் கைத்தொழிலில் சிறு நில உடைமையாளர்கள் வகிக்கின்ற முன்னணி நிலையை நோக்குமிடத்து, தென்னை வெளியீட்டினை அதிகரிக்க வைப்பதில் சிறு உடைமையாளர்களின் பிரதான பங்கினை தென்னைக் கைத்தொழில் எதிர்காலத்தில் வேண்டி நிற்கின்றது என்பது தெளிவாகிறது. இது கால வரையிலும் சிறு நில உடைமையாளர்கள் அரசாங்கத்தின் பல்வேறு கொள்கைத் தீர்மானங்களுடன் பெருமளவுக்கு ஒத்துப் போகவில்லை. சுருங்கக் கூறின் அரசாங்கக் கொள்கைகள் சிறு உற்பத்தியாளர்களைச் சென்றடையத் தவறின எனலாம். சிற்றுடைமைகளில் உற்பத்தித் திறன் குறைவாகவே இருந்து வருகின்றது; உரப் பாவனையும், பயிர்ச் செய்கை முறைகளும் சிற்றுடைமைகளுக்குப் பரவவில்லை; இங்கு மீள் நடுகைக்கு கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை; சிற்றுடைமையாளர்கள் தரகர்களில் தங்கி இருப்பதனால் தொடர்ந்து குறைந்த விலைகளையே பெற்று வருகின்றனர்.

உற்பத்தியாளரைச் சுரண்டல், தென்னைச் சிற்றுடைமைத் துறையில் காணப்படுகின்ற ஒரு பிரதான பண்பாகும். குறைந்த உற்பத்தி விலைகள், குறைந்த உற்பத்தித் திறன் என்ற விசச்சுழலின் பிடியில் சிற்றுடைமையாளர்கள் சிக்குண்டுள்ளனர். இவ் விசச் சக்கரத்தினை எவ்வாறு உடைக்கலாம் என்பது தென்னைக் கைத்தொழிற் துறை எதிர்நோக்குகின்ற ஒரு பிரதான வினாவாகும். தமது பேரம் பேசுகின்ற சக்தியை அதிகரிக்கக் கூடிய வகையில் சிறு உற்பத்தியாளர்களை ஒன்றுபட வைப்பதன் மூலம் இதற்குரிய தீர்வைக் காணலாம். தரகர்களில் தங்கி இருத்தலை உடைக்கவும், தனது அங்கத்தவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த விலைகளைப் பெறவும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட குழுவினால் சிறப்பாக இயலும். மேலும், ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு குழு, தென்னைச் செய்கையாளர்களுக்கு அரசாங்கம் அளிக்கின்ற பல்வேறு சேவைகளையும், வசதிகளையும் சிறப்பாகப் பெறக் கூடியதாகவும் இருக்கும்.

தென்னந் தோட்டங்களின் வருமானத்தை உச்சப்படுத்துவதற்கு பசளைப் பிரயோகம், செறிவான செய்கை முறை என்பன மாத்திரம் போதாது. பன்முகப்படுத்தப்பட்ட பண்ணைத் தொழிலின் மூலம் நிலத்தைச் செறிவாகப் பயன்படுத்தலும் அவசியமாகும். செறிவான பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு என்பவற்றை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். தென்னந் தோட்டங்களில், குறிப்பாக சிற்றுடைமைகளில், மரபு ரீதியாகவே கலப்புப் பயிர்ச் செய்கையும், கால்நடை வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. ஆனால், பன்முகப்படுத்தப்பட்ட பண்ணைத் தொழிலுக்குரிய வாய்ப்புக்கள் பிரயோகப்படுத்தப்படுவதில்லை. தென்னைக்கும், செறிவுப் பயிருக்கும் இடையே ஈரலிப்பு, பசளை என்பவற்றில் போட்டி நிலவாது இருப்பதுடன், போதிய அளவு சூரிய வெளிச்சத்தைப் பெறுதல் கலப்புப் பயிர்ச் செய்கையின் வெற்றிக்கு அவசியமாகும். விவசாயக் காரணிகளுக்கு மேலாக, விலை உறுதி, சந்தைப்படுத்தல் பிரச்சினை, ஆரம்ப மூலதனம் இன்மை, அமைப்பு ரீதியிலான பிரச்சினைகள் போன்ற பல்வேறு சமூக பொருளாதார அம்சங்கள் கலப்புப் பயிர்ச் செய்கையில் உண்டு. உள்ளீடுகளை நிரம்பல் செய்தல், உற்பத்திப் பொருட்களை உத்தரவாத விலையில் கொள்வனவு செய்தல், கடன் உதவித் திட்டம் என்பன கலப்புப் பயிர்ச் செய்கைத் திட்டத்தின் வெற்றிக்கு உரிய முதன்மைத் தேவைகளாகும். வருடாந்தப் பயிர்களை (உ—ம்- கிழங்கு வகைகள், இஞ்சி போன்றன) விடவும் எல்லாப் பருவத்திற்கும் உரிய பயிர்களே (உ—ம்- வாழை, அன்னாசி, பப்பாசி போன்றன) கூடிய பயனை அளிக்கக் கூடியன; ஆனால், அவை கூடுதலான ஆரம்ப முதலீட்டினை வேண்டி நிற்கும் என வங்கியின் ஆய்வுப் பரிசீலனை காட்டியது. புற்செய்கையும், மந்தை வளர்ப்பும் தென்னந் தோட்டங்களில் மேற்கொள்ளக் கூடிய இன்னொரு வகை கலப்புப் பண்ணைத் தொழிலாகும். தென்னந் தோட்டங்களைப் பல தேவைகளுக்குப் பாவிக்கக் கூடியதாக இருப்பின், நிலப்பாவனையின் உச்ச அளவினைத் தீர்மானிப்பதற்கு, பல்வேறு மாற்றுநடவடிக்கைகளினதும் சமூகச் செலவுகளையும், நன்மைகளையும் கணிப்பீடு செய்தல் வேண்டும்.

தேங்காய் எண்ணெயும், தேங்காய்த் துருவலும் தென்னங் கைத்தொழிலின் பிரதான பதனிடப்பட்ட பொருட்களாகும். தேங்காய் எண்ணெய் உள்ளூர், ஏற்றுமதிச் சந்தைகளை நிறைவு செய்கின்ற அதேவேளை, தேங்காய்த் துருவல் முழுமையாகவே ஏற்றுமதி சார்ந்த ஒன்றாக விளங்குகின்றது. அண்மைக் காலங்களில் இவ்விரு கைத்தொழில்களும் எதிர்நோக்கிய பிரதான பிரச்சினை மூலப் பொருள் நிரம்பல் நிலைமைகளாகும்-

தும்புத் தயாரிப்புக்களும், சிரட்டைத் தயாரிப்புக்களும் தெங்குக் கைத்தொழிலின் பிரதான உப தயாரிப்புக்களாகவிருப்பது டன். பிரதான ஏற்றுமதிப் பொருட்களாகவும் உள்ளன. இவ் விரண்டையும் பொறுத்த வரையில் உள்ளூரில் சேர்க்கப்பட்ட பெறுமானத்தில் — அதாவது கூடிய பதனிடல் உள்ளடக்கத்துடன் ஏற்றுமதிப் பொருள் அமைவதிலேயே இப் பொருட்களின் எதிர்காலம் தங்கி உள்ளது. சிரட்டைக் கரிக்குப் பதிலாக இயக்கப்படுத்தப்பட்ட காபன், தும்பிற்குப் பதிலாக தூரிகை விரிப்பு என்பன இத் துறையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன அபிவிருத்திகளுக்கு உதாரணமாககும்.

தெங்குக் கைத்தொழில் அமைப்பிற்குள் இயங்குகின்ற நலன்களுக்கிடையே நடுநிலைமை வகிக்கின்ற பங்கினையே கடந்த மூன்று தசாப்தங்களாக அரசாங்க கொள்கை ஆற்றிவந்துள்ளது. இத்தகைய கொள்கையின் போது நாட்டின் அரசியற் பொருளாதாரம் நுகர்வோர் நலவுரிமைகளுக்கே பெருமளவு சார்பாக இருந்துள்ளது. அரசாங்கக் கொள்கையைச் செல்வாக்குப் படுத்துகின்ற காரணிகளுக்கு சிறந்த உதாரணமாக ஏற்றுமதித் தீர்வையைக் குறிப்பிடலாம். வீழ்ச்சி அடைந்து வருகின்ற உற்பத்தியைத் தடுக்கும் வகையில் எதிர்வரும் வருடங்களில் அரசாங்கக் கொள்கை அமைதல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில்

## மின் உபகரணங்கள் இறக்குமதியினுல் ஏற்பட்டுள்ள சிக்கல்கள்

1977 நவம்பரில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட தாராள இறக்குமதி, கொடுப்பனவுக் கொள்கையினுல் (அதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த வர்த்தகக் கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்பட்டிருந்த) பல தடங்கல்கள் நீங்கின. அதேவேளை புதிய கொள்கையினுல் கட்டுப்பாடற்ற விதத்தில் ஏராளமான இறக்குமதிப் பொருள்கள் நாட்டுக்குள் வந்து குவிகின்றன. அதன் விளைவாக உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திப் பொருள்கள் பலவும் பாதிக்கப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் இப்போது இயங்கும் பல சேவைகளுக்கு மேலதிகப் பளுவைக் கொடுக்கவும் இறக்குமதிப் பொருள்கள் காரணிகளாக விளங்குகின்றன. இவ்வாறு பாதிப்புக்கு ஆளான கைத்தொழில் உற்பத்தி வகைகளில், பொதுவாக "பாவனைப் பொருள்கள்" என்று வர்க்கத்தில் கருதப்படும் மின்சார உபகரணங்களும் உதிரிப் பாகங்களும் அடங்கும். பிரஸ்தாப மின்சார உபகரணங்களில் சில "இடைப்பட்ட பொருள்கள்" வர்க்கத்திலும் சேர்க்கப்படுவதுண்டு.

தாராள இறக்குமதியின் தாக்கங்கள் 1979-ம் ஆண்டிலேயே உணரப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் எதிர்பார்த்ததைவிட அதிக அளவிலான தாக்கம் 1980ம் ஆண்டில் உணரப்பட்டது. 1980-ம் ஆண்டில் உணவு, எண்ணெய் தவிர்ந்த ஏனைய பொருள்களின் இறக்குமதிச் செலவினம் மட்டும் (உணவு, எண்ணெய் வகைகளுக்கான செலவு 1200 கோடி ரூபாவாகும்.) அநேகமாக 1979-ம் வருடத்தின் (உணவு, எண்ணெய் உட்பட்ட) மொத்த இறக்குமதிச் செலவுக்கு (2300 கோடி ரூபாவுக்கு) சமமானதாக இருந்தது. 1977-ம் ஆண்டுக்கு முன்னர் மின்சார உபகரணங்களின் இறக்குமதிக்கு மிகச் சொற்ப அளவு பணமே செலவிடப்பட்டு வந்தது. ஆனுல். 1980-ம் ஆண்டில் மின்சார உபகரண இறக்குமதி மொத்த இறக்குமதிச் செலவினத்தில் (3360 கோடி ரூபாவில்) 5 சதவீதத்தைப் பிடித்துக்கொண்டது. நீண்ட காலமாக இறக்குமதிக் கட்டுப்பாடு அமுலிலிருந்த பின்னர் தாராள வர்த்தகம் நடைமுறைக்கு வந்ததும் உடனடியாக இறக்குமதிப் பொருள்கள் பெருமளவில் வந்து குவிவது இயற்கையானதே. அதே போன்று தேவை பூர்த்தியானதும் இறக்குமதிகள் குறைந்துவிடுவதும் வழமையாகும். ஆனுல் மின்சார உபகரணங்களைப் பொறுத்தமட்டில் கடைசியாகக் குறிப்பிட்ட நிலைமை இன்னும் தோன்றிவிடவில்லை.

புதிய தாராள இறக்குமதிக் கொள்கையின் உடனடி விளைவாக உள்நாட்டுச் சந்தையில் பல ரகமான மின்சார உபகரணங்கள் வந்து குவிந்தன. அவற்றுட் சில எமது அயல் நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட தரங்குறைந்த உபகரணங்களாகும். உள்நாட்டில் மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில் அதிபர்களின் ஆட்சேபத்தை தொடர்ந்து தரக்குறைவான உபகரணங்களின் இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததாயினும் பொதுவாக, இறக்குமதி மேன்மேலும் அசுர வேகத்தில் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்து வியாபாரம் நடத்துவதால் அதிகளவு இலாபம் கிடைக்கும் என்பதால் இறக்குமதியாளர்களும் இந்த வர்த்தகத்தில் அதிக நாட்டம் கொண்டிருக்கின்றனர். தாராள வர்த்தக நடைமுறை அமுலுக்கு வந்த ஆரம்ப கட்டத்திலேயே (1978 முதல் 1980-ம் ஆண்டுவரை) மின்சார உபகரணங்களுக்கு நாட்டில் இருந்த தேவையைவிட அளவுக்கு அதிகமான அளவில் அவை இறக்குமதியாகின. அதன் உடனடி விளைவாக, பெருந் தொகையான உபகரணங்கள் விற்பனையின்றிப் பெருமளவில் தேங்கத் தொடங்கின.

1978, 1979, 1980-ம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட வீட்டுப் பாவனைக்குரிய மின்சார உபகரணங்களின் எண்ணிக்கையை அட்டவணை காட்டுகிறது. இறக்குமதியான பொருள்களின்

அட்டவணை 1

1978, 1979, 1980 ஆம் ஆண்டுகளில்
இறக்குமதி செய்யப்பட்ட வீட்டுத் தேவைக்குரிய
மின்சார உபகரணங்கள்

| | பொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1- | மின்சார ஸ்திரிக்கைகள் | 1,68,142 |
| 2- | மின்சார அடுப்புகள் | 1,47,829 |
| 3- | மின்சார வெப்பத் தகடுகள் | 22,567 |
| 4- | உட்புகுத்திச் சூடாக்கிகள் | 93,236 |
| | உபமொத்தம் | 4,31,774 |
| 5- | குளிர்சாதனப் பெட்டிகள், குளிர் உறையும் பெட்டிகள், சமையல் உபகரணங்கள்* | 13,452 |
| 6- | மின்சார விசிறிகள் | 105,637 |
| 7- | வீட்டு மின்சார உபகரணங்கள் | 10,629 |
| 8- | தொலைக்காட்சிப் பெட்டிகள் | 69,076 |
| | உப மொத்தம் | 1,98,794 |
| 9- | சலவை இயந்திரங்கள் | 1,231 |
| 10- | ஜன்னல் ரக குளிரூட்டிகள் | 5,061 |
| 11- | வெற்றிடத் துப்பரவாக்கிகள், தரை மினுக்கிகள் | 5,780 |
| 12- | மின்சார உணவுக் கலவை இயந்திரங்கள் | 8,887 |
| 13- | மின்சார முகச்சவர இயந்திரங்கள் | 1,158 |
| 14- | மின்சார சிகையலங்காரச் சூடாக்கிகள் | 3,495 |
| | உப மொத்தம் | 25,612 |
| | கூட்டு மொத்தம் | 6,56,180 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவ வரிசை அவற்றின் பாவனை ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையில் அவை மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. வெளிநாடு சென்று வரும் பிரயாணிகள் தங்கள் தனிப்பட்ட பொதிகளில் கொண்டுவரும் மின்சார உபகரணங்களின் எண்ணிக்கை அட்டவணையில் சேர்க்கப்படவில்லை.

(சில மதிப்பீடுகளின்படி பதிவு செய்யப்பட்ட, இறக்குமதியான மின்சார உபகரணங்களின் மொத்த எண்ணிக்கையோடு மேலும் பத்து சதவீதத்தைப் பிரயாணிகள் தனிப்பட்ட முறையில் கொண்டு வந்தவை என்று கணக்கில் சேர்க்கலாம்.) மண்ணெண்ணெய், விறகு, நிலக்கரி என்பனவற்றின் விலைகள் அண்மைக் காலத்தில் மிகவும் உயர்ந்துவிட்டன. அதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட நகரப்புற மத்தியதர வகுப்பு மக்கள் மாற்றுச் சக்தியாக மின்சாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கியதால், அட்டவணையில் முதலாவது பிரிவில் வகுக்கப்பட்ட உபகரணங்கள் குறிப்பிட்ட மக்களின் அத்தியாவசியமான பாவனைப்பொருள்களாகக் கணிக்கப்பட்டுள்ளன. மத்தியதரக் குடும்பத்தைப் பொறுத்தமட்டில் அரைமட்ட ஆடம்பரப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்களாகக் கணிக்கப்பட்ட உபகரணங்கள் அட்டவணையில் முறையே இரண்டாம் மூன்றாம் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

இறக்குமதியான மின்சார உபகரணங்களின் மொத்த எண்ணிக்கையில் முதலாவது பிரிவைச் சேர்ந்தவை சுமார் 70 சதவீதமானவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது மூன்றாவது பிரிவுகளைச் சேர்ந்த பொருள்களின் மொத்த எண்ணிக்கை 2,04,406 ஆக இருந்தது. அரைமட்ட, முழுமட்ட ஆடம்பரப் பொருள்களாகக் கருதப்படும் மின்சார உபகரணங்கள், மொத்த மின்சார உபகரண இறக்குமதியில் 30 சதவீதமாக இருந்தபோதிலும் அவை முதலாவது பிரிவைச் சேர்ந்த பொருள்களைவிட மிகவும் அதிகமான விலையுடையவையாகையால் அவற்றின் இறக்குமதிக்குக் கூடுதலான பணம் செலவாகியது.

மின்சார உபகரணங்களின் இவ்விதமான இறக்குமதியினால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பல கோணங்களில் இருந்து மதிப்பிடலாம். முதலில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உபகரணங்களைவிட இறக்குமதியாகும் உபகரணங்கள் பெருமளவில் விற்பனையாகின்றன. இறக்குமதி உபகரணங்களின் சிறந்த வர்த்தகச் சின்னங்களும், பிரபல்யமடைந்த ரகங்களும் உள்நாட்டு உற்பத்திகளைப் பெருமளவில் பயமுறுத்துகின்றன. அதனால் அவற்றின் சந்தை வசதி பாதிக்கப்படுகிறது. குளிர்சாதனப் பெட்டிகள், காற்றாடிகள், மின்சார ஸ்திரிக்கைகள் போன்ற மின்சார உபகரணங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கும் விதத்தில் தீர்வைப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் இறக்குமதியாகும் பொருள்களின் தரம், விலை, வர்த்தகச் சின்னங்களின் பிரபல்யம் என்பனவற்றோடு உள்நாட்டு உற்பத்திகளால் போட்டிக்கு நிற்க முடியவில்லை.

வளர்முக நாடுகளில் உள்ள மின்சார உபகரண உற்பத்திக் கைத்தொழில்களால் இறக்குமதியாகும் உபகரணங்களுடன் (குறிப்பாக பல்நாட்டு நிறுவனங்களின் உற்பத்திகளுடன்) இலகுவில் போட்டியிட முடியாது என்பதை ஆய்வுகள் புலப்படுத்தி உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம், அபிவிருத்தி சம்பந்தமான ஆணைக்குழு (அங்டாட்) "மின்சார உபகரணக் கைத்தொழிலும் பல்நாட்டு நிறுவனங்களின் சக்தியும்" என்ற விஷயம் குறித்து அண்மையில் ஆய்வு மதிப்பீடு ஒன்றை நடத்தியது. மின்சார உபகரணக் கைத்தொழில் துறையில் உள்நாட்டு உற்பத்திகளைப் பாதிக்காது இருப்பதற்கென்று கூறி ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளும் பிரபல பல்நாட்டு வர்த்தக நிறுவனங்கள் அத்துறையில் தமது ஆதிக்கத்தைத் தொடர்ந்து நிலைநாட்டுவதில் ஆபத்து ஏற்படும் இக்கட்டான சந்தர்ப்பங்களில் தமது பொருள்களின் விலைகளை அளவு கணக்கின்றிக் குறைத்துவிடுவது பிரஸ்தாப மதிப்பீட்டின் மூலம் தெரிய வந்திருக்கிறது. தமது உற்பத்திப் பொருள்களின் சந்தையை ஒரு நாட்டில் நிரந்தரமாக்குவதில் கஷ்டம் இருப்பதாகக் கண்டால், பல்நாட்டு நிறுவனங்கள் உடனே அந்த நாட்டில் தமது பொருள்களின் விலைகளை, மக்கள் விரும்பி வாங்கும் தூண்டுதல் மட்டத்துக்குக் குறைத்துவிடும். அந்தத் தூண்டுதல் மட்ட விலை உற்பத்திச் செலவைவிடக் குறைவாக இருந்தாலும் அதனால் நஷ்டம் ஏற்படுமே என்ற முன்விளைவு குறித்து அக்கறைப்படுவதில்லை. சிறிது காலத்திற்கு அந்த நஷ்ட விலையில் விற்று மக்களின் ஆதரவைப் பெற்று, சந்தையை ஸ்திரமாக்கிக் கொண்டதும் பின்னர் விலையைப் படிப்படியாக உயர்த்திக்கொள்கின்றன. வளர்முக நாடுகளில் அந்தந்த நாட்டு மூலதனத்தைக் கொண்டு நிறுவப்பட்ட கைத்தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் மின்சார உபகரணங்கள் உள்நாட்டுச் சந்தையில் பிரபல்யம் அடையாது தடுக்கும் விதத்தில் அந்தந்த நாடுகளில் இயங்கும் பல்நாட்டு நிறுவனங்களின் கிளைகளும் ஏஜன்சிகளும் தமது விலை மாற்றத் தந்திரத்தைக் கையாள்கின்றன. இதன் விளைவாக வளர்முக நாடுகளில் உள்ள சுதந்திரமானதும், தேசியக் கட்டுப்பாட்டுடன் கூடியதுமான அந்தந்த நாட்டுக் கைத்தொழில்கள் பாதிக்கப்படுகின்றன — இந்த விவரங்கள் அங்டாட் மதிப்பீட்டின்மூலம் தெரிய வந்துள்ளது.

இரண்டாவதாக, இறக்குமதி செய்யப்படும் மின்சார உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் அதிக இலாபம் அடையலாம் என்பதை வர்த்தகர்கள் அறிந்தனர். அதன் விளைவாகப் பலரும் மின்சார உபகரண வர்த்தகத்தில் அதிக நாட்டம் கொண்டு அதில் ஈடுபட்டனர். அதன் பலனாக, மின்சார உபகரண இறக்குமதிக்கு மிகப் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்பட்டது. 1979-ம் ஆண்டில் பாதிக்கப்பட்டுப் பின்னர் 1980 இல் மேலும் மோசமடைந்த சென்மதி நிலுவை நிலை மின்சார இறக்குமதிக்கான செலாவணி விரயத்தால் மேன்மேலும் சீர்கெட்டது. இறக்குமதியாகிய பெருந்தொகையான மின்சார உபகரணங்களை வாங்கி மக்கள் பாவிக்கத் தொடங்கியதும் மின்சாரப் பாவனை அதிகரித்தது. அதனால் அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்து மின்சாரத் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டியதாயிற்று. மறுபுறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனல் மின்சார உற்பத்திக்குத் தேவையான டீசல் எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்யவும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியதாயிற்று.

மூன்றாவதாக, இறக்குமதி செய்யப்பட்ட மின்சார உபகரணங்களுக்கு உள்நாட்டுச் சந்தையில் ஏற்பட்ட சாதகமான சூழ்நிலையும், மக்களுக்கு அவற்றின்பால் உண்டான கவர்ச்சியும் நிலைத்து நிற்கக்கூடியனவல்ல. பிரஸ்தாப பொருள்களின் சந்தைப்படுத்தலைக் குறிப்பிட்ட காலத்திற்கே விஸ்தரிக்க முடிந்தது. அதிக அளவில் செலவிட்டுப் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய சாரார் அவற்றை வாங்கும் அளவுக்கு ஸ்தம்பித்து விடுகிறது. அதிகளவில் பணம் செலவழித்து வாங்கக்கூடிய புதிய பாவனையாளர் குழாமைத் தேடவேண்டி உள்ளது. எனினும், எதிர்பார்த்த பாவனையாளர் குழாமைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன்விளைவாக இறக்குமதியாளர்களிடம் மின்சார உபகரணங்கள் விற்பனையாகாது தேங்கின.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டவுடன் நிலவிய கிராக்கியை 1978, 79-ம் ஆண்டுகளிலேயே பூர்த்தி செய்திருக்க முடியும் ஆனால், அதற்குப் பின்னரும் இறக்குமதி தொடர்ந்துகொண்டே இருக்கிறது. தாராள இறக்குமதிக் கொள்கை அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து காற்றாடிகள், குளிர்சாதனப்பெட்டிகள் ஆகிய உபகரணங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்பவர்களும் தமது உற்பத்தி அளவை அதிகரிக்க முடிந்தது. எனவே, மின்சார உபகரணங்கள் விற்பனையின்றித் தேங்குவதில் அதிசயம் எதுவுமில்லை. இங்கு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில், வர்த்தகர்கள் மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான பணத்தை வங்கிக் கடன்கள் மூலமே பெற்றார்கள் என்பதாகும். எனினும், சந்தை வசதிகள் பாதகமானவையாக இருந்ததால், வர்த்தகர்கள் எதிர்பார்த்தபடி உடனடியாகப் பெரும் லாபம் தேடும் வாய்ப்புக் குறைந்தது. தாம் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக பொருள்களை இறக்குமதி விலையிலும் பார்க்கக் குறைந்த விலைக்குக்கூட விற்க வேண்டிய நிர்ப்பந்தம் சில வர்த்தகர்களுக்கு ஏற்பட்டது.

இவை எல்லாவற்றையும்விட, மின்சார உபகரண இறக்குமதி அளவுக்கதிகமாக இடம்பெற்றதால் உருவாக்கப்பட்ட பிரதான பிரச்சினை ஒன்று உண்டு. இறக்குமதியாகி விற்பனையான உபகரணங்களை மக்கள் பாவிக்கத் தொடங்கியதும் மின்சாரப் பாவனை அதிகரித்தது. அதனால் மின்சார விநியோகத்தில் பெரும் இக்கட்டான நிலை தோன்றியது. மின்சார விநியோகப் பிரச்சினை நாட்டின் பொதுவான பொருளாதாரத்தையும் தாக்கமுறச் செய்தது. மின்சாரப் பாவனை ஒரு நாட்டின் சமூக — பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் சிறந்த மானி என்ற ஒரு கருத்தும் உண்டு. ஆனால் மின்சாரம் உற்பத்தித் துறைக்கும் பயன்படுத்தப் படும்போது, மின்சாரப் பாவனையின் அளவைக் கொண்டு சமூக — பொருளாதார வளர்ச்சியை மதிப்பிட முடியுமா என்பது கேள்விக்குரிய ஒன்றாகும்.

1976-ம் ஆண்டிலிருந்து இதுவரையின் மின்சாரத் தேவை 75 சதவீதம் அதிகரித்துள்ளது. 1976-ம் ஆண்டில் 113 கோடியே 30 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், 1980-ம் வருடத்திலோ 166 கோடி 80 லட்சம் கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டி இருந்தது. 1976-ல் 99 கோடியே 70 இலட்சம் கிலோவாட் மின்சாரம் விற்பனை செய்யப்பட்ட அதேவேளை, 1980-ல் மின்சார விற்பனை 136 கோடியே 40 லட்சம் கிலோவாட்டாக அதிகரித்தது. மின்சாரத் தேவை வீட்டுப் பாவனைத் துறையிலேயே அளவுக்கதிகமாக உயர்ந்ததைக் காணமுடிகிறது. மின்சார உபகரணப் பாவிப்பு அதிகரிப்புக்கும் இதற்கும் அதிக தொடர்புண்டு. 1978-ம் ஆண்டில் வீட்டுப் பாவனைக்கான மின்சாரத் தேவை 10 கோடி 57 லட்சம் கிலோவாட்டிலிருந்து 11 கோடி 57 லட்சம் கிலோவாட்டாகப் 10% உயர்ந்தது. 1979-ம் ஆண்டில் நிலைமை மேலும் மோசமாகி வீட்டுப் பாவனைக்குரிய மின்சாரத் தேவை 30 சதவீதத்தால் உயர்ந்தது. அதாவது, 14 கோடியே 94 லட்சம் கிலோவாட் மின்சாரம் வீட்டுப் பாவனைக்குச் செலவானது. 1980-ல் வீட்டுப் பாவனைக்குரிய மின்சாரப் பாவனை 21 சதவீதத்தால் அதிகரித்தது. இதே வேளையில், மொத்த மின்சாரப் பாவனை 1978-ல் 8 சதவீதத்தாலும் 1979-ல் 12 சதவீதத்தாலும் 1980ல் 6 சதவீதத்தாலும் அதிகரித்தது. கைத்தொழில் துறையில் மின்

(32ம் பக்கம் பார்க்க)

## அட்டவணை 2

### மின்சார விநியோகமும் பாவனையும் 1970 — 1980

| காலம் | உற்பத்தித் திறன் (மெகவாட்) | செய்யப்பட்ட அலகுகள் (பத்து லட்சம் கிலோவாட்) | விற்பனை (பத்து லட்சம் கிலோவாட்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வீட்டுப் பாவனை | கைத்தொழில் | வர்த்தகம் | உள்ளூராட்சி மன்றங்கள் | பிற | மொத்தம் |
| 1970 | 262 | 785.8 | 62.0 | 331.0 | 87.0 | 165.0 | 11.0 | 656.0 |
| 1971 | 262 | 849.2 | 65.0 | 373.0 | 93.0 | 180.0 | 1.1 | 712.1 |
| 1972 | 262 | 944.3 | 72.0 | 447.0 | 99.0 | 193.0 | 1.3 | 812.3 |
| 1973 | 268 | 979.5 | 80.5 | 436.7 | 107.7 | 198.4 | 44.7 | 8680 |
| 1974 | 368 | 1,011.4 | 80.9 | 463.6 | 117.3 | 201.9 | 16.1 | 879.8 |
| 1975 | 361 | 1,078.8 | 86.4 | 519.2 | 123.6 | 230.3 | — | 959.5 |
| 1976 | 401 | 1,132.8 | 93.0 | 513.5 | 134.5 | 237.3 | 18.7 | 997.0 |
| 1977 | 401 | 1,216.6 | 105.7 | 526.4 | 153.8 | 254.6 | 20.8 | 1,061.3 |
| 1978 | 401 | 1,385.1 | 115.7 | 589.2 | 162.0 | 275.6 | 6.1 | 1,148.3 |
| 1979 | 401 | 1,525.5 | 149.4 | 634.6 | 201.3 | 296.3 | 4.7 | 1,286.3 |
| 1980 * | 403 | 1,668.0 | 181.0 | 617.0 | 216.0 | 332.0 | 18.0 | 1,364.0 |

* உறுதிப்படுத்தப்படாதது

ஆதாரம்: இலங்கை மின்சார சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ஆயுதங்களைக் கீழே போடுங்கள்

## —செலவினம் எடுத்துக்காட்டும் உண்மை

— ரூபன் லோவ்

1980களையும் 1990களையும் எதிர் நோக்கும் படுமோசமான பிரச்சினைகள், பணவீக்கமும் எரிசக்தி நெருக்கடியும் வேலையில்லாத் திண்டாட்டமுமாகும். பண வீக்கம் "எங்கள் யுகத்தைப் பீடித்துள்ள ஒரு புற்று நோயாகும்" என்று கடந்த "உலகப் பத்திரிகை"யின் மலர் குறிப்பிட்டது. மனித நிலைமையில் உள்ளடங்கிய தீர்க்க முடியாத பிரச்சினைகளைப் பற்றி நாம் இங்கு கவனிக்கிறோமா? இல்லை. அவை தற்போதுள்ள ஒழுங்கை அமைத்துள்ள சில குறிப்பிட்ட பொருளாதார கட்டுக்கோப்புகளினால் ஏற்பட்டுள்ள விளைவுகளாகும். உதாரணமாக, ஆயுதப் பெருக்கப் போட்டிக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்துக்குமிடையேயுள்ள தொடர்பு இந்த விசித்திர நிகழ்வை வேறொரு கோணத்திலிருந்து தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. கீழ்க் கண்ட அண்ணளவான புள்ளிவிவரங்களிலிருந்து இதைத் தெரிந்து கொள்ளலாம்.

1979ம் ஆண்டின் போதும், 1980ம் ஆண்டு ஆரம்பத்திலும் ஆயுதங்கள், போர் ஆயத்தங்களின்பேரில் உலகம் செலவிட்ட பணம் நிமிடமொன்றுக்கு மில்லியன் டொலர்களாகுமென ஐ. நா. மதிப்பிட்டுள்ளது. ஒவ்வொன்றும் 30 மாணாக்கர்களைக் கொண்ட ஓராயிரம் வகுப்பறைகளை நிர்மாணிப்பதற்குரிய செலவுக்கு இத்தொகை மட்டும் போதும். ஆயுதங்கள், போர் ஆயத்தங்களின் பேரில் ஆண்டொன்றுக்குச் செலவிடப்படும் பணம் முழு உலகுக்குமான பாடசாலைக் கட்டடங்களைக் கட்டுவதற்கான செலவுக்குப் போதுமானது. உலக ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டோரைக் கொண்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 20 சதவிகிதத்தினர் குறைவான போஷாக்கையே பெறுகின்றனர்; 50 சத விகிதத்தினருக்குக் குடிநீரில்லை; 15 வயதுக்கு மேற்பட்டோரில் 50 சதவிகிதத்தினர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்; 55 சதவிகிதத்தினர் வேலையில்லாதிருக்கின்றனர்; அல்லது குறைவான வேலைவசதியே பெறுகின்றனர்; 60 சதவிகிதத்தினருக்கு வைத்திய கவனிப்பில்லை. இராணுவப் படைகள், இராணுவ சாதனங்களின் பேரில் செலவிடுவதில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முன்னணியில் இருக்கின்றன. ஆனால், இதிலுள்ள கூத்து என்னவென்றால், மூன்றும் உலகத்தைச் சேர்ந்த நாடுகள் 1977ம் ஆண்டிலிருந்து சுகாதாரத்தின் பேரில் செலவிடுவதைவிட ஆறு மடங்குக்கும், கல்வியின் பேரில் செலவிடுவதைவிட இரு மடங்குக்கும் மேற்பட்ட தொகையை இராணுவ படைகள், ஆயுதங்களின் பேரில் செல்விட்டு வந்துள்ளன. இத்துடன் அந்நாடுகள் உலகின் போர் நடவடிக்கைகளுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 12·5 சதவிகிதத்தை ஆக்குகின்றன. ஆதலால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இராணுவ சாதனங்களை வாங்கி உபயோகிக்கும் நாடுகளாகியுள்ள அதே சமயத்தில் போர்க்களங்களாகவும் மாறியுள்ளன. 75 கோடி மக்கள் எவ்வாறு தற்போது உள்நாட்டுச் சண்டைகளிலும் எல்லைப் போர்களிலும் ஈடுபட்டுள்ளனர் என்பதை இது விளக்குகிறது.

1970ம் ஆண்டுக்கும் 1978ம் ஆண்டுக்குமிடையே மூன்றும் உலகுடன் நடைபெற்ற ஆயுத வியாபாரம் 374.6 சத விகிதம் வளர்ந்தது. கடந்த வருடத்தில் உலக மட்டத்திலே ஆயுதப் படைகள் 5.6 சத விகிதம் வளர்ந்தன. மெக்ஸிகோவின் இராணுவ வரவு செலவுத் திட்டம் உட்படப் பிரதான நாடுகளின் இராணுவ வரவு செலவுத் திட்டங்களில் செலவுகள் அதிகரித்து வருகின்றன. மெக்ஸிகோவின் இராணுவச் செலவினம் 1979ம் ஆண்டில் 78 கோடி டொலரை எட்டியது. இராணுவச் செலவினத்தைப் பொறுத்தவரை, மெக்ஸிகோ இப்பொழுது எண்ணெய் உற்பத்தி நாடுகள் குழுவுக்குள்ளே இலத்தீன் அமெரிக்காவில் மிக உயர்ந்த ஸ்தானங்களை வகிக்கும் நாடுகளுக்கிடையேயுள்ளது. இராணுவக் கைத்தொழிலின் விஸ்தரிப்பு புதிய வேலைகளைச் சிருஷ்டிக்கிறதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், நாம் நாடும் புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கு வேலையில்லாத் திண்டாட்டத்துக்கெதிரான தனது போராட்டத்துக்கு இராணுவவாதத்தினதும் போர் ஈடுபாட்டுக் கைத்தொழிலினதும் விஸ்தரிப்பை அடிப்படையாகக் கொள்ள முடியாது. தகவல் ஒழுங்கு உட்படச் சகல புதிய ஒழுங்குகளும் இந்தக் கோட்பாட்டிலிருந்தே ஆரம்பமாக வேண்டும்; அதன்படியே நடக்க வேண்டும். ஆயுத விஸ்தரிப்புப் போட்டி பற்றி மௌனமாயிருப்பதென்பது அதற்கு உடந்தையாவதாகும்.

உலக வங்கி மதிப்பீடுகளின்படி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 1975ம் ஆண்டுக்கும் 2000 ஆவது ஆண்டுக்கும் இடையே 55 கோடி மக்களுக்கு வேலைகளைச் சிருஷ்டிப்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்; அஃதாவது, ஆண்டொன்றுக்கு 2.2 கோடி வேலைகள். உதாரணமாக, மெக்ஸிகோ போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் புதிய கைத்தொழில் வேலைகளைச் சிருஷ்டிப்பதாயின், வேலையொன்றுக்கு 6,740 டொலர் செலவாகும் என மெக்ஸிகோவில் இத்துறையிலுள்ள மூலதனம்/தொழிலாளி விகிதத்தின் தோராயத்திலிருந்து தெரிய வருகிறது. புதிய வேலைவாய்ப்புக்களைச் சிருஷ்டிக்கச் செலவு குறைவாயுள்ள மீன்பிடித்தல் போன்ற மற்றும் துறைகள் உள்ளன; இதில் ஒவ்வொரு வேலைக்கும் ஏறக்குறைய 2,000 டொலர் செலவாகிறது. பொருளாதார பரப்புக்கும் நாட்டுக்கும் ஏற்றவாறு இச்செலவுக் கணக்குகள் மாறுபடுகின்றன. ஆனால், விஷயத்தைத் திருஷ்டாந்தப்படுத்த நாம் ஒரு சராசரித் தொகையை எடுத்துக் கொள்

வோம். ஐ. நா. மதிப்பிடுவது போல, உலகெங்கும் வருடாந்தம் நடைபெறும் இராணுவச் செலவினம் 75,000 கோடி டொலராயிருந்தால், ஒவ்வொரு நிமிடமும் 14 லட்சம் டொலர் செலவிடப்படுமென்று இதற்குப் பொருளாகும். மெக்ஸிகோ போன்ற ஒரு நாட்டில் வேலையொன்றுக்கு ஆகும் செலவின்படி, இப்பணத்தைக் கொண்டு ஒவ்வொரு நிமிடமும் 200க்கு மேற்பட்ட புதிய வேலைகளைச் சிருஷ்டிக்க முடியுமென நாம் அனுமானிக்கலாம். அப்படியாயின், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அடுத்த 25 வருடங்களில் 55 கோடி வேலைகள் தேவைப்படுமானால், தற்போதைய வருடாந்த இராணுவச் செலவைக் கொண்டு அதே காலப் பகுதியில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட வேலைகளைச் சிருஷ்டிக்கலாம். இராணுவச் செலவு ஐந்து வருடங்களுக்குக் கைத்தொழில் வேலைகளைச் சிருஷ்டிப்பதற்குப் பிரயோகிக்கப்பட்டால், உலக வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிவிட முடியுமென்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

ஆனால், என்ன நடைபெற்று வருகிறது? உலகம் வறிய நாடுகளுக்கு உதவி செய்வதில் செலவிடும் பணத்தைவிட 20 மடங்கு அதிகபணத்தை இராணுவ மேம்பாட்டு நிலைகளைச் சிருஷ்டிக்க முயல்வதில் செலவிட்டு வருகிறது. இக்கணக்கு விவரங்கள் கூறும் சாட்சியம் உண்மை நிலைமையைத் தெளிவாக எடுத்துக் காட்டும் வன்மையுடையதாயுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சுகாதாரம், கல்வி அல்லது வீடமைப்பு போன்ற சேவைப் பிரச்சினைகளையும் தீர்க்க நிதிவளங்கள் இருந்து வருகின்றனவென்பது வெளிப்படை. அவை ஒரு சிலரின் கைகளில் போய்க் குவிந்திருப்பதே இங்குள்ள தடையாகும். நிதிவளங்களின் இத்தகைய ஏற்றத்தாழ்வான ஒரு பகிர்வு, அது உண்டாக்கும் நலன்களுடன்—இந்த நலன்கள் பெரும்பாலும் இராணுவ சார்பானவை—சேர்ந்து தற்போது இருந்து வரும் ஒழுங்குக்குச் சிரஞ்சீவி ஆயுளைக் கொடுக்க உதவி வருகிறது. இவ்விதமாக ஒரு விஷ சக்கரம் அமைக்கப்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை தோன்றியதற்கு நிதிவளங்களில்லாக் குறை காரணமல்ல. ஆனால், சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் ஒரு சிலர் பெரும்பான்மையோர் மீது ஆதிக்கஞ் செலுத்தும் வகையில் அமைந்துள்ள ஒரு பொருளாதார ஒழுங்கின் கட்டுக்கோப்பினால் ஏற்பட்டுள்ள விளைவுகளே அதற்குக் காரணம். அந்நிகழ்வுகளைக் குறித்து மௌனம் சாதிக்கும் தகவல் தொடர்புத் துறையில் இந்த ஒழுங்கு பிரதிபலிக்கின்றது. ”உலகப் பத்திரிகை” மலரில் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் பயனுள்ளதாகும். அதற்குக் காரணமுண்டு; ஏற்றத் தாழ்வுகளைப் பிறப்பிக்கும் ஒரு கட்டுக்கோப்பை வன்மையாகக் கண்டிக்க அது உதவுகின்றது. அத்துடன், ஒரு மேலான ஒழுங்குக்காக அது அக்கறையோடு பிரயத்தனஞ் செய்கின்றது.

முடிவாக, இராணுவச் செலவினத்துக்கும் வேலைகளைச் சிருஷ்டிக்கும் சாத்தியக் கூறுக்குமிடையேயுள்ள தொடர்பு அனுமான அடிப்படையிலும் தெளிவற்றதாயும் அமைந்திருந்த போதிலும், ஆதிக்கஞ் செலுத்தும் பொருளாதார, அரசியல் கட்டுக் கோப்புகளுக்குள்ளேயே அந்த முரண்பாடுகளும் தடைகளும் உள்ளனவென்பதை அது தெளிவாக்கிறதென்று கூறினால் போதும். இதை கோலிலிருந்து ஆரம்பிப்பதெனப் மறுப்பதென்றால், தவறான அளவு பொருள்.

## மனிதக்காரணி

— ஸுபைதா முஸ்தபா
“டோன்,” கராச்சி

பாகிஸ்தானில் நெசவு நிலையமொன்றை மூடவேண்டியிருப்பதன் காரணமாக ஒரு நெசவுத் தொழிலாளி தனது வேலையை இழக்கும் போது, வேலையற்றோரின் தொகையில் ஒன்று கூடுகிறது. ஆனால், இந்த மொட்டையான, உணர்ச்சியற்ற புள்ளி விவர உறுதிச் சொல்லுக்குப் பின்னால் ஓர் ஆழ்ந்த மனித சோகநாடகம்-வேலையில்லாததனால் ஏற்படும் அதோகதி நிலையும் கொடிய மனவேதனையும்—அடங்கியுள்ளது.

ஒரு வேளை அவர் இன்னொரு வேலையைக் காணாதிருக்கலாம். மூன்றாம் உலகிலுள்ள மற்றும் 60 கோடி பேரைப் போல, அவர் பரம ஏழைகளின் வளர்ந்து வரும் படையில் சேருவதற்குப் போவார். இன்று உலகெங்கும் காணப்படும் பொருளாதார நெருக்கடியினதும், தேசிய குறைவிருத்தியினதும் ஓர் நேரடியான விளைவாகத் தோன்றியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் மூன்றாம் உலகின் பொருளாதாரங்களைத் துரிதமாக அரித்து வருவது மாத்திரமன்றி அதன் சமூக, அரசியல் அமைப்புகளுக்கும் ஒரு பயமுறுத்தலாக உருவெடுத்து வருகிறது.

உலகில் இருப்பதாக மதிப்பிடப்படும் 150 கோடி தொழிலாளர்களில் மூன்றில் இரு பங்கினர் வளர்முக நாடுகளில் வசித்து வருகிறார்கள். இவர்களில் 43 சதவிகிதத்தினர் வேலையில்லாதிருக்கிறார்கள்; அல்லது குறை வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். வெறும் எண்ணிக்கையை நோக்கும் போதே இந்தப் பிரச்சினையின் பிரமாண்டமான தன்மை மற்றெல்லாவற்றையும் புதைத்துவிடுவதாயுள்ளது. ஆனால், புள்ளி விவரங்கள் மட்டும் சமூக, அரசியல் இழப்புக்களை வெளிப்படுத்துவதில்லை. சமூக சேவைகள் ஆரம்ப கட்டத்திலுள்ளன; சுகாதாரப் பாதுகாப்பு ஒரு சிறு தொகையினரான சிறுபான்மையோருடன் நின்று விடுகிறது; ஆரம்ப கல்வி இலவசமாயிருப்பது அபூர்வம். வேலையற்றோருக்கு உபகாரப் பணம் வழங்கப்படுவதாகக் காதில் விழவில்லை. சம்பள விகிதங்கள் மிகக் குறைவாயிருப்பதால், கிரியாம்சையில் எத்தகைய சேமிப்புப் பணமுமில்லை. புதிதாக மலர்ந்து வரும் மாநகரங்களுக்குக் கிராமங்களிலிருந்து குடிபெயரும் கோடானு கோடி மக்களை வேலையில்லாத் திண்டாட்டம் தாக்கும் போது, சீற்றமும் விரக்தியுமுற்றவர்களின் நிலையற்ற வர்க்கமொன்று சிருஷ்டிக்கப்படுகின்றது.

ஆதலால், வேலை வாய்ப்புக்களை உண்டாக்குதலே அரசாங்கங்

களின் முதல் முக்கிய பணிகளில் ஒன்ருகியுள்ளது. வேலை வசதிகளைச் சிருஷ்டிக்க உத்தேசிக்கப்படும் உபாயங்களில் மிகப் பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒன்று யாதெனில், பெரும் கைத்தொழில்களை ஏற்படுத்துவதாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெரிய கைத்தொழில்களில் இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் பொருள்கள், பகுதி உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் கணிசமான அளவில் அதிகரித்தால், பெருந்தொகையான தொழிலாளர்களுக்கு இந்த உற்பத்தித் துறையில் வேலைகளை உறுதிப்படுத்த முடியும்.

உலகின் கைத்தொழில் உற்பத்தியில் அபிவிருத்தியடை ந் து வரும் நாடுகளின் பங்கு 1960 களில் 7 சதவிகிதமாயிருந்தது. 1970களில் இது 9 சத விகிதத்துக்கு உயர்ந்துள்ளது. உலகக் கைத்தொழில் வேலை வாய்ப்புக்களில் அந்நாடுகளின் பங்கு 1978 ஆம் ஆண்டில் 26 சத விகிதமாயிருந்தது. இது 1975 ம் ஆண்டில் 33.1 சத விகிதமாக அதிகரித்துள்ளது.

எனினும், பெரும் கைத்தொழில்களை ஏற்படுத்தும் நடவடிக்கை மூன்ரும் உலகிலுள்ள வேலை வாய்ப்பு நிலைமையில் உண்மையான தாக்கத்தை உண்டாக்குவதாயின், அதன் வேகம் பெருமளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டியதவசியமாகும். சர்வ தே ச வர்த்தகம், கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, தாராளமாக்கப்ப டா த வரை, இது சாத்தியமல்ல. மூன்ரும் உலக நாடுகள் ஆரம்பத்தில் தங்களுடைய கைத்தொ ழி ல் வேலைத் திட்டங்களில் இறக்குமதிகளைப் பிரதியீடு செய்வதற்கே முக்கியத்துவம் அளித்தன. ஆனல், உற்பத்திச் செலவுகள் உயர்ந்ததால், இறக்குமதிப் பிரதியீட்டுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் ஏற்றுமதிகளைப் பெருக்கும் நோக்கத்துக்கு மாற்றப்பட்டது. எனினும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கைத்தொழில் உற்பத்தியென்பது சிறு தொகையான பாரம்பரிய நுகர் பொருள்களை உற்பத்தி செய்வதுடன் நின்று விடுகிறது. மேலும், மூன்ரும் உலகின் எளிமையான உற்பத்திப் பொருள்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள சந்தைகளில் உட்கவரப்பட்டால் மட்டுமே மூன்ரும் உலகில் கைத்தொழில் வளர்ச்சியைத் தூண்டிவிட முடியும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குக் கைத்தொழில்மயமான நாடுகள் மேலும் ஊக்கத்தைக் குறைத்து வருகின்றன. கைத்தொழில்மயமான நாடுகள் காப்பு வரிகளின் உருவத்திலும், காப்பு வரிகளற்ற உருவத்திலும் வர்த்தகத்துக்குத் தடைகளை ஏற்படுத்தும் உபாயங்களை அதிகரித்த அளவில் கைக்கொண்டு வருகின்றன. இவ்விதமாக, செல்வந்த நாடுகளின் கட்டுப்பாட்டுக் கொள்கைகள், துரிதமாக வளர்ந்துவரும் தனது தொழிலாளர் படைக்கு அதிக வேலை வசதிகளைச் சிருஷ்டிக்க மூன்ரும் உலகம் செய்யும் முயற்சிகளைத் தடுத்து வருகின்றன. உதாரணமாக, ஐரோப்பிய பொருளாதார சமூகம் அபிவிருத்தியடைந்துவரும் பல நாடுகளிலிருந்து அரிசியைத் தீர்வையின்றி இறக்குமதி செய்கின்றது. ஆனல், இந்த அரிசி பதப்படுத்தப்பட்டால், 13 சத விகித காப்பு வரியை எதிர்நோக்கவே ண் டியிருக்கிறது. இயற்கையாகவே, அந்த அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்பு பதப்படுத்தப்பட்டால், ஏற்றுமதி நாட்டில் உள்ள வேலையற்ருேருக்கு பல வேலைகள் உண்டாக்கப்படுகின்றன. இதேபோல, பதப்படுத்தாத மரங்கள் ஆஸ்திரேலியாவுக்குள் தீர்வையின்றிப் போகி ன் ற ன. கள் எனில், அவற்றின் மீது 14 கக் கூடிய வாளாலறுத்த மரங் டில் வேலைவாய்ப்புக்களை உண்டாக் சத விகித காப்புவரி விதிக்கப்படுகிறது.

கைத்தொழில் மயமான நாடுகள் சகல வர்த்தகத்தின் மீதும் 50 சத விகித காப்புவரிக் குறைப்புக்கு உடன்படுமானல், அதன் பயனக ஏற்படும் ஏற்றுமதி விஸ்தரிப்பால் மூன்ரும் உலகில் 271,000 மேலதிக வேலைகள் சிருஷ்டிக்கப்படுமென அங்டாட் 1976ம் ஆண்டில் நடத்திய ஆராய்ச்சியொன்றில் மதிப்பிட்டது.

தெற்கிலிருந்து மலிவான ஏற்றுமதிகள் கட்டுப்பாடின்றித் தாராளமாக வருமாயின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள வேலை வசதிகள் ஒழிந்துவிடு மெ ன் று வடக்கிலுள்ள அரசாங்க ங் க ள் செய்யும் வாதம் பொருத்தமானதல்ல. 1976ம் ஆண்டில் தெற்கிலிருந்து வந்த மலிவான இறக்குமதிகளால் வடக்கு 800,000 வேலைகளை இழந்ததென்று சர்வதேச தொழில் தாபனத்தின் ஆராய்ச்சிப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. ஆனல், வடக்கின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட நேரொத்த அதிகரிப்பினல் உயர் தேர்ச்சித் திறன்கள் தேவைப்படும் துறைகளில் 2.4 மில்லியன் புதிய வேலைகள் சிருஷ்டிக்கப்பட்டன. இந்த உயர் தேர்ச்சித் திறன்களைப் பொறுத்தவரை, இந்தநாடுகள் ஒப்பியல் ரீதியாக ஓர் அனுகூலமான நிலையை அனுபவிக்கின்றன. இவ்வாராய்ச்சி முடிவுகளை பிராண்ட் விசாரணைக் கமிஷனும் ஊர்ஜிதஞ் செய்தது. இவ்விஷயத்தில் சில சீராக்கல் நடவடிக்கைகள் தேவைப்படும் என்பது தெளிவு. ஆனல், உலக வர்த்தகத்தின் கூட்டுமொத்த விஸ்தரிப்புக்கான வாய்ப்பை நோக்குமிடத்து, இவை வடக்கின் நலன்களுக்குப் பாதகமானவையாயிருக்கத் தேவையில்லை.

உண்மையில் தேவைப்படுவது என்னவென்ருல், வடக்கிலுள்ள கண்ணேட்டத்தில் ஒரு மாறுதல் தான். இறக்குமதிகள் மீது தீர்வைகள் விதிப்பதன் மூலம் வர்த்தகத்தைப் பாதுகாப்பதற்கு அனுசரணையான கொள்கையும், வடக்கிலுள்ள அரசாங்கங்கள் தங்களுடைய கைத்தொழில் துறையை மாற்றியமைக்க வேண்டா வெறுப்புடனிருப்பதும், புதிய வேலைகளைச் சிருஷ்டிக்கவும், அதன் மூலம் தங்கள் நடுவே தலைவிரித்துத் தாண்டவமாடும் கொடிய வறுமையைக் குறைக்கவும் மூன்ரும் உலகம் செய்து வரும் முயற்சிகளை அநாவசியமாகத் தடுத்து வருகின்றன.

# தொழிலாளர்களுக்கு குறைந்த வேலை வசதி

# பங்களாதேஷ் கிராமங்களின் குரல்கள்

— பெட்சி ஹார்ட்மன்

— ஜேம்ஸ் போய்ஸ்

பங்களாதேஷிலுள்ள நில மற்ற, வறிய நாட்டுப்புற உழவர்கள் நீடித்த காலமாகப் போதிய வேலைவசதிகளின்றி இருந்து வரும் நிலைமை, அந்நாட்டின் மிகப் பெரிய வளமான தேச மக்களின் உழைப்பு பயங்கரமாக வீண் விரயஞ் செய்யப்படுவதைப் பிரதிபலிக்கின்றது. விவசாயத் தொழிலாளருக்கான தேவை பெருமளவுக்குப் பருவகாலத்தைப் பொறுத்ததாயுள்ளது—வசந்த காலத்திலே நெல்வயல்களில் அறுவடை செய்தல், களைபிடுங்குதல், மாரிகாலத்தில் நாற்று நடுதல் ஆகிய வேலைகள் நடைபெறும் உச்சக் காலப் பகுதிகளில் ஏழை மக்களில் பெரும்பாலோர் வேலை பெறலாம். ஆனால் இக் காலப் பகுதிகளுக்கிடையே அவர்கள் பெரும்பாலும் வேலையில்லாமலே இருக்கின்றனர்—இக்காலத்தில் அவர்களுக்கு எத்தகைய வருவாயுமில்லை. 1977ம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிப் பரிசீலனையொன்று, பருவ காலத்தைப் பொறுத்து வேலை வசதிகளில் ஏற்படும் இந்த ஏற்றத் தாழ்வுகளைக் கணக்கிலெடுத்து, பங்களாதேஷின் கிராமப்புறங்களில் வேலையற்றிருப்போரின் விகிதம் திடுக்கிடும்படியாக 42 சத விகிதமாக உள்ளதெனக் குறித்தது. அநேகரைப் பொறுத்தவரை, இத்தொகை நாட்பட்ட பசிப் பிணியையும், ஏன் பட்டினி கிடக்கும் நிலையைக் கூடப் பிரதிபலிக்கின்றது.

வேலை வசதிக் குறைவு விரிவான அளவில் காணப்படுகிறதென்றால் என்ன அர்த்தம்? கோடிக்கணக்கான மக்கள் அத்தியாவசிய நுகர்ப்பொருள்களை வாங்க முடியாத நிலையிலுள்ளனர். "பயன்படத்தக்க கோரிக்கை" எனப் பொருளியலாளர் குறிப்பிடும் இக்கோரிக்கையின்மையே பொருளாதாரம் முன்னேற்றமின்றித் தேங்கிக் கிடப்பதற்கு ஒரு காரணமாகும். ஒரு சந்தையின்றிக் கைத் தொழில் வளர முடியாது. ஆனால், சாப்பிடுவதற்கே வகையின்றியிருக்கும் குடும்பங்கள் பாதணிகள், சவர்க்காரம் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கூட உபயோகிக்கப் போவதில்லை. உண்மையில், பொருள்களை வாங்கும் சக்தி அவர்களுக்கு இல்லாதிருக்கும் இக்குறை உணவு உற்பத்தியையும் தடுத்து நிறுத்தலாம். அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி ஆராய்ந்து, ஏ.ஐ.டி. (சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் ஸ்தாபனம்)யின் டாக்கா கிளை நிலையத்திலிருந்து கிடைத்த கடல் தந்தியொன்று கூறுவதாவது: "இந்த ஆராய்ச்சி முடிவுகள் முறையே, தற்போது கைக்கொள்ளப்பட்டுள்ள உணவுத் தானிய உற்பத்தி உபாயங்களின் நடைமுறைப் பிரயோகம் குறித்துச் சந்தேகத்தை எழுப்புகின்றன. ஏனென்றால் கோரிக்கையின் அளவு பொதுவாகக் குறைந்திருப்பதாக அவை குறிப்பாலுணர்த்துகின்றன.

"பங்களாதேஷின் கிராமப்பகுதிகளிலுள்ள வறிய மக்கள், தொழிலாளர் அதிகமாகத் தேவைப்படும் விவசாய, கைத்தொழில் கருத்திட்டங்களில் இதுவரை பயன்படுத்தப்படாத ஒரு பிரமாண்டமான தொழிலாளர் படையைப் பிரதிபலிக்கின்றனர். அவர்கள் மட்டும் அபிவிருத்தி வேலைகளுக்குத் திரட்டப்படுவார்களேயானால், நாட்டின் பொருளாதாரத்துக்குப் பாரமாயிருக்கும் ஒரு நிலையிலிருந்து ஒரு திடமான ஆஸ்தியாகும் நிலைக்கு அவர்களை மாற்ற முடியும். எனினும், பங்களாதேஷில் அபிவிருத்தியைச் சாதிப்பதற்கான திறவுகோல், தொழிலாளர் அதிகமாகத் தேவைப்படும் கிராம மராமத்துத் திட்டங்களிலே தங்கியுள்ளதென அடிக்கடி ஆமோதிக்கப்பட்ட போதிலும், இத்தகைய திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் அழுத்தமான அரசியல் யதார்த்த நிலைகளால் செயலிழந்து நின்றுவிடுகின்றன; அரசாங்கம் மற்றும் காரியங்களுக்கு முதலிடம் அளிக்கவேண்டியிருக்கிறது. ஏ. ஐ. டி. கடல் தந்தி மேலும் குறிப்பிடுவதாவது: "முகாமை செய்வதில் எழுந்த பல்வேறு கஷ்டங்களின் காரணமாக, அரசாங்கத்தின் கிராம மராமத்து வேலைத்திட்டம் சமீப வருடங்களில் சீரழியும் நிலையிலிருந்து வருவதாகப் பரந்த அளவில் கூறப்படுகிறது."

கிராமப்புறங்களிலுள்ள ஏழை மக்களைப் பொறுத்தவரை, தங்களுடைய உழைப்பால் அபிவிருத்தியடையக் கூடிய காணிகள் தங்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கும் வரை இத்தகைய கருத்திட்டங்களை மேற்கொள்ள அவர்களுக்கு எந்த விதமான ஊக்குவிப்புமில்லை. மேலும், அதிகமான கிராம மராமத்துத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டாலுங் கூட, காணியற்றோர் எந்த அளவுக்கு நன்மையடைவார்கள் என்பது சந்தேகத் கண்டுபிடித்துள்ளது. வாய்க்கால் துக்கு இடமாயுள்ளது. ஏ- ஐ- டி- சுட்டிக் காட்டுவதாவது:

"இத்தகைய திட்டங்கள் (உதாரணத்துக்கு ஒரு வீதியை அமைத்தல்) ஒரு குறித்த காலத்துக்கு, கிராமத் தொழிலாளர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்துகின்றன; ஆனால், முதலில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கிய அடிப்படைப் பொருளாதார நிலைமைகளை மாற்றுவதற்குப் பொதுவாக ஒன்றுஞ் செய்வதில்லை. அதே சமயத்தில், இத்தகைய திட்டங்கள் நிலச்சுவான்தாரர்களுக்கு நீண்டகால அனுகூலங்களை ஏற்படுத்துகின்றன. உதாரணமாகக் காட்டப்பட்ட இவ்விஷயத்தில், அவர்கள் உள்ளூர்ச் சந்தைகளுக்குப் போக இந்த வீதியை உபயோகிக்கிறார்கள்." இதேபோல, "கிராம மராமத்து வேலைத் திட்டங்கள் வாயிலாக வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வறுமையையும் குறைப்பதற்கான வாய்ப்பு இவ்வேலைத் திட்டத்தின் இரண்டாவதான நன்மைகள் நீதிநியாயமற்ற முறையில் பகிரப்படுவதன் மூலம் எதிரீடு செய்யப்பட்டுவிடும்"

பொருளியல் நோக்கு, மே 1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உலக வங்கி எச்சரிக்கின்றது.

தண்ணீர், எங்கும் தண்ணீர் ஆனால்...

பங்களா தேஷில் தற்போதுள்ள நில உடைமைக் கட்டுக்கோப்பின் விளைவாக, இன்னொரு விலை மதிக்க வொண்ணா விவசாய வளமான தண்ணீர் போதிய அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை. பங்களா தேஷில் பூமியின் மேற்புறத்திலும் பூமிக்கடியிலும் பிரமாண்டமான நீர் வளங்கள் இருந்த போதிலும், நாட்டின் பயிர்க் காணியில் 12 சதவிகிதம் மட்டுமே தற்போது நீர்ப்பாசனத்தைப் பெறுகின்றது. மற்றும் காணிகளுக்கும் நீர்ப்பாசன வசதியளித்தால், வறண்ட மாரி காலத்தில் உற்பத்தியில் பெருமளவு அதிகரிப்பு ஏற்படும்; வசந்த காலத்திலும் பருவமழை காலத்திலும் பயிர்களை வறட்சிக்கெதிராக நிரந்தரமாக உறுதிப்படுத்தும்; வெள்ளச் சேத அபாய ஏதுக்களைக் குறைத்து, கால நேரத்தில் நடுவதை அனுமதிக்கும். ஆனால், இன்று காணிகள் சமமற்ற முறையில் பகிரப்பட்டிருப்பதாலும் காணிகள் துண்டாடப்பட்டிருப்பதாலும் பங்களா தேஷின் மகத்தான நீர்வளங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான கூட்டுறவு முயற்சிகள் தடைப்படுகின்றன.

எந்திரவியல் சவாலாக இருந்த அது கஷ்ட சாத்தியமான ஓர் போதிலும், அணைக்கட்டுகளையும், செய்கரைகளையும், கால்வாய்களையும் அமைப்பதன் மூலம் பங்களா தேஷின் ஆறுகளை அடக்கி வசப்படுத்துவதற்கு நிச்சயமாகப் பெரும் வாய்ப்பு உள்ளது. இந்த அணைக்கட்டுகளும், செய்கைகளும், கால்வாய்களும் மில்லியன் கணக்கான ஏக்கர் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதியை மட்டுமன்றி அத்தியாவசியமாகத் தேவைப்படும் வெள்ளக் கட்டுப்பாட்டையும் வடிகால் வசதியையும் கூட ஏற்படுத்தும். இந்த வேலைகளைச் செய்ய பங்களாதேஷில் ஆள் பலத் தட்டுப்பாடு எதுவுமில்லை. ஆனால், நாம் ஏற்கெனவே கண்டதுபோல், தற்போதுள்ள சமூக அமைப்பில் இந்தத் தொழிலாளர்களைத் திரட்டுவது கிட்டத்தட்ட இயலாத காரியமாகும். மேலும், அநேக தனியார் உடைமைகளாகக் காணிகள் துண்டாடப்பட்டிருப்பதால், இத்தகைய திட்டமெதுவும் பெருங் கஷ்டங்களை எதிர்நோக்கும். உதாரணமாக, கால்வாய்களையும் வாய்க்கால்களையும் நிர்மாணிப்பதற்காக யார் யாருடைய விலையுயர்ந்த காணித்துண்டுகள் தியாகம் செய்யப்படுமென்பதை யார் முடிவு செய்வார்கள்?

உண்மையில் காணிகள் துண்டாடப்பட்டுச் சமமற்ற முறையில் பகிரப்பட்டிருப்பதால், தாழ்வான மேலிழுக்கும் பம்புகள், குழாய் கிணறுகள் மூலம் நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்குரிய அடக்கமான முயற்சிகள் கூட இன்று குலைந்துவிடுகின்றன. உதாரணமாக, ஆழமான குழாய்க் கிணறொன்றிலிருந்து 60 ஏக்கர் காணிக்கு நீர்பாய்ச்ச முடியும். ஆனால், மிகப் பெரிய நிலச்சுவான்தாரர்கள் கூட ஒரு தனிப் பகுதியில் வரிசையாக இவ்வளவு காணிகளைச் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய காணி உடைமைகள் இங்குமங்கும் சிதறிக் கிடக்கின்றன. இத்தகைய கிணறொன்றைப் பூரணமாக உபயோகிப்பதற்கு ஒத்துழைப்புத் தேவை. ஆனால், இதைக் காண்பது கடினம். ஏனென்றால் ஒரு சில பெரிய நிலச்சுவான்தாரர்கள் தங்களுடைய சொந்த நலனுக்காக நீர்ப்பாசன வளங்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். ஏ. ஐ. டி. யின் கடல் தந்தியொன்று, "பம்பு தொகுதி கூட்டுறவுச் சங்கங்கள் கடதாசியில் மட்டுமே இருந்து வருகின்றன அல்லது மற்றப்படி பெரிய நிலச்சுவான்தாரர்களால் கைப்பற்றப்பட்டு வருகின்றன" என்ற பிரசித்தமான உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது.

பங்களாதேஷில் அநேக குழாய்க்கிணறு திட்டங்களுக்கு நிதி வழங்கியுள்ள உலக வங்கி நீரை விவசாயிகளின் வயல்களுக்குக் கொண்டு போவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதில் பிரச்சினைகள் விடாப்பிடியாக எழுவதைக் கள் வெட்டப்படுவதை இலகுவாக்குவதற்காக ஓர் ஆழமான குழாய்க்கிணறு திட்டத்துக்குள் ரணமாக, பண்ணையிலிருந்து சந் யின் ஆராய்ச்சியறிக்கையொன்று மேலதிகமாக ஒரு மில்லியன் டொலர்களை அவர்கள் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது பற்றி ஓர் உலக வங்கி அதிகாரி கூறியதாவது: "நீங்களோ அல்லது நானோ அங்கு போய், அந்த வாய்க்கால்களை வெட்டிவிட முடியும். நீரோடைகளை எவ்வாறு தோண்டுவதென விவசாயிகளுக்குத் தெரியவில்லை என்பது பிரச்சினையாயிருக்கவில்லை. ஆனால், அவர்கள் இந்த நீரோடைகளை வெட்ட விரும்பவில்லை." பங்களா தேஷின் கிராமப்புறங்களில் உள்ள அரசியல் யதார்த்த நிலைமைகள் பெரிய அளவிலான நீர்ப்பாசன வேலைகளை இயலாத காரியமாக்குவதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. தனியொரு குழாய்க் கிணற்றை உபயோகிப்பது கூட பிரச்சினையாயிருக்கிறது.

## சமூக உயரிகளின் முன்னுரிமைச் சலுகைகள்

பங்களாதேஷிலுள்ள ஏற்றத் தாழ்வான நிலை விரும்பிய பலனைக் கொடுக்காதிருப்பதற்கு இன்னொரு பரிமாணமுள்ளது. அரசாங்கத்தின் முதன்மை நிரல் வறியோராயுள்ள பெரும்பாலோரின் தேவைகளைவிட குறுகிய தொகையினரான உயரிகளின் நலன்களையே பிரதிபலிக்கின்றது.

விவசாயம் நிதியில்லாக் குறையினால் மட்டும் பாதிக்கப்படவில்லை; ஆனால், அரசாங்க அதிகாரிகள் கடமைப் பொறுப்பை ஏற்காததனாலும் பாதிக்கப்படுகிறது. உலக வங்கி நேராகச் சுட்டிக் காட்டுவதாவது: "கிராமாபிவிருத்தியில் வெற்றிபெற்றுள்ள ஒரு சில நாடுகளின் (உதாரணமாக, சீனா, தைவான், கொரியா) உதாரணங்கள் உள்ளூர் மக்களுடன் அரசாங்க அதிகாரிகள் விடாமுயற்சியோடும் விடாப்பிடியாகவும் வேலை செய்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றன. "பங்களா தேஷில் நடைபெறும் கிராமாபிவிருத்தி வேலைகளில் இந்த விடாமுயற்சியையும் பிடிவாத உறுதியையும் காண்பது கடினமென்று மிகுந்த நம்பிக்கையுடனிருக்கும் வெளிநாட்டு உதவி அதிகாரிகள் கூட ஏற்றுக்கொள்கின்றனர். பங்களாதேஷிலுள்ள சமூக உயரிகளில் மிகப் பெரும்பாலோருக்குப் பொதுச் சேவை என்ற கருத்தே அந்நியமாயுள்ளது. ஏழைகளாயுள்ள பெரும்பாலோரை அவர்கள் உதாசீனத்துடன் நோக்குகின்றனர். அவர்க

ளுக்குக் கிராமங்கள் தப்பியோடி விடவேண்டிய இடங்களாக இருக்கின்றனவேயன்றிச் சேவை செய்யப்பட வேண்டிய இடங்களாக வில்லை.

உண்மையில், சமீப வருடங்களில் பங்களாதேஷில் நடைபெற்றுள்ள பிரதான அபிவிருத்தி இந்தச் சமூக உயரிகளின் அபிவிருத்தி தானாகும். பங்களாதேஷை அவசரமாக நெருக்கிக் கொண்டிருக்கும் வேலைவசதிப் பிரச்சினை காணியில்லாத கோடிக்கணக்கான கிராம மக்களுக்கு வேலை வழங்குவதாகும். ஆனால், உலக வங்கியின் அறிக்கை கூறுவது போல, "வேலை வசதிகளில் திடீர்ப் பெருக்கத்தைக் கண்டு வந்துள்ள ஒரே ஒரு துறை பொது நிர்வாகத்துறையேயாகும்." காணியற்ற தொழிலாளர்களின் உண்மைச் சம்பளங்கள் நேராகக் கீழ் நோக்கி விழுந்து வரும்போது, அரசாங்கம் அண்மையில் சிவில் சேவை அதிகாரிகளின் சம்பளங்களை 20 சத விகிதம் முதல் 25 சதவிகிதம் வரை உயர்த்தியது.

டாக்டர்களிலிருந்து மெக்கானிக்குகள் வரையான தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் பங்களாதேஷில் தட்டுப்பாடாக இருந்து வருகிற போதிலும், வெளிநாடுகளுக்குச் செல்லுமாறு இத்தகைய ஊழியர்களுக்கு அரசாங்கம் இப்பொழுது ஊக்கமளித்து வருகின்றது. அவர்கள் வெளிநாடுகளிலிருந்து அந்நியச் செலாவணியைத் தாயகத்துக்கு அனுப்புவார்கள் என்பதே இந்நடவடிக்கையின் நோக்கம். (அந்நியச் செலாவணி அரசாங்கத்துக்குத் தேவைப்படுவதற்கு ஒரு காரணம், வெளிநாட்டு உதவிக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.) தற்போது பங்களாதேஷ் மக்களில் 3,000க்கு மேற்பட்டோர் ஒவ்வொரு மாதமும் மத்திய கிழக்குக்குக் குடிபெயர்கின்றனர். பங்களாதேஷின் சிரேஷ்ட தாதிமார்களில் அதிகமானோர் இப்பொழுது தங்கள் சொந்த நாட்டில் விட வெளிநாடுகளிலேயே வேலை செய்து வருகிறார்கள். "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை டாக்காவிலிருந்து தெரிவிப்பதாவது: "தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் பெருந்தொகையாக வெளியேறிக் கொண்டிருப்பது எவ்வளவோ கவலையளித்து வருதால், பங்களாதேஷ் பிரஜைகளைப் பயிற்சிக்காக அமெரிக்காவுக்கு அனுப்புவதைச் சர்வதேச அபிவிருத்தி முகவர் ஸ்தாபனம் (ஏ. ஐ. டி.) அநேகமாக நிறுத்தி விட்டது. இந்த வெளியேற்றம் மக்கள் பசிப்பிணியால் அவதிப்படும்போது உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் செயலை ஒத்ததாகும். ஆதாயங்கள் எங்கே மிக உயர்ந்த அளவில் கிடைக்கின்றனவோ, தேவைகள் எங்கே ஆகக் கூடிய அளவில் உள்ளனவோ, அங்கே வளங்கள் போகின்றன."

பங்களாதேஷில் ஏற்படும் பசிப்பிணி இயற்கையானதோ அல்லது தவிர்க்க முடியாததோ அல்ல. அதன் காரணங்கள் ஆழமாக வேரூன்றியுள்ளன. ஆனால், அவை மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டவை. விவசாயிகளிடமிருந்து வடிகட்டப்படும் உபரிஉழைப்பு ஆராதூரித்தனமாகச் செலவழிக்கப்படுகிறது; காணிகளும் தொழிலாளர்களும் நீர்வளங்களும் தக்கவாறு பயன்படுத்தப்படாத நிலைமை இருந்து வருகிறது; அத்துடன், தேசிய மட்டத்தில், நிதிவளங்களும் பெரும்பாலான மக்களின் நலனை விட ஒரு சிலரின் நன்மைக்காக ஒதுக்கப்படுகின்றன. நாம் மகிழ்ச்சியூட்டாத நிலைமைகளை விவரித்திருந்த போதிலும், பங்களாதேஷின் எதிர்காலம் நிச்சயமாக நம்பிக்கையற்று விடவில்லை. அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாயுள்ள தடைகளை இனங்காண்பதே ஒரு திட்டமான மாற்று முறையை உருவாக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய ஒரு முக்கியமான முதல் நடவடிக்கை

"பங்களாதேஷிலுள்ள காணியற்ற வறிய நாட்டுப்புற உழவர்கள் நீடித்த காலமாகப் போதுமான வேலை வசதிகளில்லாமல் இருந்து வரும் நிலைமை, அந்நாட்டின் மிகப் பெரிய வளமான தேசமக்களின் உழைப்பு பயங்கரமாக வீண் விரயஞ் செய்யப்படுவதையே பிரதிபலிக்கின்றது."

(26ம் பக்கத் தொடர்ச்சி)

சாரப் பாவனை அதிகரிப்புக் குறிப்பிடக்கூடிய அளவுக்கு இருக்கவில்லை. 1978-ம் ஆண்டில் 12 சதவீதம் மட்டுமே கைத்தொழில் மின்சாரப் பாவனை உயர்ந்தது. ஆனால், 1979-ல் அதிகரிப்பில் 8 சதவீதமாகவும் 1980-ல் 3 சதவீதமாகவும் வீழ்ச்சி கண்டது.

கடந்த 5 வருட காலத்தில் மின்சாரப் பாவனை அதிகரித்ததால் அதன் தேவை 75 சதவீதத்தால் உயர்ந்த போதிலும் நீர் மின்சார உற்பத்தி 25 சதவீதத்தால் மட்டுமே உயர்ந்தது. அதன் விளைவாகவாக மின்சார விநியோகத்தில் நிலவிய மேலதிக நிலை மாறிப் பற்றாக்குறை நிலைமை உருவெடுத்தது. போவத்தனைத் திட்டம், கன்யொன் திட்டம் ஆகியன பூர்த்தியாகி, மேலதிக நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்வரை அதிக செலவினத்தை ஏற்படுத்தும், இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்யில் செயல்படும் அனல் மின்சார இயந்திரங்களை இயக்கியே மின்சாரத் தேவையைப் பூர்த்தி இப்போதைய மின்சாரப் பிரச் செய்யவேண்டி உள்ளது. இதுவே சினை சம்பந்தமான நிலைமையாகும். இதேவேளை மின்சாரத்தால் இயங்கும் இயந்திரங்கள் அதிக அளவில் பொருத்தப்பட்டு வருகின்றன; பெருந்தொகையான மின்சார உபகரணங்கள் விற்பனையை எதிர்பார்த்துத் தேங்கிக் கிடக்கின்றன. பல மாடிக் கட்டடங்கள் நிர்மாணிப்பதைக் கட்டுப்படுத்துவது என்ற அரசாங்கத்தின் சமீபத்திய முடிவுக்கு முக்கிய காரணம் மின்சாரத்தால் இயங்கும் இயந்திரங்கள், உபகரணங்களின் இறக்குமதியைக் குறைப்பதேயாகும். மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்வதால் இரண்டு வழிகளில் கஷ்டம் ஏற்படுகின்றது. அவற்றின் இறக்குமதிக்காக அதிக அளவு வெளிநாட்டுச் செலாவணி விரயமாவது ஒன்று; நாட்டின் மின்சாரப் பாவனையில் மேலும் பளுவை ஏற்படுத்துவது இரண்டாவதாகும்.

பொருளியல் நோக்கு, மே 1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் வருமுன் அணை தேவை

டோஷியோ ஹட்டனோ

"ஆஸாஹி ஷிம்பன்" (டோக்கியோ)

எங்களுடைய நூறாண்டுப் பழைமைவாய்ந்த பத்திரிகையான "ஆஸாஹி ஷிம்பன்" பழைய யுரகுச்சோ பகுதியிலுள்ள தனது புராதன கட்டடத்திலிருந்து தனது புதிய அதிநவீன தலைமைக் டோக்கியோவில் சுக்கிஜியிலுள்ள காரியாலயத்துக்கு இப்பொழுது தான் வந்தது. ஆசிரியப் பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர்களாகிய நாங்கள் ஒவ்வொருவருக்கும் நியாயம் வழங்கும் எங்களுடைய பாரம்பரியத்துக்கொப்ப, புதிய அறையில் எங்களுடைய மேஜை நாற்காலிகளை எங்கே போடுவதென முடிவு செய்வதற்காகத் திருவுளச் சீட்டு குலுக்கிப் போட்டோம். எனது சகாக்களிடையே ஒப்பியல் ரீதியாக நான் ஒரு கனிஷ்டனாயிருந்த போதிலும், அதிர்ஷ்டவசமாகத் தங்குதடையின்றித் திறந்த வெளிக்காட்சிகளைப் பார்க்க வசதியளிக்கும் ஜன்னலுக்கருகில் ஓர் இடம் எனக்குக் கிடைத்தது.

"மடோகிவா—ஸோகு" (ஜனனல் ஆசனக்காரன்) என்பது ஒரு சில வருடங்களுக்கு முன்பு புதிதாக ஆக்கப்பட்ட ஒரு சாதுரியமான ஜப்பானிய சொற்றொடராகும். இது கம்பெனியின் சுறுசுறுப்பான நடவடிக்கைகளின் பளுவிலிருந்து விடுவிக்கப்பட்டு, பரபரப்பு நிறைந்த சூழ்நிலையில் வேலை செய்து கொண்டிருக்கும் தன்னுடைய கனிஷ்டர்களின் அலுவல்களில் குறுக்கிடாதவாறு ஜன்னலுக்கருகே மேஜை ஒதுக்கப்பட்டு, நடுத்தர வயதுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ளவராயிருக்கும் ஓர் ஊழியரைக் குறிக்கும். இன்னும் ஜனரஞ்சகமாக உபயோகிக்கப்படும் இத்தொடர் மொழியில் கருணாரசச் சாயை படிந்துள்ளது. சம்பளம் பெறும் ஊழியர் ஒருவரை ஒருமுறை வேலைக்கமர்த்திவிட்டால், ஓய்வு பெறும் வயதான 55 அல்லது 60 வரை அவரைக் கம்பெனியின் சம்பளப் பட்டியலில் வைத்திருக்கும் ஈடிணையற்ற ஜப்பானிய தொழில் வழக்கத்திலிருந்தே இச்சொற்றொடர் பிறந்தது. தற்காலிக வியாபார ஒடுக்கம் அல்லது கைத்தொழிலின் கட்டுக்கோப்பில் செய்யப்படும் மாறுதல்கள் போன்ற காரணிகள் அவரை மேல் மிச்சமாக்கக் கூடும்; எனினும், அவை பொருட்படுத்தப் பட மாட்டா. வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடைபெறும் ஒரு நாட்டைச் சேர்ந்த எவருக்கும் இச் சொற்றொடரை விளங்கிக் கொள்வது கடினமாயிருக்க வேண்டும். மேல் மிச்சமாயுள்ள தொழிலாளர் படையைச் சம்பளப் பட்டியலில் வைத்திருக்கும் இவ்வழக்கம் வேலையற்றோரின் விகிதத்தைக் குறைக்க எவ்வளவு தூரம் உதவுகிறதென்பதை எடுத்துக் காட்டும் எந்தப் புள்ளிவிவரங்களுமில்லை. ஆனால், மேல்மிச்சமாயுள்ள இந்தத் தொழிலாளர்களின் மொத்தத் தொகை ஓரிரு வருடங்களுக்கு முன்பு சுமார் இரண்டு மில்லியனிலிருந்து இரண்டரை மில்லியன் வரை இருந்ததாக மதிப்பிடப்பட்டது. இத்தொகையைச் சம்பளப் பட்டியலிலிருந்து நீக்குவதாயின், வேலையற்றோர் தொகை இரு மடங்குக்கு மேல் அதிகரித்துவிடும்.

ஜப்பானின் வேலையற்றோர் விகிதம் குறைவாயிருப்பதற்கு, இவ்விதம் அளவுக்கு மிஞ்சிய தொழிலாளர் படையை அனுமதிக்கும் வர்த்தக நிலையங்கள் அங்கு இருந்து வருவதும், தந்தை பிள்ளைகளை வளர்ப்பது போல் தொழிலாளர்களின் எதிர்காலத்துக்கு வகை செய்யும் விதத்தில் அவர்களை ஆதரித்துக்காக்கும் இத்தகைய வழக்கங்களை வரவேற்கும் ஒரு சமுதாயம் அங்கு இருந்து வருவதும் ஓரளவுக்குக் காரணங்களாகும் என்று விளக்கப்படுகிறது.

இந்த "ஜன்னல்—ஆசனக்காரர்கள்" இருந்து வருவது கம்பெனிகளுக்கு முழு நஷ்டமாகும் என்று கருதிவிடக் கூடாது. அவர்களும் ஒரு விதத்தில் கம்பெனியின் வேலைகளில் தங்கள் முழுப் பங்களிப்பையும் செய்து, மனப்பூர்வமாக ஒத்துழைக்கிறார்கள். எனினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஒதுக்கப்படும் வேலைகள், கம்பெனியில் அவர்கள் 10 வருடங்களோ, 20 வருடங்களோ அல்லது 30 வருடங்களோ இருந்த போது வழக்கமாகச் செய்துவந்த வேலைகளிலிருந்து எவ்வளவோ வித்தியாசமாயிருக்கின்றன. ஆனால், அவர்களிடமிருந்து எந்த முறையீடும் கேட்பதில்லை—எவ்விதமாயினும், காதில் உரத்து விழுவதில்லை. அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைக் கடமைகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

"ஹா—கொயிரி — மசுமே" (பேணிக்காத்த மலர்) என்னும் இன்னொரு ஜப்பானிய சொற்றொடர் இங்கு மீண்டும் எங்கள் நினைவுக்கு வருகிறது. இது, வாழ்க்கை உண்மைகளின் கடுமையிலிருந்து பாதுகாக்கப்பட்டவளாய், கன்னியர் மடத்தில் போல அவளுடைய இல்லத்திலேயே அடைத்து வைத்து வளர்க்கப்பட்ட, கள்ளங்கபடமற்ற, கெட்டுப் போகாத ஒரு கன்னிப் பெண்ணைக் குறிக்கிறது. ஜப்பானிய வர்த்தக ஸ்தாபனங்கள் ஒவ்வொரு வருடமும் காலத்துக்குக் காலம் பல்கலைக் கழகப் பட்டதாரிகளை வேலைக்கமர்த்துகின்றன. ஆனால், சட்டக் கல்லூரிகளின் பட்டதாரிகளிடையேயிருந்து உபயோகத்துக்குத் தயாராயுள்ள வழக்கறிஞர்களையோ அல்லது பொருளியல் பட்டம் பெற்றவர்களிடையேயிருந்து பொருளியலாளர்களையோ அவை எதிர்பார்க்கவில்லை. விஞ்ஞான போதனாபீடத்தில் பயிற்சி நெறியை முடிப்பவர்களைப் பற்றியும் அதைக் குறிப்பிடலாம். புதிதாக வேலைக்குச் சேர்ந்த அனுபவமில்லாதவர்களிடம் அவர்கள் எதிர்பார்ப்பது, உடனடியாகக் கிரியாம்சையில் பயன்படுத்தத்தக்க தொழில்ஞானத்தையல்ல; ஆனால், முகாமையாளர்கள் தாங்கள் விரும்பும் எவ்வகையான வேலைகளுக்கும் உபயோகிக்கத்தக்க தளரா ஊக்கங் கொண்ட புத்துணர்ச்சியும் படிந்து நடக்கும் இயல்புங் கொண்டவர்களையே யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

மக்கள் வங்கி வெளியீடு

விலை ரூ. 2/25

பொருளியல் நோக்கில் பிரசுரிக்கப்படுபவற்றைப் பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org